போர்க்களப் புயல்
நெப்போலியன்
தொடர்
இந்த இதழில் ஆரம்பம்



சேகுவேரா
பெனியனும்
பல்லு பிடுங்குதலும்




ஒக்டோபர் 16- ஒக்டோபர் 22, 2011 October 16 - October 22, 2011 பக்கங்கள் -28 25.00



REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்

இந்த இதழுடன்
இலவச இணைப்பாக
50 ரூபா
பெறுமதியான
ஒரு சஞ்சிகை !

# பதவி மோகத்தின் துப்பாக்கி மொழி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேகுவேரா பெனியனும்




சொந்த நாட்டில் நாடமைக்க முடியாத விடுதலை பேசும் இனங்கள், நாடு கடந்த அரசு அமைப்பதற்காகப் போராடி வருகின்றன. தமிழீழத்திற்கும் இதே கதிதான். ஆயுதப் போராட்டம் தளைத்திருந்தபோது கண்டுகொள்ளப்படாத வெளியுறவும், விடுதலைப் போராட்டம் நடத்தும் இனங்களுடனான தொடர்பும் இப்போது தான் கண்டுகொள்ளப்பட்டிருக்கின்றன. உருத்திரகுமார் தென்சூடானுக்கு இராஜதந்திரப் பயணங்களை மேற்கொள்வதோடு, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி வரும் கியூபா, வெனிசூலா போன்ற நாடுகளோடு உறவுகளைப் பேணவும் முயற்சிக்கிறார். இது மிகத் தாமதமான ஒன்று.

இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த இயக்கங்கள் தம் தொடக்க காலப் பாடங்களை சேகுவேராவிடம் இருந்தும், பிடல் கஸ்ரோவிடமும் இருந்தும் தான் கற்றுக்கொண்டிருந்தன. ஆனால் காலம் போகப் போக இனப் பண்பாட்டின் அடிப்டையிலான விடுதலைச் சுற்றறிக்கை செல்லுபடியானதாக மாறியது. 2009 வரைக்கும் பிடல் கஸ்ரோவும், சாவோசும் இனந்தெரியாதவர்களாக இருந்தனர். விடுதலை கேட்டுப் போராடும் இயக்கங்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தொடர்பு அரிதாகவே காணப்பட்டது. எப்போதாவது ஆதரவுகேட்டு எழுதப்படும் கடிதத்தோடு அந்தத் தொடர்பு நிறுத்திக்கொள்ளப்பட்டது. சோமாலிய கொள்ளைக் கூட்டங்களும், கடல்வழிப் பறிப்பாளர்களுமே நமது போராட்டத்தை நிமிர்த்தும் சக்திகளாக நம்பப்பட்டு வந்தனர். இதனால் கஸ்ரோவுக்கும், சாவோசுக்கும் தமிழீழத்தையும் அதன் கண்ணீரையும் கண்டுகொள்ள முடியாமல் போனது. அவர்களிடமிருந்து போராட்டப் பரிமாறல்களை நிகழ்த்த முடியாத நாம் கற்பனைக்கெட்டாத திட்டங்களில் மட்டும் கரிசனையாய் இருந்திருக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்திற்கு யாரென்றாலும் சரி, சமாளித்து ஒத்துபோகும். இரு துருவங்களான அமெரிக்காவையும் சீனாவையும் சமாளித்து இரண்டையும் விட்டுத் தள்ளிநிற்கும் லத்தின் அமெரிக்க நாடுகளுடனான உறவையும் சம நிலையில் பேணும் இராஜ தந்திரம் அதற்கு இயல்பாய் வாய்க்கப்பட்டிருக்கிறது. சேகுவேரா சாயலில் வந்த ஜே.வி.பியை முடக்கவும், அவரின் வழியில் வந்த கஸ்ரோவுடன் கைகுலுக்கிக் கொள்ளவும், தெற்கு அரசால் மட்டும் முடிகிறது. தமது உடை தொடக்கம் உணவு வரை தம் சொந்த உற்பத்திகளைப் பாவிப்பதாக காட்டிக் கொள்ளும் இலங்கை ஆட்சியாளர்கள் எப்போதும் தாம் அமெரிக்காவிற்கு எதிரானவர்கள் என்பது மாதிரியான புலக்காட்சியை லத்தின் அமெரிக்க நாடுகள் மத்தியில் உருவாக்கி வைத்திருக்கின்றனர். முதலாளித்துவ நாடுகளிடம் தமது முதலாளி முகத்தைத் தாராளமாகத் திரை திறந்து விடுகின்றனர். இந்த நிலைப்பாடு இரு அணி நாடுகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள வழி சமைக்கிறது. 2009 ஆம் ஆண்டில் கூட இலங்கைக்கு எதிராக முதலாளித்துவ நாடுகள் கொண்டு வந்த மனித உரிமை மீறப்பட்டமைக்கான விசாரணையை லத்தின் அமெரிக்க நாடுகள் தான் தடுத்தன. இம்முறை ஐநாவின் மனித உரிமை கூட்டத் தொடரிலும் இதே நிலைப்பாட்டில் தான் லத்தின் அமெரிக்க நாடுகள் இருந்தன.

உண்மையில் போராடும் இனங்களுக்கு ஆதரவு சேர்க்க வேண்டிய இந்நாடுகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு அளித்தமை நமது போராட்டம் இன்னும் வெளிச்சத்துக்கு வராத நிலையையே காட்டுகின்றது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடும் ஒரே தலைவன் எனப் போற்றப்படும் பிடல் கஸ்ரோ பற்றிய கேள்விகள் தாராளமாய் எழுந்து வருகின்றன. ஆட்சிக்கு வந்து 50 வருடங்களைக் கடந்து தள்ளாடும் போதும் கூட அவரால் கதிரைச் சுகத்தை விட்டுக்கொடுக்க முடியவில்லை. தான் பதவி விலகியதும் தனது தம்பியான றோல் கஸ்ரோ தான் பதவியில் அமர வேண்டும் என்பதிலும் விடாபிடியாய் இருக்கிறார். அண்மையில் இணையத்தளமொன்றில் படித்த தகவல் சுவாரசியமாய் இருந்தது. இதுவரை உலகத் தில் அதிகமான பெண்களோடு உடலுறவை வைத்துக்கொண்டவர் பிடல் கஸ்ரோ தானாம். இவர்தான் நமது விடுதலைப் போராட்டத்துக்கும் உதாரண புருஷராய் இருந்தவர்!

**பின்வாங்கு ஞாபகம்: 1**

நம் முதலாவது சுற்றுலா. பாடசாலை வாழ்க்கையின் கடைசி நாட்களில் இடம் பெற்றது. யாருக்கும் சொல்லாமல் சில நண்பர்களோடு நாடு பார்க்கப் புறப்பட்டிருந்தோம். வன்னியில் அப்போதிருந்த முரட்டுச் சிந்தனையாளர் வட்டம் என்று சுற்றுலாக் குழுவினரைக் குறிப்பிடலாம். (இயக்கம் செய்யும் அநீதிகளுக்கு எதிராகக் கதைப் போர் சங்கம்). எங்களால் நம்மைச்சுற்றி இறுக்கியிருந்த அதிகாரத் திற்கு எதிராகக் கலகக் குரலை எழுப்ப முடியாவிட்டாலும், பாடசாலையின் பின் வாங்கு மேசையில் படுத்துக் கிடந்து முணுமுணுக்கவாவது முடிந்திருந்தது. வன்னியை ஆட்சி செய்த இயக்கத்திற்கு எதிரானவர்களாக நாம் இல்லாவிட்டாலும், அவர்களிடம் ஆரோக்கியமான மக்கள் நலன்சார்ந்த விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கெஞ்சியிருக்கிறோம். அந்த கெஞ்சுதல்கள் அடிநிலைப் போராளிகளுக்கு பிடித்திருந்தது. அதனால் நாம் பொறுப்பாளர்களை வெறுத்துப் போராளிகளை நேசித்தோம். அந்தப் போராளிகள் நாம் இயக்கத்தை மதிப்பதற்கான நியாயத்தைத் தரும் உதாரண புருஷர்கள் ஆனார்கள். அப்படியான ஒரு காலத்தில் தெற்கைப் பார்க்க கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டோம்.

அந்தப் பயணத்தில் எங்களுக்கு ஒரு வித்தியாசம் தேவைப்பட்டது. வன்னியில் இருந்து தெற்குக்குச் செல்லும் தமிழர்கள் தமது தனிப்பட்ட வாழ்வொழுக்கங்கள் ஊடாகத் தம்மை யாரென்றுக் காட்டிக்கொடுத்து விட்டாலும் நாம் அதிலும் இருந்து ஒரு வித்தியாசத்தை காட்ட முயற்சித்தோம். கிடைத்தது சேகுவேரா பெனி யன் ஐடியா. புறக்கோட்டையில் இருந்த பெரும்பாலான நடைபாதை புடவை வியாபாரிகளிடம் தேடுதலை நடத்தினோம். பொப்மார்லி கிடைத்தாரே தவிர, சேகு வேராவைக் காணவே இல்லை. எம்மைத் தொடர்ச்சியாக அவதானித்திருந்த இரா ணுவ புலனாய்வுத் துறைக்காரனின் விசாரணை மட்டும் உடனே கிடைத்தது. தனக்குத் தெரிந்த தமிழில் எம்மை யாரென்றும், புலிகளுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு என்றும், எங்களை விசாரிக்க அழைத்துச் செல்லப் போவதாகவும் மிரட்டினார். நாம் ஜே.வி.பி அல்லது எல்.ரீ.ரீ.ஈ என்ற நிலைப்பாடிலிருந்து அவர்கள் மீளவே இல்லை. சிங்களமும் தெரியாது, அரைகுறை ஆங்கிலத்தோடு அவருக்கு எதிராகப் போராட முடியாமல் போனது. எமக்கு பூசா உறுதியாகிவிட்டதை எம்மைச் சுற்றி வளைத்த பொலிசாரின் உசார் நிலைகளும் உறுதிப்படுத்தின. நல்ல காலம் எம்மை அறிந்து வைத்திருந்து ஒரு வாத்தியார் கடவுள் போல வந்து எங்களைக் காப்பாற்றி விட்டார். அன்றிலிருந்து சேகுவேரா துணியை குப்பையில் கண்டால் கூட புறக் கோட்டைதான் நினைவுக்கு வரும். துணிக்கே இந்த நிலை என்றால்...?

■ ஜெரா

**பின்வாங்கு ஞாபகம்: 2**

வன்னியில் அப்போது பரவலாக பல்லுப் பிடுங்கும் நிகழ்வு இடம்பெற்று வந்தது. இதனை விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகள் முன்நின்று நடத்தினர். பல்லுப் பிடுங்குபவர்கள் எமது பாடசாலைக்கு வரும்போது ஏன் என்று தீரவிசாரிப்போம் என்ற முடிவோடு பின்வாங்கார் காத்திருந்தோம். அவர்களும் வந்தனர். எல்லா மாணவர்களும் நீட்டி நிமிர்ந்து படுத்து தமது பற்களைக் காட்டிக் கொண்டிருந்தனர். நானும் அழைக்கப்பட்டேன். ஈழ மதி என்ற அந்தப் போராளி மருத்துவரிடம் என் முதல் கேள்வி, 'மலரப்போகும் தமிழீழத்தில் எல்லா மக்களும் உயர்ந்த சுகாதாரத்தோடு இருக்கவேணுமென்று தேசியத் தலைவர் திட்டங்களை முன்னெடுக்கிறார். எங்களைப் போல போராடி வென்ற கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ரோவும் இதைத்தான் செய்தவர். அந்த நாட் டில 300 பேருக்கு ஒரு மருத்துவர். என்ற வீதத்தைக் கொண்டு வந்தார். இப்ப அந்த மக்கள் சுதந்திரமா வாழுகினம்.' பதிலோடு எனது ஒரு பல் இழுத்துப் பிடுங்கப்பட்டது. தொடர்ந்து வந்த காலத்தில் இந்த மருத்துவ திட்டங்களுக்கெல்லாம் என்ன ஆனதோ...?



# பல்லு பிடுங்குதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை நிலையானவைகளாக மாற்றி படையினரின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் முழு ஈடுபாட்டுடன் படையினர் செயற்படுவார்கள். அதே போன்று இராணுவத்தை பல துறைகளிலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்."

இராணுவ தளபதி. ஜகத் ஜயசூரிய

# ஆமிக்காரன்களுக்கும் சொந்தம்

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுத ரீதியில் முன்னெடுத்த தமிழீழ விடுதலைப்புலிகளும் வன்னியைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். அவர்களுக்கும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இருப்பிற்கும் இடங்கள் தேவைப்பட்டன. ஆனால் அப்போது இராணுவத்தினர் கட்டியெழுப்பும் பாதுகாப்பரண்களைப்போலவோ அல்லது இராணுவ முகாம்களைப் போலவோ அவர்கள் அமைக்கவில்லை. மிக முக்கிய படையியற் தளங்கள் மக்கள் நடமாட்டம் அற்ற காடுகளுக்குள் இருந்தன. மக்களோடு இணைந்த நிர்வாகக் கட்டமைப்புக்கள் தகரங்களால், பனையோலைகளால் அடைக்கப்பட்ட வேலிகளுக்குள் சிறு வீடுகளில் தற்காலிகமாக இயங்கின. அவை வெளிநாடு சென்றோரின் வளவுகளாகவும், உரிமைகோரப்படாத தனியார் காணிகளாகவுமே இருந்தன. சில இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் காணிகளை கையகப்படுத்தி வைத்திருந்தனர். பாதுகாப்பிற்காகவும், பிற காரணங்களுக்காகவும் அவர்கள் எந்தக் கட்டடங்களையும் நிரந்தரப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. சமாதானக் காலப்பகுதியில் தளபதிகளும், பொறுப்பாளர்களும் வெளிநாட்டுக் காசுகளில் கட்டிக் கொண்ட மாடி மனைகளும் வன்னி மக்களின் காணிகளை பறித்துக் கட்டப்பட்டவையல்ல. விலைக்கு வாங்கப்பட்டோ, ஒப்பந்த அடிப்படையிலோ, காடுகளை அழித்தோ அவர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டன. இலங்கையில் தமிழ் மக்களுக்கு தனியரசு அமைக்கவேண்டும் என்ற நோக்கோடு போராடிய விடுதலைப்புலிகளே நிரந்தரமான எந்தக் இராணுவக் குடியிருப்புக்களையும் மக்கள் வாழிடங்களில் அமைக்கவில்லை.



ஆக்கிரமிக்கப்பட்ட சமூகமொன்றை கவனிக்க வேண்டிய விதத்தில் இலங்கையரசும் அதன் இராணுவமும் கவனித்து வருகின்றன. வன்னித் தமிழர்களின் அனைத்து தனித்துவ அடையாளங்களும் தவிர்க்க முடியாத சிதைப்புக்குள்ளாக்கப்படுகின்றன. அவர்தம் வாழ்வுப் புலங்களையும், பண்பாட்டையும் போரெனுந்தீயில் நிர்மூலமாக்கி புதிய நிர்வாக முறைகளை அறிமுகப்படுத்தும் இராணுவம் வன்னியைப் புதிய கோணத்தில் தரிசிக்க விரும்புகின்றது. அதற்காகக் காண்பிய வழியிலான மாற்றமொன்றை நிகழ்த்தக் காரியங்கள் ஆற்றப்படுகின்றன. பிரமாண்ட காட்சிகளின் ஊடாக உளவியல் மாற்றத்தை முதலில் நிகழ்த்துவதற்கு அத்திவாரமிடப்படுகின்றது. அதற்காகப் பார்க்குமிடங்களில் எல்லாம் இராணுவக்கட்டடங்களும், இராணுவ அழகியலைப் பலப்படுத்தும் காட்சிக் கூடங்களும் பெருக்கப்படுகின்றன.

**இராணுவ வீதிகள்.**

வன்னியில் இதற்கு முன் செம்மண் வீதிகளும், காட்டு வழிப் பாதைகளும் தான் இருந்தன. அதற்குரிய பெயர்களும் தனித்துவமானவைகள். ஏதாவது கிராமிய கலைஞர்களின் பெயர்கள் அந்த வீதிக்கு இடப்பட்டிருக்கும். பின் வந்த காலங்களில் மாவீரர்களின் பெயர்களால் அவை மாற்றம் பெற்றன. அதுவும் ஒரு தனித்துவத் தன்மையுடையதாகவே வன்னி மக்களால் பார்க்கப்பட்டது. போரில் தனது பிள்ளையை இழந்த ஒவ்வொரு தாயும் தன் தெருவைக் கடக்கும் போது பெருமைப்பட்டுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை இந்த வீதிகள் வழங்கின. ஆனால் இப் போது அப்படி நினைவுபடுத்திக் கொள்ள எதுவுமில்லை. செம்மண் கறுப்பு நிறத்துக்கு மாறிவிட்டது. அபிவிருத்தி என்ற பதத்தினால் இது அலங்கரிக்கப்பட்டாலும் இந்த வீதியமைப்புக்கள் எல்லாம் எத்தனை காலத்துக்கு நின்று பிடிக்குமோ தெரியாது? இதனையும் இராணுவத்தினர் விட்டுவைக்கவில்லை. வன்னியில் புதிதாக அமைக்கும் வீதிகளுக்கு சிங்களத்தில் பெயர் சூட்டல்கள். யாருக்கும் இப் போது அது புரியவில்லை. தமது பழைய நினைவுகளுடனேயே வீதியை அழைக்கின்றனர். அடையாளப்படுத்துகின்றனர். மாவீரர் துயிலுமில்லத்தடி இறக்கம் இப்போதும் வன்னி மக்களின் பிரயாணங்களில் பாவிக்கப்படுச் சொல்லாக இருந்து வருகின்றது. அடுத்த தலைமுறையும் இதனையே பின்பற்றுமா? இப் போது வன்னியில் பாடசாலைச் சிறுவர்கள் நாளாந்தம் பாவிக்கும் சொற்களில் சிங்களச் சொற்கள் விரவி வருவதை அவதானிக்கலாம். இதுவே காலப் போக்கில் வன்னி வீதிகளைச் சிங்களப் பெயர்களாக அடையாளப்படுத்திக் கொள்ள வழியமைக்கும்.

**இராணுவ கட்டடங்கள்.**

ஏ9 வீதியின் முன்பொரு காலத்தில் பனையோலைக் குடிசை வீடுகளையும் ஆங்காங்கே பெட்டிக் கடைகளையும் தான் காண முடியும். இப்போது? அந்த இடங்களையெல்லாம் இராணுவ நிலைகள் கைப்பற்றிக் கொண்டன. இந்தப் பெருந்தெருவின் இரு மருங்கையும் முட்டி நிற்கும் பச்சை நிறக்கட்டடங்கள் முழுக்க முழுக்க இராணுவத்தினரின் நிரந்தர இருப்பை உறுதி செய்வதற்காக அமைக்கப்பட்டு வருகின்றன. இலங்கை இராணுவத்தினருக்கேயுரிய தனித்துவ கலைப்பாணியில் இவை உருக் கொள்கின்றன. மிகப் பரந்தளவிலான நிலத்தை கையகப் படுத்தி அமைக்கப்படும் இந்த கட்டடத் தொகுதிகள் ஒரு காலத்திலும் பொது மக்கள் பாவிக்க முடியாதளவிற்கு இராணுவச் சாயம் பூசி மெழுகப்படு கின்றன. அதற்குள் இராணுவத்தினருக்கான விளையாட்டரங்குகள், பொழுதுபோக்கு மையங்கள், தோட்டங்கள், பயிற்சிக் கூடங்கள் தங்குமிடங்கள் என விரியும் பயன்பாட்டுப் பகுதிகள் பெருமளவிலான நிலத்தை காவுகொள்கின்றது. வன்னிச் சனங்களின் காணிகள் தான் இவற்றையெல்லாம் தாங்கிக் கொள்கின்றது. இராணுவக் கட்டடம் அமையும் அந்தக் காணியோடு மட்டும் நில ஆக்கிரமிப்பு நின்று விடுவதில்லை. பக்கத்து காணிகளும் இந்த இராணுவக்கட்டட கட்டமைப்புக்குள் வந்து விடுகிறது. அவர்களின் கடைகளோ அல்லது கிணறுகளோ அந்தப் பகுதிக்குள் இருக்கின்றது. எனவே இந்த இடங்களில் குடியேற மக்கள் அஞ்சுகின்றனர். இராணுவ குடியிருப்பைச் சுற்றி சனங்களற்ற காணி வெளிகள் நீள்கின்றன. இப்படித்தான் ஏ9 பெருந்தெருவை அண்மித்த தமிழர் நிலம் இராணுவமயமாகின்றது.

**இராணுவ நினைவுத் தூபிகள்.**

எந்த நாட்டு இராணுவமும் போர்க்களத்தில் மாண்ட தன் வீரர்களையும், தான் பெற்ற வெற்றியையும் நினைவு கூறுவதற்காக நினைவிடங்களை அமைப்பது வழமையானதொன்று. போர்க்கள நினைவொன்றை பொது மக்களுக்கு வழங்குவதோடு அதன் வரலாற்றையும் காட்சிப்படுத்தி வைக்க முடியும் என்பது கட்டடவியலாளர்கள் எண்ணம். வன்னியில் விடுதலைப் புலிகளும் இதனை தீவிரமாக மேற்கொண்டனர். ஆனால் இப்போது ஒன்றும் இல்லை. வீர சாகச நினைவுத் தூபிகளுக்கு நடப்பது இது தான். அதிகாரத்தை கையிலெடுப்பவர் எதிரியின் நினைவுகளை அழித்து தன் பக்கம் சார்ந்த நினைவுகளை கட்டமைப்பது ஒன்றும் வரலாற்றுக்குப் புதிதான விடயமல்ல. ஆனால் இம்முறை வன்னியில் இராணுவம் அமைக்கும் நினைவுத் தூபிகள் இவ்வாறான எண்ணங்கள் ஏதுமின்றி நிலை நிறுத்தப்படுகின்றன. ஆனையிறவிலும், புதுக்குடியிருப்பிலும் அமைக்கப்பட்டிருக்கும் தூபிகள் பரந்தளவிலான நிலத்தைத் தன்னுள் அடக்கியிருக்கிறது. ஆனையிறவு தரிசு நிலமாயினும் புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடம் அந்த ஊர் மக்களின் கடைக் காணிகளின் மத்தியில் நிறுவப்பட்டிருக்கின்றது. அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தின் பெருமளவிலான பகுதி நிலங்கள் மக்கள் நடமாட்டமற்ற, இராணுவத்திற்கு மட்டுமே சொந்தமான காணிகளைத் தன்னுள் வைத்திருக்கின்றது. அங்கும் நினைவுத் தூபிகளுக்குப் பஞ்சமில்லை.

**இராணுவ பௌத்தம்.**

பிரமாண்டமான கட்டடத் தொகுதிகளையும், கௌதம புத்தரின் சிலைகளையும் வழிபடுபவர்கள் பௌத்தர்கள். சிங்கள மக்களும் இதே மாதிரித்தான். அவர்களின் பிள்ளைகளான இராணுவத்தினரும் தமது மதம் சார்ந்த கட்டடங்களை அமைக்கத் தவறவில்லை. ஏ9 சாலையை அண்டிய கனகராயன் குளத்திலும் கிளிநொச்சியிலும் பரந்த நிலத்தை ஆக்கிரமித்து விகாரைகளை அமைத்து வருகின்றனர். இங்கு அமைக்கப்பட்டிருக்கும் விகாரைகள் மட்டுமே வெளியில் தெரிபவைகள். ஒவ்வொரு இராணுவ முகாம்களுக்குள்ளும் புத்தர்களும், சிறு விகாரைகளும் மௌனமாக முளைத்து வருகின்றன. இவைகள் குறிப்பிட்டதொரு மதம் சார்ந்த கட்டடம் ஆயினும் அது அமைக்கப்பட்டிருக்கும் நிலம் தமிழர்களுடையது தான். ஒரு வகையில் பண்பாட்டுப் பரவலுக்கான அர்த்தமாகவும் இது அமைந்து விடுகின்றது. ★

**– தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கா விஜயம் மேற்கொண்டுள்ளதாகவும் அங்கு அவர்கள் பல்வேறு பிரமுகர்களைச் சந்தித்து விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கலந்துரையாடல்கள், முக்கியமாக இணங்கப்பட்ட விடயங்கள், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், உறுதியளிக்கப்பட்டு நடைமுறைக்கு வராத விடயங்கள் ஆகியனவும் பேச்சுவார்த்தை என காலம் கடத்தப்படுகின்ற சமகாலத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் இதன்போது கூட்டமைப்பினரால் விரிவாக எடுத்துரைக்கப்படலாம்.

பேச்சுவார்த்தைகளில் எவ்விதமான முன்னேற்றமும் காணப்படாத நிலையில் மேலும் காலத்தை விரயமாக்க கூட்டமைப்பு விரும்பவில்லை என்பதோடு, கூட்டமைப்பினரைத் தெரிவு செய்து அவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ள தமிழ் மக்களும் இவ்வாறான இழுத்தடிக்கின்ற செயற்பாடுகளை சிறிதும் விரும்பவில்லை.

கூட்டமைப்பினர் சில முடிவுகளை எடுக்க முற்படுகின்ற வேளைகளிலெல்லாம் அமெரிக்காவும், கூடவே இந்தியாவும் தொடர்ந்து அரசாங்கத்துடன் பேசுமாறு வற்புறுத்தி வருகின்றன. எந்த பயனுமற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரயோசனம் எதுவும் இல்லாத நிலையில் சில கோரிக்கைகளை முன்வைத்து விட்டு கூட்டமைப்பினர் வெளியேறி, பின்னர் பேச்சுக்களைத் தொடர வேண்டி வந்ததற்கும் இந்த வற்புறுத்தலே காரணம்.


# சுடர் ஒளி

16, ஒக்ரோபர் - 22 ஒக்ரோபர், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115798005
பக்ஸ்: 0115517944-5
E-mail: editorial@sudaroli.com


## தேவை தீவிரமான இராஜதந்திர வழிமுறை

தமிழ் அரசியலில் பேரம் பேசுகின்ற சக்தி இழக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் புத்திபூர்வமான இராஜதந்திர நடவடிக்கைகளே மிகவும் அவசியமானது. அதனை நோக்கி கூட்டமைப்பினர் நகர்ந்து செல்ல வேண்டும். வேறு வழிகள் எவையும் இல்லை.

சில நாட்களுக்கு முன்னர் இலங்கை வந்து வடபகுதிக்கும் விஜயம் செய்த இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலரிடமும் கூட்டமைப்பினர் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி கலந்துரையாடியுள்ளனர். அடுத்ததாக அமெரிக்கா சென்றும் தற்போதைய நிலைமைகள் குறித்துப் பேசவுள்ளனர்.

தீர்வு குறித்து எவ்விதமான இணக்கப்பாடும் மேற்கொள்ளப்படாத நிலையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில்லை என கூட்டமைப்பு இப்போது அழுத்தமாகத் தெரிவித்து விட்டது.

இதுவரை கூட்டமைப்புடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் மூலமாக இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதனை தெரிவுக்குழுவில் பரிசீலனைக்கு விடுப்பதனால் அக்கட்டத்தில் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து சாதகமான ஒரு முடிவிற்கு வரலாம். ஆனால், எந்தவொரு தீர்மானமும் இல்லாமல் இன்னொரு பேச்சுவார்த்தைக்குள் செல்வது வெறும் கால விரயமாகவே அமையும். இது விடயம் குறித்தெல்லாம் இனப்பிரச்சினையில் அக்கறை காட்டும் சர்வதேச சமூகத்திற்கு விளக்க வேண்டியது கூட்டமைப்பின் கடமையாகும்.

இந்தியாவோ, அமெரிக்கா உட்பட மேற்குலகமோ தமது சுயநலன்கள் சார்ந்தே தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைக் கையாளுகின்றன என்பது புதிய விடயமல்ல. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில், நாம் எவ்வாறு எமது நலன் சார்ந்து சர்வதேசத்தைக் கையாள்வது என்பது குறித்து ஆராய்ந்து அவ்வழியில் நகரவேண்டும்.

தொடர்ந்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்துமாறு சர்வதேச சமூகம் வற்புறுத்துமானால் அதனை மேற்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால், பேச்சுக்களினூடாக எவ்வித முடிவுகளுக்கும் வராமல் அரசாங்கம் தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்ற நிலையை அடிக்கடி சர்வதேசத்திற்கு விளக்குவதன் மூலம் அரசாங்கத்தின் உண்மைத் தோற்றத்தை தோலுரித்துக்காட்ட முடியும். கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் இவ்வழியிலான தீர்வு நோக்கிய தொடக்கமாக அமையட்டும்!

# முதியோர் இல்லங்கள் தேவைதானா?

■ எஸ்.வி.மேனகா



தரணி எங்கும் எம்மைத் தலைநிமிரச் செய்த சிற்பிகள் நம் பெற்றோர்கள். அவர்கள் முதியவர்களாகிவிட்டால் பெற்றோர் என்ற ஸ்தானம் மாறிவிடுமா? நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு இவ்வுயர்ந்த நல்நிலையில் வாழ்கின்றோம் என்பதனை வெகு இலகுவிலேயே மறந்து விடுகின்றோம்.

பெற்றோர்கள் தமது கஸ்ரத்தின் மத்தியில் எம்மைப் பெற்றெடுத்து வளர்க்கிறார்கள். பெற்றோர் எம்மை வளர்த்தெடுக்க தம்மை மறந்து தமக்கேற்படும் வேதனைகளைச் சகித்து உண்ணாது, உறங்காது எமைக் காக்க அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் அளவிடற்கரியவையாகும்.

பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து அவர்களின் கல்விக்காகப் பாடுபட்டு அவர்களைப் பெரியவர்கள் ஆக்கி விடுகின்றனர். இதனைச் சொல்வது சுலபம் ஆனால் அதன் சுமை எவ்வளவு பெரியது என்பதைப் பெற்றோர் மாத்திரமே அறிவர்.

பிள்ளைகள் வளர்ந்துவிட்டால் தாமுண்டு தம் கல்வியுண்டு என்றும், வேலை ஒன்று கிடைத்தவுடன் திருமணம் என்றும், சிலர் வெளிநாடுகள் என்றும் பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்லும் பட்டியல் நீளத்தான் செய்கின்றது.

பெற்றோர் பலர் தமது வீடு, நகைகளை விற்றோ காணியை ஈடுவைத்தோ பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறு தொகை பணத்தை அனுப்பிவிட்டு மிக விரைவிலேயே பெற்றோரை மறக்கும் பிள்ளைகளும் இந்த உலகத்தில் இருக்கத்தான் செய்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் ஒப்பீட்டளவில் எங்கள் நாடான இலங்கை முதியோர்களை அதிகம் கொண்ட நாடாக விளங்குகின்றது. 2006ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் இலங்கையில் 22இலட்சம் முதியோர்கள் இருப்பதாகவும் இவ் ஆண்டு 60வயதிற்கும் மேற்பட்டோர் தொகை 27இலட்சமாகவும் உள்ளது இனிவரும் காலங்களில் 50இலட்சமாகவும் இருக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதியோர்கள் இருக்கலாமே தவிர முதியோர் இல்லங்கள் இருப்பதை நாம் ஆதரிக்க முடியாது. தமது பிள்ளைகளையே நம்பி இருக்கும் முதியோர் பலர் இத்தகைய முதியோர் இல்லங்களுக்குள் தள்ளப்படுகின்றனர். பலர் பிள்ளைகளினால் கைவிடப்பட்ட நிலையில் அநாதரவாய் உள்ளனர். இலங்கையில் 70சதவீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து வருவதாகப் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியதனை அடுத்து ஆண்டு தோறும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. 60வயதிற்கும் மேற்பட்டவர்களை முதியோர்கள் என கூறிக் கொண்டாலும் ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து பெரியவராக வரும் ஒவ்வொரு வயதிலும் முதுமையின் படிகளில் படிப்படியாக யாவருமே முன்னேறிச்செல்வது கண்கூடு. பிறப்பு, முதுமை, இறப்பு என்பன மனிதன் சந்திக்கின்ற தவிர்க்க முடியாத படிகளாகும்.

ஒவ்வொரு வீட்டிலும் வயதிற்கு மூத்தவர் இருப்பது உண்மையில் சிறந்த ஒன்று தான். அப்படியான பாக்கிய சாலிகள் பெருமையடைந்து கொள்ளுங்கள். நவீன மயப்படுத்தப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்பத்தினால் இன்றைய இளையோரது எண்ணங்களோ பறவையை விட உயரமாகப்பறக்கின்றன. அதனால் இளைஞர்கள் உலக அனுபவம் இல்லாமை யால் தலை கால் புரியாத நிலையில் நடக்கின்றனர். இந்தக் காலத்தில் எமது சமுதாயம் சிறப்புறப் பாதுகாக்கவும் மாற்றத்திற்கும் கட்டாயம் முதியோர்கள் அவசியமானவர்கள்.

எம்மை வளர்த்து ஆளாக்கி எமது வாழ்வுக்காகப் பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களை என்றும் மறத்தல் இயலாது. ஆனால் இன்றைய எமது சந்ததியினருக்கு அன்பை விடப் பணமே முக்கியமானதாகப் போய்விட்டது. அதனடிப்படையிலேயே வாழ்க்கை முறையும் அதற்கான பட்டியலும் நீண்டு செல்கின்றது. இந்நிலையில் எமது பெற்றோர்களை நாம் மறந்து விடுகின்றோம். அவர்களை அன்பாகப் பராமரிப்பதற்கு நேரமும் எமக்குக் கிடைக்கவில்லை. முதியோர் இல்லங்களிலேயே பெற்றோரைச் சேர்ப்போரின் தொகை அதிகரித்துள்ளது. முதியோர் இல்லங்களில் பெற்றோரைச் சேர்ப்பதற்கு எம்மவர் பல காரணங்களைக் கூறுகிறார்கள்.

இன்று சிறுவர்களாக இருப்பவர்கள் ஆண்டு ஒவ்வொன்று முடியும்போதும் பெரியவர்களாகி நாளைய பெற்றோர் ஆகின்றனர். அதுவரைக்கும் தம் பெற்றோரின் அருமையை எண்ணிப்பார்ப்பதில்லை. பெற்றோர்களது நினைவுகளெல்லாம் தம் பிள்ளைகளையே எண்ணி நாட்களைக் கடத்துவது தான். பெற்றோரை முதியோர் இல்லங்களில் இறுதிக் காலங்களில் சேர்ப்பதைப் பிள்ளைகளின் தவறு என்றும் கூறிவிட முடியாது. ஆனால் கூடியவரை அவற்றைத் தவிர்ப்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஒரு சில பெற்றோர்கள் தமது வைராக்கிய நெஞ்சுடன் தமது பிள்ளைகளுடன் அவர்களுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்றெண்ணி தாமாகவே முதியோர் பராமரிப்பு நிலையங்களில் போய்ச் சேர்ந்து விடுகின்றனர்.

அதுபோல வெளிநாடுகளுக்குச் சென்றோர் தமது பெற்றோர்களின் முதுமையையும் தனிமையையும் அறிந்து அவர்களை வாருங்கள் எங்களோடு அதற்கான செயற்பாடுகளைச் செய்கின்றோம் என்றாலும் "எங்கட வீட்டையும் நாட்டையும் விட்டிட்டு வரமாட்டம், இங்க தான் சாவம்" என்று பிடிவாதத்தோடு இருக்கின்றார்கள்.

இவ்வாறு தனித்திருக்கும் பெற்றோர்க்கு உதவிகள் கிடைப்பது அரிதாகும். வயது முதிர்ந்த நேரத்தில் உதவுவதற்கு உறவினர்களும் பின்னிற்பார்கள். இதனால் முதியோர் வீதிக்கு வர வேண்டிய நிலையும், முதியோர் இல்லங்களில் உறவினர்களால் அவர்கள் சேர்க்கப்படும் செயல்களும் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே வருகின்றன.

இத்தகைய செயல்களைத் தடுக்கவும் பெற்றோரின் பெருமைகளைப் பேணி நடக்கவும் ஒவ்வொரு சந்ததியினரும் 'முதியோர்' என்ற சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். முதியோர்கள் நல்ல கவனிப்புடன் தமது பிள்ளைகள், பேரக்குழந்தைகள், சுற்றம், வீடு, சூழல் என இறக்கும் வரை சந்தோசமாக மன நிறைவுடன் பேணப் பட்டால் அவர்கள் பிள்ளைகளுடனும் அவர் தம் குடும்பத்தினருடனும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். முதியோர் இல்லங்கள் இருப்பதற்கான தேவைகள் ஏற்படமாட்டாது. முதியோர் இல்லங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி + உதை = பாராட்டு

"பூதங்களுக்கு பயம் வந்தது. பீடரியில் கால்பட ஓடிச்சென்ற பூதங்கள் அருகில் இருந்த இராணுவமுகாமில் அடைக்கலமாயின. அதன் பின்னர் படைத் தரப்பும், பொலிஸாரும் கிறீஸ் பூதங்களை விரட்டிய மக்களை நன்றாகக் கவனித்தனர். வீடுகளுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கூட வெளியே இழுத்து வந்து அவர்களின் மேனிகளில் பூட்ஸ் கால்களின் திருவடி தீட்சை வழங்கப்பட்டது. சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள் என்கிற வேறுபாடுகளுக்கப்பால் - சமத்துவமாக - எல்லோருக்கும் வேண்டியளவு அடிகளும் உதைகளும் அள்ளியள்ளிக் கொடுக்கப்பட்டன."

ஆசியாவின் அதிசயம் என இலங்கைக்கு அடைமொழி கொடுத்த புண்ணியவாளரின் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். இந்து சமுத்திரத்தின் முத்து என்பதை விடவும் இந்தப் பெயர்தான் இலங்கைக்கும் அதன் நடைமுறைகளுக்கும் மிகப்பொருத்தமானதாக அமைந்திருக்கின்றது. மற்றைய நாடுகளை விடவும் இலங்கை எல்லா விடயங்களிலும் அதிசயமாகவே இருந்து வருகின்றது. அதிலும் புதிய - விநோதமான - சட்டங்களை உருவாக்கி எல்லோரது புருவங்களையும் உயரச் செய்வதில் இலங்கைக்கு நிகர் இலங்கைதான்; அடித்துக் கொள்ள வேறு நாடே கிடையாது. அதிலும் குற்றம் செய்தவனை தட்டிக் கொடுத்துவிட்டு, குற்றத்தைத் தடுக்க முனைந்தவர்களைத் தண்டிக்கும் முறைமை இதுவரை எங்கும் நடந்திராத அபூர்வம். வரிசையாக நடைபெறும் இத்தகைய அபூர்வங்களில் அண்மைய வெளியீடுதான் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் கிறீஸ்மனிதன் விவகாரத்தில் சிறப்பாகச் செயற்பட்ட யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவுக்கு பொலிஸ் தலைமையகம் வாரித்துள்ள பாராட்டுப் பத்திரம்.

மலையகப் பகுதிகள், கிழக்கு மாகாணம் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் சில மாதங்களுக்கு முன்னர் பிரபல்யமடைந்த கிறீஸ் பூதங்கள் மெல்ல மெல்ல தமது பிரதான இலக்கான யாழ்ப்பாணத்துக்குள் எல்லாக் கடவுளர்களினதும் கண்களையும் ஏய்த்துவிட்டு புகுந்து கொண்டன. இரவு - பகல் என்ற பேதமின்றி தமக்கு இடப்பட்ட வேலைகளை கிறீஸ்பூதங்கள் செவ்வனே செய்யத்தொடங்கின. பெண்களைக் குறிவைத்து தாக்குவது, இரவு வேளைகளில் அச்சத்தை உண்டுபண்ணும் வகையில் நடமாடித் திரிந்து அன்றைய தூக்கத்தைக் கலைப்பது, தம் முன்னால் எதிர்ப்பட்டவர்களைத் தாக்குவது, எல்லாக் காவலரண்களிலும் துப்பாக்கிகளை ஏந்தியிருக்கும் படையினரின் கண்களுக்கு முன்னால் தம்முடைய மாயாஜாலத்தால் வை-ஏஸ் வாகனங்களில் ஏறி தப்பித்திரிவது என்று கிறீஸ் பூதங்களின் அட்டகாசங்கள் பெருகிக் கொண்டே சென்றன. பாவம்! மக்களைக் காப்பாற்ற எந்தவொரு ராஜகுமாரனோ அல்லது தேவதூதர்களோ வரவேயில்லை. இப்படியான சூழலில் அச்சத்தோடு தகர்ந்து கொண்டிருந்த இரவொன்றில், நாவாந்துறையில் கிறீஸ்பூதங்களின் நடமாட்டத்தை மக்கள் உணர்ந்து கொண்டனர்.

மற்றைய இடங்களைப் போன்று இங்கும் தமது நடமாட்டத்தைக் கண்டவர்கள், மக்கள் பயத்தில் கால்கள் சிறுநீர் வழிந்தோட, வீடுகளுக்குள் ஓடிச் சென்று முடங்கிக் கொள்வார்கள் என்றே கிறீஸ் பூதங்கள் எண்ணியிருக்கவேண்டும். ஆனால் அவற்றின் எண்ணத்துக்கு எதிர்மாறாக ஒன்று திரண்ட மக்கள், கையில் கிடைத்தவற்றைப் பயன்படுத்தி கிறீஸ் பூதங்களை விரட்டிச் செல்லத் தொடங்கினர்.


பூதங்களுக்குப் பயம் வந்தது. பீடரியில் கால்பட ஓடிச்சென்ற பூதங்கள் அருகில் இருந்த இராணுவமுகாமில் அடைக்கலமாயின. அதன் பின்னர் படைத்தரப்பும், பொலிஸாரும் கிறீஸ் பூதங்களை விரட்டிய மக்களை நன்றாகக் கவனித்தனர். வீடுகளுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கூட வெளியே இழுத்து வந்து அவர்களின் மேனிகளில் பூட்ஸ் கால்களின் திருவடி தீட்சை வழங்கப்பட்டது. சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள் என்கிற வேறுபாடுகளுக்கப்பால் - சமத்துவமாக - எல்லோருக்கும் வேண்டியளவு அடிகளும் உதைகளும் அள்ளியள்ளிக் கொடுக்கப்பட்டன. ஒரே இரவில் 120 பேர் மீது இத்தகைய அடிதடிகள் மேற்கொள்ளப்பட்டன.

மிகமோசமான இந்த மனித உரிமை மீறலைச் சிறப்பாக வழிநடத்திய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கே, பொலிஸ்மா அதிபர் தனிப்பட அழைத்துப் பாராட்டும் தெரிவித்துள்ளார். சில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டில் சங்கானையில் தொடங்கிய வேட்டோசை எல்லாத் திசைகளிலும் பரவி பலரது உயிர்களைக் குடித்திருந்தது. பின்னர் அது மெல்ல அடங்க வெள்ளைவான்கள் ஆள்களைக் கடத்தி மிரட்டத் தொடங்கின. ஒருபடியாக அவற்றின் ஓசை குறையத் தொடங்கிய சமயத்தில் தொடர்கொள்ளைகள் குடாநாட்டையே உலுக்கி எடுத்தன. இவ்வாறான சம்பவங்களின் போதெல்லாம் பொலிஸார் தமிழ் சினிமாவில் வருவது போன்று, எல்லாம் நடந்து முடிந்த பின்னர் தான் அந்த இடங்களுக்கு வருவார்கள். வந்தவுடன் உடனேயே குற்றவாளிகளைத் தாம் கண்டுபிடித்து விடுவது போன்ற பாவனையுடன் விசாரணைகளில் இறங்குவர். அதன் பின்னர் ஆறிய கஞ்சி, பழங்கஞ்சியாகி விடும். மக்களும் நடந்ததை மறந்துவிடுவர். பொலிஸாரும் மறந்துவிடுவர். மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மக்களின் அச்சத்தை போக்கும் நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. ஒப்புக்குக் கூட ஒரு குற்றவாளியை அவர்களால் பிடிக்கமுடியவில்லை. எல்லாப் பழிகளையும் முன்னாள் போராளிகளின் தலையில் கட்டிவிட்டு தம் கடமை முடிந்தது போல பொலிஸார் ஒதுங்கிக் கொண்டனர். அதன் பின்னர் கிறீஸ் பூதப் பிரச்சினைகளில் மக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட மர்மமனிதர்களையும் மனநோயாளிகள் என்று சொல்லி அவர்களைத் தப்பவைக்கும் முயற்சியிலேயே படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டனர். அவர்களின் அட்டகாசத்தை இல்லாமலாக்க முயலவில்லை. இந்த லட்சணத்தில் தான் பொதுமக்கள் மீது மூர்க்கமான தாக்குதல் நடத்தக் காரணமாயிருந்த அதிகாரிக்கு பொலிஸ்மா அதிபர் பாராட்டு மழை பொழிந்திருக்கிறார்.

இத்தகைய பாராட்டுக்கள் மூலமாக ஏனைய அதிகாரிகளுக்கும் அரச படைகளுக்கும் ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தமிழர்களை எந்தளவு அதிகமாக வதைக்கிறீர்களோ அவர்களுக்குப் பாராட்டுகளும் பதவி உயர்வுகளும் கட்டாயம் கிடைக்கும் என்பதே அது.

இதனால் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற மிக இலகுவான வழியாக தமிழ்மக்களைத் தாக்குவது என்ற உபாயத்தை நாடும் நிலைக்கு பொலிஸாரும் படையினரும் பேராகக்கூடும். இதன் மூலம் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளும், வன்முறைகளும் பெருகக்கூடிய நிலையே தோன்றும். சில வேளைகளில் அதைத் தான் அதிகார வர்க்கம் விரும்புகிறதோ தெரியவில்லை.

நாவாந்துறையில் உண்மையில் நாவந்துறையில் இடம்பெற்றதைப் போன்ற சம்பவம் வேறெந்த நாட்டிலாவது நிகழ்ந்திருந்தால் முதல் வேலையாக குறித்த பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பார். நடந்த சம்பவங்கள் எல்லை மீறிச் செல்வதைக் கண்டும் காணாதது போன்று இருந்தமைக்கும், பொதுமக்கள் மீது பெருமெடுப்பில் வன்முறை ஏவிவிடப்பட்டமைக்கும் உரிய தண்டனையும் வழங்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு நடந்ததோ அதற்கு நேர் மாறு. இப்போது வன்முறையைத் தூண்டிவிட்ட அதிகாரியைப் பாராட்டியவர்கள் நாளைக்கே இன்னும் கொஞ்சம் மேலே போய் கிறீஸ்பூதங்களை அழைத்து வீரசக்கர விருது கூடக் கொடுக்கலாம். யார் சொன்னது ஆசியாவின் அதிசயம் இலங்கை என்று? அது ஆசியாவில் மட்டுமல்ல, உலகிலேயே அதிசயமான நாடு தான். ★



■ பிரமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ அ.சூரியன்

அறிவியல் தொடர்கதை...

# ஆகாய ஆபத்து!

**வான் வெளியில்........**
**வேற்றுக்கிரக வாசிகளின் கவட என்ற விண்கலம் சுட்டிக்காட்டிய அதன் வெலவியா திரையை பார்வையிட்ட சதுயாவும், செதிலும் அதிர்ந்தனர்........**

**கெல்லியா மலைக்காட்டில்........**
**சுதாவும், நிகிதாவும் தமக்கு வந்த ஆபத்தை எதிர்கொள்வதற்காகத் தமது நண்பன் தருவினை செல்போனில் தொடர்புகொண்டு உரையாடுகின்றனர்.....**

★ ★ ★

எக்ஸ் கதிர்களை வீசிக் கொண்டிருந்த அந்த அண்ட வெளியின் இடத்தை நோக்கி வேகமாக நகர்ந்த கோளொன்றைப் பார்த்து சதுயா அதிர்ச்சியடைந்தவளாய்.

"செதில் என்ன அதிசயம்" என்றாள்.

"ஹ ஸ் ஹ ஸ் ஹ..."

செதில் தம்மை நோக்கி வந்துகொண்டிருக்கும் அந்த ஆபத்து பற்றியறியாமல் சிரித்தான்.

"இங்கே பார் சதுயா இந்தப் பிரபஞ்சமானது எமக்குப் புலப்படாத எத்தனையோ எண்ணிலடங்காத ஆச்சரியங்களைக் கொண்டிருக்கின்றது. நாமேதோ பூமி வாசிகளை விட விஞ்ஞானத்தில் கொஞ்சம் வளர்ந்திருந்தாலும் எமக்கே கூட எல்லா உண்மைகளும் தெரிவதில்லைதான்."

ஏய்........அங்கபார் செதில் -கூறினாள் சதுயா.

செதில் அவள் சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்தபோது அங்கே வேறொரு கோள் தனது சுற்றுப் பாதையில் சுற்றியவாறு நடுங்கிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் செதில் கூறினான்.

★ ★ ★

இளவாலையை நோக்கி தருவின் பைக்கில் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பெண் மறித்தாள். இவள் ஏறமாட்டாளா என்று இவன் ஏங்க அவள்

"நானும் வரவா" என்றாள் அவள்.

கொஞ்சம் பிகு பண்ணிக்கொண்டு (என்னை இழுக்காரயாக நினைக்கக்கூடாது பார்டா....டா....டா.... என்னடா பேராண்டா) எங்கே போகிறீர்கள் எனக் கேட்டேன். அவள் அதற்கு பிராங்பற்று வரைக்கும் என்றாள். ஆஹா... எப்படியும் பதினைந்து நிமிட நேரத்திற்கு என் கூடவே - என் அருகே இருந்து கொண்டு உரசியபடி வரப் போகிறாள்.

நான் பின் சீற்றை ஒரு முறை தூசு தட்டியபடி கைகாட்ட, அவள் மான்குட்டியாய்த் துள்ளி ஏறி அமர்ந்து கொண்டதும் (ஒருமுறை என்னை இடித்தாள் - யப்...பா....) பைக்கை ஓடவிட்டேன். "லைசென்ஸ் எடுத்து விட்டீர்களா" என்று கேட்டாள் அவள். நான் எடுக்கவில்லை என்பதைச் சொல்லாமல் இம்...ம்......என்றேன். நான் வெகு சிரம்பபட்டு உதட்டை நாக்கால் ஈரப்படுத்திக் கொண்டே "நீங்கள் பைக் ஓட்டுவீர்களா" என்று கேட்டேன். அவள் ஆம்...என்று தலையசைக்க "எவ்வளவு கி.மீ வேகத்தில்" என்று திருப்பிக் கேட்டேன். அவள் அதற்கு சிரித்துவிட்டு "ஜெற் வேகத்திலும் அதிகமான வேகத்தில்" என்றாள். "ஆ...ரொம்ப நல்லது" என்றேன் தொடர்பில்லாமல்.

அவளுக்கும் எனக்குமுள்ள இடைவெளியைக் குறைக்க எண்ணி மீண்டும் பைக்கை எழுபதுக்குக் கொண்டு வந்தேன். நான் வேகமாகப் போவது உங்களுக்குப் பயமென்றால் மறைக்காமல் சொல்லுங்கள் என்றேன். அவள் அதற்கு எதுவுமே சொல்லாமல் சிரித்தாள். இவளுக்கென்ன பயம் காட்டத் தொண்ணூறு கிலோமீற்றர் ஆக்கினேன். இது நான் இதுவரை இந்த வீதியில் ஓட்டாத வேகம். இதற்குமேல் வேகமெடுக்க நான் பயந்தேன்.

சண்டிலிப்பாய் நாற்சந்திவரை அவளுடன் எதுவுமே கதைக்காமல் நான் பிரேக் பிடித்து பைக்கை ஸ்லோ பண்ண நினைக்க அவள் வேண்டாம் என்றாள்.

நான் நினைக்கிறதையே அவள் புரிந்து கொண்டதை நினைத்துத் திடுக்கிட்டவனாக ஏன் வேண்டாம் என்றேன்.

"பைக்கை ஸ்லோவாக்க வேண்டாம்" என்றாள் அவள். இவளுக்கென்ன பைத்தியமா? சந்தியால் வேறொரு வாகனம் வந்து திரும்பினால் என்ன செய்வது? நான் அவள் சொன்னதைக் கேளாமல் பிரேக் பெடலை மிதித்தேன் மறுவினாடி எனக்கு அதிர்ச்சி. காரணம், பிரேக் வேலை செய்ய மறுத்தது. வேகமோ தொண்ணூறு கிலோ மீற்றரை கோட்டு அப்போது எதிரே இடது பக்க வீதியிலிருந்து லொறியொன்று திடீரென்று திரும்பியது. சரி, எனக்கு முடிவு தெரிந்து விட்டது. இன்று நாம் சம்பல்.

அவள் பின்னால் இருந்து சிரித்துக் கொண்டிருந்தாள். எனக்கோ சாகிற இந்த நேரத்தில இவளது சிரிப்பு எரிச்சலையே தந்தது.

சில வினாடிகள் சென்றதும்......

என்ன ஆச்சரியமோ ஆச்சரியம்! லொறி பிரேக் போட்ட சத்தமும் அதைத் தொடர்ந்து வீதியில் இச்சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் யாரோ....வீல்....ல்....என்று அலறும் சத்தமும் கேட்டது. ஆனால் நாது பைக் லொறியில் மோதாமல் லொறியை ஊடுருவி மறுபுறத்தில் எதுவித பிரச்சனையும் இன்றி பிரயாணித்துக் கொண்டிருந்தது.

"சிகரா இடைமறித்து டேய்....என்று அதிசயித்தான்.

"உன்னைத்தாண்டா எனக்கு அதிர்ச்சியே அதிர்ச்சியடா."

எமது பைக் லொறியினுள் புகுந்து மறுபக்கமாக வெளியேறியதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட அதிர்ச்சியில், அவள் கொண்டு வந்த பால் போத்தல் கீழே தவறி விட, அது ரோட்டில் விழுந்து கிளீர்....ர்...என்று உடைந்து நொருங்கியது.

எனக்கு என்ன நடந்ததென்றே சரிவரப்புரியவில்லை. எமது பைக் லொறியைக் ஊடுருவியதா? என்னடா இது? என்னால் நம்ப முடியாமல் இருந்தது.

"டேய் என்னடா சொல்லுறாய் தருவின்."

"ஓமடாப்பா அதுதான் எனக்கும் புரியவில்லையடா."

"பிறகென்னநடந்தது"

"சரி சொல்லுறன்"

[illegible]

சிறிது நேரம் பயணித்தபின் அதிர்ச்சி மாறாதவனாக பிரேக் போட்டேன். இப்பொழுது சொன்ன இடத்தில் கிறீச்சிட்டு நின்றது பைக்.

"ஏய்......என்ன?" என்றாள் அவள்.

"நாங்...களிப்ப......"

"ப்ச்.....ஒன்றுமே நடக்கவில்லை. ஏதோ தெய்வாதீனமாகத் தப்பி விட்டோம். இம்..... எனக்கு நேரம் போகிறது..." என்றாள்.

(ஆபத்து தொடரும்)


**இலவச வினாத்தாள் திருத்தற்சேவையுடன் புலமைச்சுடர் பிரதிகளைச் சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே.....**




இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு ''புலமைச்சுடர்'' பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்தமாக 1000 ரூபாவை காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை**

| காசுக்கட்டளையாயின்- | வங்கி வைப்பாயின் - |
|---|---|
| "கணக்காளர், Landmark Enterprises" என்ற பெயருக்கு கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக்கூடியவாறு | (126- 1- 001-0-3452799) என்ற மக்கள் வங்கி இலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 65, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*புலமைச்சுடர் சந்தாப்படிவம்*

1. பெயர் : ........................................
2. விலாசம் : ........................................
........................................
3. தொ.பேசி இலக்கம் : ........................................
4. பிரதிகளின் எண்ணிக்கை: ........................................
5. செலுத்தப்பட்ட பணம் : .................... ரூபா
5, வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716950005/ 0115738855

(இவ்விண்ணப்பம் பயன்படுத்துமிடத்து பிரதியெடுத்துப் பயன்படுத்தலாம்)

**சந்தா பிரதிக்கான வினாத்தாள் திருத்தற்சேவை**

சந்தா மூலம் பிரதியைப் பெறும் மாணவர்களுக்கு இலவசமாக வினாத்தாள் திருத்தற்சேவையினை புலமைச்சுடர் கையேடானது ஆற்றவுள்ளது. இக்கையேட்டில் வரும் வினாத்தாள்களுக்கான விடைகளை எழுதி ''கல்விச்சுடர், வினாத்தாள் திருத்தற் சேவை, 65, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு 14'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அவ் வினாத்தாள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் திருத்தப்பட்டு புள்ளிகளுடன் அடுத்த வாரபுலமைச்சுடருடன் அனுப்பிவைக்கப்படும். இதனால் நீங்கள் இப்பரீட்சைகளில் பெறும் உண்மையான புள்ளிகளை அறிந்து உங்களைத் திருத்திக்கொள்ள இச்சேவை உங்களுக்கு பெரிதும் உதவும் என நம்புகின்றேன். எனவே சந்தா மூலம் பிரதியைப் பெற்று புலமைச்சுடரின் இச்சேவையின் பயனைப் பெறுக.

- ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களப் புயல்
# நெப்போலியன்

-1


Carlo Buonaparte



## கோர்ஸிகா தீவும் சுதந்திரப் போராட்டமும்

பதினெட்டாம் நூற்றாண்டு ஐரோப்பாவில், இங்கிலாந்து தான் அதிக ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது. அதைத் தவிர குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பிரதேசங்கள் என்று பார்த்தால், பிரான்ஸ் மற்றும் இத்தாலி.

உலக வரைபடத்தில், இத்தாலியைக் கண்டுபிடிப்பது ரொம்பச் சுலபம். ஐரோப்பாவின் கீழ்ப்பகுதியில், மத்திய தரைக் கடலை யாரோ பூட்ஸ் காலால் எட்டி உதைப்பதுபோல் நீண்டு கிடக்கும் தேசம் அது.

இத்தாலியிலிருந்து சற்றுத் தொலைவில், பிரான்ஸ். இந்த இரண்டு நாடுகளுக்கும் நடுவே கொஞ்சம் கூர்ந்து கவனித்தால், பாண்டி விளையாடிய பெண்கள் வீசி எறிந்த சில்லுகளைப் போல, நடுக்கடலில் இரண்டு சின்னஞ்சிறு தீவுகளைப் பார்க்கலாம். ஒன்று சார்டுனியா (Sardunia). இன்னொன்று, கோர்ஸிகா (Corscica).

கோர்ஸிகாவில் ஏகப்பட்ட மலைகள் உண்டு. சொல்லிக் கொள்ளும்படியாக எந்த விளைச்சலும் கிடையாது. கனிம வளம், தொழில் வளர்ச்சி என்று பெருமையாகக் குறிப்பிடுவதற்கு எதுவுமே இல்லை.

ஆனால், மத்திய தரைக்கடலின் நட்டநடுவே இருக்கிற தீவு என்பதால், இந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்த விரும்பிய நாடுகளுக்கெல்லாம் கோர்ஸிகா தேவைப்பட்டது. இங்கே உட்கார்ந்து கொண்டு விட்டால், கால் மேல் கால் போட்டபடி, 'யாருடா அது கப்பல் ஓட்டுறது?' என்று அந்தப் பக்கம் வருகிறவர்களையெல்லாம் அதட்டிக் காசு வசூலிக்கலாம், அதிகாரம் செலுத்தலாம், அடுத்தவர்கள் நம்மீது கடல் வழியே படையெடுத்து வராதபடி பார்த்துக்கொள்ளலாம்... இப்படிப் பலவிதங்களில் வசதி.

இந்தக் கோணத்தில் யோசித்த அக்கம்பக்கத்து நாடுகள் அனைத்தும், கோர்ஸிகா தங்களுடைய பிடியில் இருப்பதுதான் நல்லது என்று நினைத்தன. ஆகவே, பல நூற்றாண்டுகளாக, இந்தச் சின்னஞ்சிறு தீவு, வெவ்வேறு ஆக்கிரமிப்பாளர்களிடம் அகப்பட்டுக்கொண்டு தவித்தது. அவ்வப்போது 'முதலாளி'கள் மாறிக் கொண்டிருந்தார்களே தவிர, கோர்ஸிகா, ஓர் அடிமை தேசம் என்கிற நிலைமையில் மாற்றமே இல்லை.

உள்நாட்டினர் கொஞ்ச நாட்கள் அடங்கிக் கிடந்தார்கள். அதன்பிறகு, விழித்துக்கொண்டு சுதந்திரப் போராட்டத்தில் இறங்கினார்கள்.

உலகம் முழுவதுமே, ஒரு சில நாடுகளின் 'காலனி'களாக அடிமைப் பட்டுக்கிடந்த காலகட்டம் அது. இதனால், கோர்ஸிகர்கள் என்னதான் தீவிரமாக ஆயுதம் ஏந்திச் சண்டை போட்டாலும், அவர்களால் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்க முடியவில்லை. கிட்டத்தட்ட ஐந்து நூற்றாண்டு காலமாக கோர்ஸிகாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த இத்தாலியர்கள் இந்த எதிர்ப்புகளையெல்லாம் பூச்சியை நசுக்குவது போல், மிகச் சுலபமாகக் கட்டுப்படுத்தி அடக்கினார்கள்.

ஆனால் அதற்காக, காலமெல்லாம் அடிமையாகக் கிடக்க முடியுமா? 'சுதந்திரம் எங்களுடைய பிறப்புரிமை', 'இத்தாலியனே வெளியேறு' என்றெல்லாம் கோஷம் போட்டபடி, கோர்ஸிகர்கள் தங்களுடைய போராட்டங்களைத் தொடர்ந்தார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில், இந்தப் போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்தவர் பாஸ்குவெல் பயோலி (Pasquale Paoli). இத்தாலியர்களுக்கு எதிராக அவர் திரட்டியிருந்த கோர்ஸிக இராணுவத்தில், கார்லோ போனபார்ட் (Carlo Buonaparte) என்பவர் முக்கியப் பொறுப்பு வகித்தார்.

தலைவர் பயோலிக்கு நெருங்கிய நண்பராக இருந்த கார்லோ, அடிப்படையில் ஒரு வழக்கறிஞர். இத்தாலிய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான போர்கள் பலவற்றில், இவர் நேரடியாகப் பங்கு பெற்றிருக்கிறார். அவரது மனைவி லெட்டிஸியா (Letizia) குடும்பத்தைப் பொறுப்புடன் நிர்வகித்து வந்தார். ஏதோ பெரிய வறட்சியின்றி வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

அந்த மலைப் பிரதேசத்து மண்ணின் இயல்போ, என்னவோ பெரும்பாலான கோர்ஸிகர்களுக்கு, முன் கோபம் அதிகம். முறைக்கென்றால் ஒருவரை ஒருவர் முறைத்துக்கொண்டு அடிதடி, கைகலப்பு, வெட்டுக்குத்துகளில் இறங்கிவிடுவார்கள்.

இதனால், கோர்ஸிகாவைச் சேர்ந்த பல குடும்பங்களில் ஏழெட்டுக் குழந்தைகளைச் சர்வ சாதாரணமாய்ப் பார்க்கலாம். நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதுதான், நம்முடைய பரம்பரைக்குப் பாதுகாப்பு என்கிற நினைப்பு அவர்களுக்கு இருந்தது.

1768-ம் ஆண்டு இத்தாலியர்கள், கோர்ஸிகாவை பிரான்ஸுக்கு விற்கத் தீர்மானித்தார்கள்.

இதையடுத்து கோர்ஸிகாவை ஆக்கிரமித்திருந்த இத்தாலியப்படைகள், மூட்டை கட்டிக்கொண்டு ஊரைப் பார்க்கக் கிளம்பினார்கள். அடுத்த கப்பலில், பிரெஞ்சுக்காரர்கள் வந்து இறங்கி, ஆட்சி செய்ய ஆரம்பித்தார்கள்.

கோர்ஸிகர்களைப் பொறுத்தவரை, வழக்கம்போல் ஒரு 'முதலாளி' கிளம்பி, இன்னொரு 'முதலாளி' வந்திருக்கிறான். சுதந்திரம் என்னவோ கண்ணுக்கு எட்டுகிற வழியைக் காணோம்.

ஆகவே, பெருமூச்சுடன் அவர்கள் மீண்டும் தங்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

இதைப் பார்த்த பிரெஞ்சுக்காரர்கள், கோர்ஸிகர்களை வேறு வழியில்தான் சமாளித்தாகவேண்டும் என்று முடிவெடுத்தார்கள். சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் முக்கியஸ்தர்கள் யார் யார் என்று ஒரு பட்டியல் தயாரித்து, அதில் உள்ளவர்களையெல்லாம் தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

'எங்களை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியவர்கள் யார்மீதும் எங்களுக்குக் கோபம் இல்லை. எல்லோருக்கும் பொது மன்னிப்பு வழங்கிவிடுகிறோம். அதன்பிறகு, கோர்ஸிகாவுக்கு விடுதலை வேண்டுமா? அல்லது, உங்களுடைய குடும்பத்துக்குச் சௌக்யமும் சௌபாக்கியங்களும் வேண்டுமா? நீங்களே யோசித்து முடிவு செய்துகொள்ளுங்கள்.'

இப்படி அவர்கள் ராஜதந்திரமாக வலை வீசியதில், போராளிகளில் ஏகப்பட்ட பேர் சிக்கிக்கொண்டார்கள். இதனால், கொஞ்சம் கொஞ்சமாக கோர்ஸிகா விடுதலைப் போராட்டத்தின் வலு குறைய ஆரம்பித்தது. ஆக்கிரமிப்பாளர்களின் கை ஓங்கத் தொடங்கியது.


Pasquale Paoli

கார்லோ - லெட்டிஸியா தம்பதியினர் மொத்தம் பதின்மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொண்டார்கள். இதில் ஐந்து குழந்தைகள் சிறு வயதிலேயே இறந்துவிட, அவர்களுக்கு மிஞ்சியது ஐந்து மகன்கள், மூன்று மகள்கள். இதில் இரண்டாவது மகனாகப் பிறந்த (1769, ஆகஸ்ட் 15) குழந்தைக்கு அவர்கள் வைத்த பெயர் '**நெப்போலியன்**'.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவனா கொலைகாரன்?!

■ ஜெகன்



அமெரிக்காவில் கன்சாஸ் மாநிலம்; அழகிய மலைச்சாரல்களும், பரந்து நீண்ட கோதுமை வயல்களையும் இடையிடையே குடியிருப்புகளையும், ஆங்காங்கு சிறிய காட்டுப் பிரதேசங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் மாநிலமாக விளங்கியது கன்சாஸ்.

கன்சாஸ் நகரில் இருந்து சில மைல்கள் தொலைவிலுள்ளது "பார்க்சிற்றி" எனும் கிராமம். இக்கிராமத்தில் தான் டெனிஸ்ராடர் அமெரிக்க விமானப் படையில் பணிபுரிந்த வில்லியம் எல்பாவுக்கு மகனாகப் பிறந்தார். தாயாரின் பெயர் டொறத்தியோ. காலப்போக்கில் டெனிசுக்கு இரண்டு இரட்டைத் தம்பிமார்கள் பிறந்துவளர்ந்தனர்.

கல்விகற்றுவந்த டெனிஸ்ராடர், குடும்பக் கஷ்டங்களின் நிமித்தம் தனது 19வது வயதில் விமானப் படையில் இணைந்தார். எனினும் 4வருடங்களின் பின்னர் அச்சேவையில் இருந்தும் விலகினார். அதன்பின்பு ஓர் தேசிய ரீதியிலான பாதுகாப்பு நிறுவனத்தில் தகுதிவாய்ந்த ஓர் பதவியினைப் பிடித்துக் கொண்டார். ஓர் அதிகாரி என்றவகையில் வாழ்வதற்குரிய சகல வசதிகளும் இவ் வேலைமூலம் வழங்கப்பட்டது. இக் காலகட்டத்தில் போலா டயர்ஸ் என்பவரை மணந்து கொண்டார்.

இச்சமயத்தில் அவரது தந்தையாரான வில்லியம் காலமானார். தாயார் டொறத்தியோ தனது இரண்டு மகன்களுடன் சிற்றிபார்க்கில் உள்ள ஓர் பங்களா வீட்டில் குடியேறினர்.

டெனிஸ் அடுத்தசிலவருடங்களில் கேன்சாஸ் பல்கலைக் கழகத்தில் நீதி நிர்வாகத்துறையில் பட்டம் பெற்று வெளியேறினார். அதிர்ஷ்டம் அவரை நாடி வந்தது. அவர் கன்சாஸ் மாநிலத்தின் காவல்துறைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். அதேசமயம், பல்கலைக்கழகத்தில் இவருடன் பயின்ற சிண்டி பிளான்ற் எனும் பெண்ணும் இவருக்கு அடுத்த நிலை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

டெனிஸ் பொதுச் சேவைகளிலும் ஆர்வமுள்ளவராக செயற்பட்டமையால் அம்மாநில சபையின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். அதுமட்டுமல்லாது பார்க்சிற்றியில் உள்ள லூதரென் தேவாலயத்தின் பரிபாலனசபையின் தலைவர் பதவியையும் வகித்தார்.

இக்காலகட்டத்தில் அமைதியாக இருந்த கன்சாஸ் பகுதியில் டெனிஸ்ராடர் காவல்துறைப் பொறுப்பதிகாரியாகப் பதவியேற்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பதாகவே தொடர்ச்சியாகப் பல கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனால் அக் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாமலும், கொலைகாரனைக் கண்டு பிடிக்க முடியாமலும் போய்விட்டது. அதனால் மாநிலத்திலும் சுற்றாடலிலும் உள்ள மக்கள் அனைவரும் ஓர் பயங்கரமான பீதியுணர்வுடனேயே வாழ்ந்தனர். வெளியூரில் இருந்து வருபவர்களையெல்லாம் அச்சத்தோடும், சந்தேகத்தோடும் நோக்கினர்.

யோசப் - ஒசென் ரோதேரோவின் குடும்பம் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதிலிருந்து, இம் மர்மக் கொலைகாரனின் திடுக்கிடவைக்கும் கொலை அட்டூழியங்கள் ஆரம்பமாகின.

38 வயது மட்டுமே நிரம்பிய யோசப் அமெரிக்க விமானப்படையில் 20வருடங்கள் சேவையாற்றிய பின்னர் தனது மனைவியான 34 வயதுடைய ஜூலி மற்றும் 5பிள்ளைகளுடன் பார்க்சிற்றிக்கு அடுத்துள்ள "விசிரா" நகரில் உள்ள பங்களா வீட்டில் குடியேறினார்.

மாசிகாலக் குளிர் நிறைந்த காலையில் தன்னடக்கமான தங்கள் வாசஸ்தலத்தின் சமையலறையில் யோசப் குடும்பத்தினர். "சைன்னில்" தயாரிப்பில் ஈடுபட்டிருந்த வேளையில் கொலைகாரன் எவருமறியாது உட்புகுந்துள்ளான். பட்டர் பூசப் பயன்படுத்திய ஓர் கத்தி, பாண் துண்டில் மேல்காணப்பட்டது. தொலைபேசி வயர்கள் வெட்டப்பட்டுக் கிடந்தன. கொலைஞன் யோசப் அவரது மனைவி ஜூலி மற்றும் 9, 11 வயதுடைய இரண்டு பிள்ளைகளையும் கட்டிவைத்து விட்டு பிளாஸ்ரிக் கயிற்றால் ஒவ்வொருவராக அவர்களது குரல்வளையைச் சிறுகச் சிறுக நெரித்துக் கொலை செய்துள்ளான். ஆனால் எவர் மீதும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்தை அவன் மேற்கொள்ளவில்லை.

ஆனால் ஏனோ தெரியவில்லை ஞாபகச் சின்னங்களாக ஒரு கைக்கடிகாரம் மற்றும் ஒரு சாவிக் கொத்தை மட்டுமே அவன் எடுத்துச் சென்றுள்ளான். சடலங்கள் அங்கேயே கிடந்தன. கொலையுண்ட தம்பதிகளின் ஏனைய மூன்று பிள்ளைகளும் பாடசாலை செல்லும் இளம்பராயத்தினர், மதிய வேளைக்குச் சற்றுப்பின்னர் பாடசாலையில் இருந்து திரும்பிவந்ததும் தமது வீட்டில் நடந்தேறியுள்ள கொடூரத்தை நேரில் கண்டு திகைத்தனர்.

இக் குடும்பத்திற்கு நேர்ந்த அவலத்தின் காரணகர்த்தாவைக் கண்டறிய தீவிர முயற்சிகளையும் காவல்துறைத் தரப்பினர் மேற்கொண்டனர். வீதித் தடைகளை ஏற்படுத்தி வாகனங்கள் சோதனையிடப்பட்டன. பலியானவர்களுடன் தொடர்பு வைத்திருந்தவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பலன் பூஜ்ஜியமே. டெனிஸ் ராடரும் சிண்டி பிளான்ரும் இணைந்து அயராது விடாமுயற்சியுடன் கொலைகளின் மர்மத்தைக் கண்டறிவதில் ஈடுபட்டனர்.

டெனிஸ்ராடரும் அவரது சக அதிகாரியான சிண்டிபிளான்ரும் இணைந்து பல இடங்களிலும் பல்வேறு விசாரணைகளை ஓடியாடி மேற்கொண்டனர். எதுவும் பலனளிக்கவில்லை.

யோசப் குடும்பத்தினரின் கொலைகள் நடந்தேறி மூன்று மாதங்களின் பின்னர் கொலைகாரன் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினான். ஓர் நிறுவனப் பணியாளரான 21 வயதுடைய கத்தரீன் பிரைற் என்பவளை வெட்டிக்கொலைசெய்ததுடன் அவளது சகோதரனான கிறிஸ் என்பவனையும் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தான்.

இக்கொலைகள் நடந்து ஒரு சில மாதங்களின் பின்னர் கொலையாளி காவல்துறைக்கு தட்டச்சு செய்யப்பட்ட ஓர் கடிதத்தின் மூலமாக சவால் விடுவது போலத் தன்னை முதன் முறையாக அடையாளப் படுத்திக் கொண்டான். அக்கடிதத்தில் "உண்மையாகவே அவர்கள் இறக்கும் போது பெரிதும் வேதனையை அனுபவிக்கின்றார்கள். என்னைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை என் [illegible] ஆட்டுவிக்கின்றது. நான் கவலையடைகிறேன்" எனக் கொலையாளி எழுதியிருந்தான்.

அடுத்தடுத்து நடக்கும் இக் கொடூரக் கொலைகளினால் மாநிலம் முழுவதுமே அச்சத்தில் உறைந்து போயிற்று. மக்கள் அரசாங்கத்தினையும், காவல் துறையினையும் குற்றவாளியைக் கண்டுபிடிக்கக் கையாலாகாதவர்கள் எனக் கேலி செய்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டனர். ஊடகங்களும் வேகமாக விமர்சித்தன. இதன் நிமித்தம் பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பதிகாரியான டெனிஸ்ராடருக்குக் கொலைகளின் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கும்படி கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் டெனிஸ்ராடரின் மனைவி இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தாள். இரண்டும் ஆண் குழந்தைகள். பிரையன், கரி எனப் பெயரிடப்பட்டனர்.

கொலையாளி வெறுமனே ஓய்ந்திருக்கவில்லை. காவல்துறையினருக்கும் அரசாங்கத்திற்கும் சவால் விடுவதுபோல கேர்லியிலான் எனும் இளம் பெண்ணையும் அதனையடுத்து 10நாட்கள் இடைவெளியின் பின் நான்சி பொக்ஸ் என்ற அழகி ஒருத்தியையும் பழையபாணியில் கழுத்தை நெரித்துக் கொலை செய்ததோடு மட்டும் நின்றுவிடாது அது குறித்து உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனமொன்றிற்கு கடிதம் அனுப்பினான். அக்கடிதத்தில் "இத்துடன் ஓய்ந்துவிடவில்லை. இன்னும் தொடரும்" என எச்சரித்திருந்தான்.

நிலைமை மேலும் மோசமடைந்தது. டெனிஸ்ராடருக்கு மேலிட அழுத்தங்கள் அதிகரித்தன. செய்வதறியாது அவரும் சக நண்பியான சிண்டி பிளான்ரும் ஓயாத தீவிர முயற்சியில் இறங்கினார்கள். அவர்களுக்கு இது ஓர் சவாலாக அமைந்தது.

மேன்மேலும் கவலையளிக்கும் விதத்தில் கொலைகளும் அதனுடன் அது குறித்த கொலையாளியின் கடிதங்களும் தொடர்ந்து வந்த வண்ணமேயிருந்தன.


(அடுத்த இதழில் மிகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்களில் உண்மை உள்ளதா?

# அறிவியல் விளக்கம்!



அந்தச் சட்டை அவருக்கு இராசியானது இந்த சைக்கிள் அவருக்கு இராசியானது அந்த வீடு அவர்களுக்கு இராசியானது இந்தப் பெண் இராசி சரியில்லை என்று பலர் சொல்வதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஏன், நீங்களேகூடச் சொல்லி யிருப்பீர்கள். இப்படிப்பட்ட இராசி நம்பிக்கை உண்மையா? என்றால் இல்லவே இல்லை என்பதே சரியான பதில். ஆனாலும், படித்தவர்கள் முதல் பாமரர்கள்வரை இந்த நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. இது ஒரு தனி மனிதனின் ஒரு பொருள் சார்ந்த நம்பிக்கையாக இருக்கும் வரை அதனால் அவனுக்கோ பிறருக்கோ அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால், அதுவே ஒரு நபர் மீதான நம்பிக்கையாக இருந்தால் அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் மிக மோசமாக இருப்பதுண்டு.

பொதுவாக, இந்த நம்பிக்கை சில நிகழ்வுகளின் அடிப்படையில் எழுகிறது. ஒருவர் ஒரு சட்டையை அணிந்துகொண்டு சென்றபோது, காரியம் நல்ல முறையில் முடிந்தால் மீண்டும் அந்தச் சட்டையைப் போட்டுக்கொண்டு முக்கியமான காரியத்திற்குச் செல்வார். அந்த முறையும் காரியம் நல்ல முறையில் முடிந்தால் அந்தச் சட்டை இராசியான சட்டை என்று முடிவிற்கு வந்துவிடுவார். ஒரு வீட்டிற்குக் குடி வந்தவர், வந்த சில நாட்களில் ஏதாவது ஒரு கேடு வந்துவிட்டால் அந்த வீடு இராசி இல்லாத வீடு என்ற முடிவுக்கு வந்துவிடுவார். எந்தப் பாதிப்பு வந்தாலும், அது அந்த வீட்டிற்கு வந்ததால் என்ற முடிவிற்கு வந்துவிடுவார்.

இப்படித்தான் பல பொருள்களின் மீது இராசி நம்பிக்கை ஏற்படுகிறது. சிலர், சில மனிதர்களையே இராசி இல்லாதவர்கள் என்று ஒதுக்கி விடுவர். ஒருவரால் ஒரு காரியம் தொடங்கப்பட்டு அது தோல்வியில் முடிந்தால் அவர் இராசி இல்லாதவர் என்று வெறுக்கப்படுகிறார்.

சில வீடுகளில் சில பெண்கள் இந்த இராசி நம்பிக்கையால் அடைபடும் துன்பத்திற்கு அளவே இருக்காது. ஒரு வீட்டிற்கு மருமகளாக ஒரு பெண் வந்த பின் அந்த வீட்டில் ஏதாவது கேடு அல்லது இழப்பு வந்தால் அந்தப் பெண் வந்த இராசி தான் இப்படி நடக்கிறது என்று அப்பாவிப் பெண் மீது அபாண்டமாகப் பழியைப் போட்டுவிடுவர். அத்துடன் நில்லாமல், அடுத்தடுத்து வரும் எல்லாப் பாதிப்புகளுக்கும் இழப்புகளுக்கும் அவள் வந்த இராசிதான் என்று பழி போட்டு பாடாய்ப் படுத்துவர்.

இப்படி எல்லாம் சொல்லப்படுவதிலும் நம்பப்படுவதிலும் ஏதாவது உண்மை உள்ளதா என்றால், இல்லை என்பதே ஆய்வின் முடிவு. நல்லது கெட்டது நடப்பதற்கு ஒரு பொருளுக்கோ, ஒரு இடத்திற்கோ, ஒரு நபருக்கோ உள்ள இராசி காரணம் அல்ல. இயல்பாய் நடப்பதை இவற்றுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் அறியாமையே இவைகளுக்குக் காரணம். ஒரு சட்டையைப் போட்டுச் சென்றபோது நல்லது நடந்தால் அந்தச் சட்டையைப் போட்டுக்கொண்டு செல்லும்போதெல்லாம் நல்லதே நடக்கும் என்பது உண்மையல்ல.

நான்கைந்து முறைக்குப் பதிலாக எத்தனை முறை சோதித்துப் பார்த்தால் நல்லதும் கெட்டதும் கலந்தே நடக்கும். ஒரு ரூபாய் நாணயத்தைச் சுண்டி விட்டால் மூன்று நான்கு முறை தலையாகவேகூட விழும். அப்படி விழுந்தால், அந்த நாணயத்தைச் சுண்டி விட்டால் தலையாகத்தான் விழும் என்று எண்ணினால் அது எவ்வளவு பெரிய முட்டாள்தனமோ அவ்வளவு பெரிய முட்டாள்தனம் இந்த இராசி நம்பிக்கை.

அதே ஒரு ரூபாய் நாணயத்தை 100 முறைச் சுண்டி விட்டால் தலைவிழும் எண்ணிக்கையும், பூ விழும் எண்ணிக்கையும் சற்றே ஏறக்குறைய சம எண்ணிக்கையிலேயே இருக்கும். எனவே, ஓரிரு சம்பவங்களை வைத்து ஒன்றை அல்லது ஒருவரை இராசியானவர் (னவை), இராசியற்றவர்(வை) என்று நம்புவதும், நம்பிச் செயல்படுவதும் அறியாமையாகும். எனவே, பிஞ்சுக் குழந்தைகள் தங்கள் நெஞ்சில் இதுபோன்ற அறியாமைகளைப் பதியச் செய்யாமல் அறிவோடு சிந்தித்துச் செயல்பட்டால் வாழ்வில் சிறக்கலாம்.


Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வீஸ் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள், படிப்புக் காலங்களுக்கு வேலைநிறுத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தின் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யுங்கள்.

www.progresso-lehrgang.ch

Hotel & Gastro formation | Eichistrasse 20 | 6353 Weggis
Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August,Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவீடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கைபேசியில் தொலைபேசியில் பதிந்துக்கொள்ளலாம்.
மொழி பெயர்ப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.
தொடர்புகளுக்கு சூரியந்தி மாஸ்ரர்,


இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்

Für Handy




10 மொழி அகராதி

Sprache wörterbuch

ஏஜென்டுகளுக்கு நல்ல கமிசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் திறமைகள்



பெண்கள் பல்திறன் கொண்டவர்கள். அவர்களால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலை களைப் பார்க்க முடியும். போனில் பேசிக் கொண்டே அலுவலக வேலையையும் கவனம் சிதறாமல் செய்து விடக் கூடியவர்கள் பெண்கள். அதற்கேற்ப அவர்களின் மூளையும் வடிவமைந்துள்ளது.

ஆண்கள் பொய் பேசினால் பெண்கள் உடனே கண்டுபிடித்து விடுவார்கள். ஆண்களின் முகபாவனை, அங்க அசைவுகள், வார்த்தை உச்சரிப்பு இவற்றை வைத்தே அதைக் கண்டுபிடிக்கிறார்கள்.

பெண்கள் பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளாமல் அன்புக்குரியவர்களிடம் சொல்லிவிட்டு மறந்துவிடுவார்கள்.

பெண்களுடைய சிந்தனைகள் எல்லாம் குடும்பம், நண்பர்கள், உறவு பற்றியே இருக்கும்.

உறவுகளுக்குள் ஒரு பிரச்சினை என்றால் பெண்களால் அவர்களுடைய வேலையில் கவனத்தை செலுத்த முடியாது.

பெண்களுக்கு நல்ல கணவர், நல்ல உறவு, நல்ல உறவினர்கள், நல்ல பொழுதுபோக்கு, நல்ல சந்தோஷம் இப்படி எல்லாமே நல்லதாக இருந்தால் மட்டுமே அவர்கள் திருப்தி அடைவார்கள்.

பெண்கள் எதையும் சுற்றி வளைத்துதான் பேசுவார்கள். ஆசைகளையும் ஒளிவுமறைவாக வெளிப் படுத்துவார்கள்.

## நொறுக்குத்தீனி உண்பவர்களுக்கு

நொறுக்குத்தீனிக்காக அதிக அளவில் பிஸ்கட்டுகள் மற்றும் கேக்குகளை உட்கொள்ளும் பெண்களுக்கு கருப்பைப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பிருப்பதாகப் புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.


வாரத்திற்கு 3 முறைக்கும் மேல் பிஸ்கட்டுகள் மற்றும் கேக்குகளை உண்பவர்களுக்கு புற்றுநோய் உட்கட்டி ஏற்பட வாய்ப்பு அதிகமிருப்பதாகவும் இந்த ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் மட்டும் ஆண்டொன்றுக்கு சுமார் 6,400 பெண்களுக்கு கர்ப்பப்பை புற்று நோய் ஏற்படுகிறது என்றும் இதில் 1,000 பேர் மரணமடைவதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. ஸ்டாக்ஹோமில் உள்ள கரோலின்ஸ்கா இன்ஸ்டிட்யூட் ஆய்வாளர்கள் பொதுவாக இனிப்புப் பண்டங்களுக்கும் புற்று நோய் வாய்ப்பிற்கும் தொடர்புள்ளதா என்ற ரீதியிலும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆய்வில் அதிக சர்க்கரை உள்ள இனிப்புப் பானங்கள், குளிர் பானங்கள், ஜாம்கள் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளும் பெண்களுக்குப் புற்று நோய் வாய்ப்பு ஏற்படுவதாகத் தெரியவில்லை என்று கூறும் இந்த ஆய்வு பிஸ்கட்டுகள், பன்கள், இனிப்பு கேக்குகள் ஆகியவற்றை உண்பதால் கான்சர் ரிஸ்க் 42% அதிகமிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இந்த ஆய்வு மற்ற ஆய்வுகளின் முடிவுகளுடன் ஒத்துப் போகுமென்றால் கவலையளிக்கும் ஒரு ஆரோக்கியப் பிரச்சினையாகி விடும் என்று தெரிவித்துள்ளனர்.



## நரைமுடிக்கு முற்றுப்புள்ளி

நரைத்த முடி என்பது உலகம் முழுதும் பெரிய சவாலாக இருக்கிறது. இதனால் ஹேர் டை தொழிற்சாலை இன்று உலக அளவில் மிகப்பெரிய சந்தையை உருவாக்கியுள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்போம் இன்னும் 4 ஆண்டுகளில் வெள்ளை முடி ஒரு பழங்கதை என்று விஞ்ஞானிகள் சவால் விடுத்துள்ளனர். ஒரு பழம் ஒன்றின் சாறிலிருந்து தயாரிக்கப்படும் மாத்திரை இன்னும் 4 ஆண்டுகளில் விற்பனைக்கு வந்து விடும் என்று இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அழகுசாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் முதன்மை நிறுவனமான லோரியல் இந்தப் புதிய மாத்திரை



யைக் கண்டுபிடித்துள்ளது. 10 ஆண்டுகள் இடைவிடாத ஆராய்ச்சிக்குப் பிறகு இப்போது நரை முடிக்கு டாட்டா என்று இவர்கள் அறைகூவல் விடுக்கிறார்கள். உடலில் உள்ள நிறமிகள் புரோட்டீன்களுடன் முடி செல்கள் விளையாடும்போது நரைத்த முடி தோன்றுகிறது. தற்போது அடையாளம் தெரியாத இந்தப் பழத்திலிருந்து எடுக்கப்படும் சாறில் உள்ள ஒரு சத்து முடி நரையைத் தூண்டிவிடும் காரணியை முடக்குவதாக இருப்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நரை முடி தோன்றுவதற்கு முன்னால் இந்த மாத்திரையை தொடர்ந்து எடுத்துக் கொண்டால் நரை ஏற்படுவதை தடுக்க முடியும். ஆனால் முடி நரைத்த பிறகு அதனை மீண்டும் கறுப்பாக இந்த மாத்திரை ஆக்குமா என்பது சந்தேகமே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

## நாய்களிடம் பரிவுடன் பேசும் பெண்கள்




கணவனை விட தாங்கள் வளர்க்கும் நாய்களிடம் அதிக நேரம் பரிவுடன் பெண்கள் பேசுகிறார்கள் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. ஐந்தில் ஒரு பெண் தங்களது வளர்ப்பு பிராணிகளிடம் கணவனிடம் பேசுவதை விட அதிக நேரம் பேசுகிறார்கள்.

தங்களது வளர்ப்பு நாய்கள் களைப்படையும் போது மிகுந்த அக்கறை எடுக்கும் பெண்கள் தொலைக்காட்சி, ரேடியோ கேட்பதை விட்டுவிட்டு நாய் அருகிலேயே அமர்ந்து கவனிக்கிறார்கள். சில நேரங்களில் பணிக்கு செல்லாமல் விடுமுறையும் எடுக்கிறார்கள். பிரிட்டனின் தென் மேற்குப் பகுதியில் இரண்டாயிரம் நாய்களின் பெண் உரிமையாளர்களின் 18 சதவிதம் பேர் தங்களது நாய்களிடம் அடிக்கடி பேசுகின்றனர்.

தங்களது கணவர் அல்லது ஆண் நண்பரிடம் பேசும் நேரத்தை விட அவர்களின் வளர்ப்பு பிராணிகளிடம் பேசி மகிழ்ச்சி அடைகின்றனர். நோயுற்று இருக்கும் நாய்களைக் கவனிக்க சர்வேயில் கலந்து கொண்ட பெண்களில் 42 சதவிதப் பெண்கள் பணிக்கு செல்லாமல் அவற்றை பராமரிப்பில் கவனம் செலுத்துவது தெரியவந்தது.

வளர்ப்பு நாய்களிடம் தொலைக்காட்சியில் பார்க்கும் அனைத்து விவரங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள் எனப் பெண் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# அன்பாலும் ஆபத்தா....?




பெற்றவர்கள் [illegible] பாதிக்கப்படுகின்றனர் என்று [illegible] ஆய்வு கூறுகிறது. [illegible] [illegible] 111 [illegible] நடத்தப்பட்டது. [illegible] 100 [illegible] ஆய்வில் கூறப்பட்டுள்ளது. [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## தனிமை



பிரிந்த காலம் போதுமடி
தனிமைக் தீ
என்னை எரிக்குதடி
பறந்து வந்து விடு
என்னிடம் - இல்லையேல்
பறந்து போய் விடும்
என் உயிர்
இவ்வுலகை விட்டு

நா.சஜந்தங்க்.
பாண்டியன்குளம்.

## அன்றும் இன்றும்...!




அன்று...!
என் மனம்
ஆழிப்பேரலையாய்
ஆர்ப்பரித்த போது
அருகிருந்து
என்
வாழ்வில்
அமைதிப் புறா...
பறக்கவிட்...

இன்று...!
சதிகாரக் கூட்டம்
உன்னையும் என்னையும்
பிரித்து - தம்
மோசப் பிடிக்குள் வைத்து...
எங்கள்
பிரிவின் துயரை
வேடிக்கையாய் பார்த்து
நிற்கிறது....!

து.திலக்,
யாழ்ப்பாணம்.

## ஆசான்களே!



அறிவை மட்டுமல்ல
அன்பையும் போதியுங்கள்
அகிலத்தில் உயர்ந்திட
ஏணியாய் இருந்திடுங்கள்


கல்வியோடு கலைகளையும்
கற்றுக் கொடுத்திடுங்கள்
காட்டுமிராண்டித் தனத்தை
முளையிலேயே களைந்திடுங்கள்

பழந்தமிழர் பண்பாட்டை
பாங்குடனே சொல்லிடுங்கள்
தமிழர் என தலை நிமிர்ந்து
வாழ வழி காட்டுங்கள்

நண்பர்களாய் பழகியே
நல்வழிப்படுத்திடுங்கள்
நாளைய சந்ததியை
நாவிலத்தில் உயர்த்திடுங்கள்

ஆஷா,
யாழ்ப்பாணம்.

## பெண்ணே புறப்படு



பயந்து பயந்து வாழும் வாழ்க்கையா?
பலமின்றி போகும் நிலையால்
பலவீனத்தை அடியோடு அகற்றிடு
பாதி நீண்ட கண்ணிமைகளாக
பாரினில் அடிமைத் தனத்தை தகர்த்து
பெண்ணுரிமைக்காக
பெண்ணே புறப்படு........!

சா.சிந்துஜா,
கோண்டாவில்.

## கலைந்திடும் கனவுகள்



ஆசையாசையாய்
ஓர் குழந்தையை
ஆனந்தமாய்
பெற்றெடுத்து
அகிலம் போற்ற
அறிவூட்டி அன்பூட்டி
வளர்த்தெடுக்கிறார்கள்
அன்பு பெற்றோர்
ஆனால்
ஆசை மகனோ
அறியா ஓர் உயிருக்கு இதயத்தை
அளித்துவிட்டு
அவளுக்காய் சொத்துக்களை
அழித்து - அவனும்
அழிந்து பெற்றோரின்
ஆசைக் கனவுகளை
கலைத்து விடுகிறான்
ஆண்டவா! ஏனிந்த நிலை?

வண்ணமதி,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.


## பெண்ணே புறப்படு

சமத்துவம்
உறங்கிவிட்டது என்று
உடைந்திடாமல் சாதிக்கத்
துணிந்தவளாய்
நம்பிக்கையை உரிமைப்படுத்து...

சடங்கையும்
சம்பிரதாயத்தையும் கடந்து
அறிவால் அறிவியலையும் மிஞ்சிவிடு
ஆயிரம் உறவுகள் உன்னை பேசும்...

வசந்தங்கள்
புது முகவரியாக முயற்சியை
மூலதனமெனக் கொண்டு கனவுகளுக்கு
உயிர்கொடு.

- ஜே.எஸ்.ராஜ்,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.



## கலங்காமல் காத்திரு



காதல் தேசத்தின்
கன்னித் தீவில் மலர்ந்த
காதல் ரோஜாவே!
நீ எய்த காதல் அம்புகள்
என் இதயத்தை வருடுகையில்
உனைத்தேடி ஓடி வந்தேன்
ஆனால் உன் காவல் முட்கள்
உனை நெருங்க முடியாமல்
எனைக்கடித்து நிறுத்துகிறதே!
என் உடல் முழுவதும் காவல் முட்கள்
காயத்தினை ஏற்படுத்தினாலும்
என் இதயக் காயத்திற்கு மருந்திட
எதிர்ப்புகளையும் எதிர்த்து நான்வருவேன்
கலங்காமல் காத்திரு அன்பே
காயத்திற்கு மருந்துடன்

எஸ்.எம்.புவன்,
வட்டக்கச்சி.

**கவிதைப்புனல் பகுதிக்கு நீளமான கவிதைகளே அதிகம் வருவதால், அவற்றைப் பிரசுரிக்க முடியாதுள்ளது. உங்கள் கவிதைகளை இருபது வரி களுக்குள் வரக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விமர்சனம்



காவல் துறையில் ஐ.பி. எஸ், பதவியில் இருக்கும் விஷால் (பிரபாகரன்), சிறு வயதில் தொலைத்து விட்ட தன் தங்கையை தேடி, தூத்துக்குடியிலிருந்து கொல்கத்தாவிற்கு போகிறார். அதற்கு முன்பு தூத்துக் குடியில் தாதாவாக வலம் வரும் ஷாயாஜி ஷிண்டேவை அடித்து, உதைத்து சிறைக்கு அனுப்பி விட்டு கொல்கத்தாவிற்கு போகிறார். சிறுவயதில் வறுமையின் காரணமாக, தன் தங்கையாவது நன்றாக இருக்கட்டுமே என்று மிஷினரி ஒன்றில் சேர்த்து விட்டுப் போகும் விஷாலின் மனதை புரிந்து கொள்ளாமல் அவரை வெறுக்கிறார் அவரது தங்கையான பூனம் கவுர். ஜெயிலில் இருந்து வெளியே வரும் ஷாயாஜி ஷிண்டே, கொல்கத்தாவில் இருக்கும் விஷாலின் தங்கையைப் பற்றி அறிந்து கொண்டு, அங்கே தன் படை பரிவாரங்களுடன் வருகிறார். பூனம் கவுரின் தோழியாக வருகிறார் சமீரா ரெட்டி. தங்கையை சந்திக்க வரும் விஷால் மீது காதல் கொள்கிறார் சமீரா. இதனிடையே கொல்கத்தா வரும் ஷாயாஜி ஷிண்டே, அங்கே உள்ள லோக்கல் ரவுடியுடன் சேர்ந்து கொண்டு, விஷாலின் தங்கையையும், சமீராவையும் சிறைபிடிக்கிறார். விஷாலோடு அவரது தங்கை சேர்ந்தாரா? சமீராவின் நிலை என்ன? வில்லன்களின் கதி என்ன? என்பதை நீங்களே யூகித்து விடும் அளவிலான கிளைமாக்ஸை சொல்லி படத்தை முடித்திருக்கிறார்கள். இப்படத்தை விஷாலின் அண்ணன் தயாரித்திருப்பதால் விஷாலின் ஆட்டம் அதிகமாகவே இருக்கிறது. அடிக்கடி சண்டை போடுகிறார். அவ்வப்போது சமீராவுடன் ஆடிப் பாடுகிறார். சண்டை காட்சிகளில் நன்றாகவே செய்திருக்கிறார். இவர் உயரத்திற்கு பொருத்த மான சமீரா ரெட்டியை ஹீரோயினாக்கியது நடனக் காட்சிகளில் விஷாலுக்கு நிம்மதி கொடுத்திருக்கும். விவேக் யாரை யாவது இமிடேட் செய்து இரிடேட் செய்யாமல் நடித்தது நலம். இவர் பேசுவதை விட உடலெங்கும் பவுடரை சுத்திக் கொண்டு இளைய திலகம் பிரபு போல இவர் செய்யும் சேட்டைகள் சிரிக்க வைக்கின்றன. படத்தின் முதல் பாதி நகர்வதற்கு இவர் காமெடி கொஞ்சம் கை கொடுக்கிறது. விஷாலின் தங்கையாக வரும் பூனம் கவுர் அழகாக இருப்பதோடு நடிக்கவும் செய்கிறார்.. ஷாயாஜி ஷிண்டே நன்றாக நடித்திருந்தாலும் வட இந்திய தோற்றம் அவருடைய தூத்துக்குடி வில்லன் கேரக்டரை துவம்சம் செய்கிறது. விஷால் வில்லனுக்கு விஷ ஊசி போட்டதாக சொல்லி உயிரை காப்பாற்றி கொள்வதற்காக அலைய விடும் காட்சிகளில் ஊர்வசி, ஸ்ரீமன், பாண்டு இவர்கள் மூவரையும் வைத்து பிரபு தேவா நன்றாக கிச்சு கிச்சு மூட்டுகிறார். கதை பழசாக இருந்தாலும் அதை புதுசு போல விறுவிறுப்பாக காட்டுவதே ஆக்ஷன் படங்களின் ஆணிவேர். பழைய கதைக்கு பிரபு தேவா தன் பாணியில் காமெடி, ஆக்ஷன் மருந்தை ஆங்காங்கே கலக்கியிருந்தாலும் நிறைவாக இல்லாததால் வெடி முழுசா வெடிக்கவில்லை. இந்த மாதிரி படங்களில் லாஜிக் பார்க்க கூடாது என்றாலும் போலீசாக இருந்து கொண்டு ஒரு தக வலும் சொல்லாமல் தங்கைக்காக திடீரென விஷால் கொல்கொத்தா சென்று விடுவது, கிளைமாக்சில் ஏ.சி.பி. யான விஷால் இறந்து விட்டதாக வில்லன் டி.வி.யில் விளம்பரம் கொடுத்து அவர் தங்கையை பிடிப்பது என்று லொஜிக் சொதப்பல்கள் ஏராளம். பிரபு தேவா - விஜய் ஆண்டனி கூட்டணியில் பாடல்களும் சொல்லும்படி பெரிதாக இல்லாததும் ஒரு குறை. ராஜசேகரின் ஒளிப்பதிவு அருமை. இரண்டே மணி நேரத்தில் முடிந்து விடுவதால் பொழுதுபோக்கை மட்டும் மனதில் வைத்து பார்ப்பவர்களுக்கு படம் ஓரளவு பிடிக்கலாம்.

## ராணாவில் ஹிந்திப் படம் கேன்சல்:



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மூன்று வேடங்களில் நடிக்க இருக்கும் திரைப்படம் 'ராணா'. இப்படத்தின் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் தீபிகா படுகோனே, ஹிந்தியில் வரிசையாக பல படங்களை நடிப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார். இப்படி தொடர்ச்சியாக ஒப்பந்தம் ஆனால் 'ராணா'வில் நடிப்பது எப்படி என்று கேட்டதற்கு, சூப்பர் ஸ்டாரின் 'ராணா' தொடங்கும் ...த்தில் ஏதாவது ஒரு இந்தி படத்தை ரத்து செய்து விட்டு நடிக்க வந்துவிடுவேன் என்றார்.

## பாலா இயக்கத்தில் அதர்...



நடிகர் முரளியின் மகன் அதர்வா. தற்போது, முப்பொழுதும் உன் கற்பனைகள் படத்தில் நடித்து வருகிறார். அவன் இவன் படத்துக்கு பிறகு புது முகங்கள் நடிக்கும் படத்தை பாலா இயக்... தாக கூறப்ப... டது. இப்ப... அதர்வா நடி... கும் படத்தை... இயக்குகிறா... ஜி.வி.பிரகா... மார் இசை அமைக்கிறா... ஹீரோயின் உட்பட பல புதுமுகங்கள் என்று கூறப்படுகிறது.

## 'உயிரின் எடை 21 அயிரி' படத்துக்கு 42 கட்



எ ட்ரீம் வேர்ல்ட் தயாரிப்பில் ஏகன் இயக்கி ஹீரோவாக நடித்துள்ள படம் உயிரின் எடை 21 அயிரி. வினிதா ஹீரோயின். படத்துக்கு தணிக்கை குழுவினர் 42 இடத்தில் கட் கொடுத்துள்ளனர். ஊரே நடுங்கும் தாதா படுத்த படுக்கையாகி கிடக்கும்போது உயிரின் மதிப்பை, அன்பை எப்படி உணர்கிறான் என்பதுதான் கதை. ஆனால் தணிக்கை குழு 42 இடத்தில் கட் கொடுத்துள்ளதால் அந்த பணிகளை முடித்து 17ம் தேதி வெளியிட தீர்மானித்திருக்கிறோம். பெண்களின் தலைமுடியை பிடித்து இழுக்கும் காட்சிக்கு கூட கட் கொடுத்திருக்கிறார்கள் என்று இயக்குனர் ஏகன் கூறியுள்ளார்.

## டுவைன் லவ்வர்ஸ் -2

14 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த டிவைன் லவ்வர்ஸ் இந்திப் படத்தை இயக்கிய சுபாஸ், இப்போது அதே படத்தின் இரண்டாம் பாகத்தை டிவைன் லவ்வர்ஸ்-2 என்ற பெயரில் இயக்கி உள்ளார். முதல் பாகத்தை போன்ற கதைதான். சிற்பியால் கொல்லப்படும் காதலர்கள், மீண்டும் பிறந்து தங்கள் காதலில் வெற்றி பெறுவது தான் கதை. இந்த பாகத்தில் காதலர்கள் லண்டனில் பிறக்கிறார்கள் என்பது தான் வித்தியாசம். பாபிகான், மோனலிசா மாடல்களாகவும், மிலிந்த் குனான்ஜி சிற்பியாகவும் நடித்துள்ளனர். இப்படம் வரும் 14ம் தேதி வெளிவருகிறது.



## சிம்புவுடன் ஹன்சிகா



சிம்பு, ஜெய் இணைந்து நடிக்கும் படம் 'வேட்டை மன்னன்' இதன் முதல்கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடந்தது. இந்தப் படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக தீக்ஷா சேத் நடித்து வருகிறார். வேட்டை மன்னனில் இரண்டாவது நாயகியாக ஹன்சிகாவையும் தற்போது ஒப்பந்தம் செய்துள்ளனர். இவர் யாருக்கு ஜோடி என்பது தெரியவில்லை.

## பிரகாஷ்ராஜ் படத்தில் பிரபுதேவா!



பிரகாஷ்ராஜ் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் 'தோனி' என்ற பெயரில் ஒரு படத்தினை இயக்கி வருகிறார். பிரபுதேவா, பிரகாஷ்ராஜ் இருவருமே நெருங்கிய நண்பர்கள். நட்பின் அடிப்படையில் இப்படத்தின் ஒரு பாடலுக்கு பிரபு தேவா நடனமாட உள்ளாராம்.

## நடிகர்களை பற்றி புட்டு புட்டு வைக்கும் த்ரிஷா...!



தமிழில் கிட்டத்தட்ட முன்னணி நடிகர்கள் அனைவருடனும் ஜோடி போட்டவர் த்ரிஷா. அஜித்துடன் கிரீடம், மங்காத்தா போன்ற படங்களில் நடிச்சிருக்கீங்க, அஜித்தை பற்றி என்ன நினைக்கிறீங்க என்று கேட்டபோது அஜித் சார், ஸ்ட்ரெய்ட் பார்வர்ட். எதையும் முகத்துக்கு முன் நின்று தைரியமாக பேச க்கூடியவர் என்கிறார். சரி விஜய்யுடன் கில்லி, திரு ப்பாச்சி, ஆதி, குருவி என்று நான்கு படங்கள் நடித் துள்ளீர்கள். அவரை பற்றி சொல்லுங்கள் என்றால் சட்டென்று விஜய் ரொம்ப ஸ்டைலான நடிகர் என்கிறார். அப்போ சீயான் விக்ரம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்றால், அவர் திறமைகளின் மொத்த உருவம் என்று பளிச்சென்று [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ம் கேன்சல்: தீபிகா



...த் மூன்று ...க் ...ாக ...ரு ...ல ...த் ...இப் ...ந் ...நடி ...டதற்கு, ...' தொடங்கும் பட்ச ...டத்தை ரத்து செய்து ...வேன் என்றார்.

## ...ல் அதர்வா

பாலா இயக்குவதாக கூறப்பட்டது. இப்போது, அதர்வா நடிக்கும் படத்தை இயக்குகிறார். ஜி.வி.பிரகாஷ்குமார் இசை அமைக்கிறார். ஹீரோயின் உட்பட பலர் புதுமுகங்கள் என்று கூறப்படுகிறது.

## இயக்குனர்கள் கையில் ஹீரோயின் இமேஜ்

நாடோடிகள் படத்துக்குப் பிறகு தமிழில் பெரிய வாய்ப்புகள் அமையவில்லை. நீண்ட காத்திருப்புக்குப் பிறகு கிடைத்த 'எங்கேயும் எப்போதும்' அதற்கான பலனைக் கொடுத்திருக்கிறது. தற்போது மலையாளத்தில் 5 படத்தில் நடித்து வருகிறேன். ஒரு ஹீரோயினின் இமேஜை மாற்றுவதும், உயர்த்துவதும் இயக்குனர்கள்தான். பேமிலி இமேஜ் ஹீரோயினை கமர்சியல் ஹீரோயின்களாக மாற்றுவது இயக்குனர்கள்தான் என்று அனன்யா கூறியுள்ளார்.



## ஜோதிர்மயிக்கு விவாகரத்து



ஜோதிர்மயி தனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றிருக்கிறார். சுந்தர் சி. ஹீரோவாக அறிமுகமான தலைநகரம் படத்தில் ஜோதிர்மயி ஹீரோயின் ஆனார். அவருக்கும் அவரது கணவருக்கும் இடையில் சண்டை இருந்து வந்தது. இந்நிலையில் விவாகரத்து கோரி ஜோதிர்மயியின் கணவர் நீதிமன்றத்தில் மனு அளித்தார். ஜோதிர்மயியும் விவாகரத்துக்கு சம்மதம் தெரிவித்ததால் நீதிமன்றம் இருவருக்கும் விவாகரத்து வழங்கி உத்தரவிட்டுள்ளது.



## வதந்தியை நம்ப வேண்டாம்

ராணா படம் கைவிடப் பட்டதாக எழுந்த வதந்தியை நம்ப வேண்டாம் என்று இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமாரும் படத்தை தயாரிக்கும் இராஸ் நிறுவனமும் சொல்லாமல் சொல்லி உள்ளனர். சூப்பர் ஸ்டார் பூரண நலம் பெற்ற பிறகே படப்பிடிப்பை தொடங்க உள்ளோம். அதனால்தான் இந்த தாமதம் என்று தெரிவித்துள்ளார் கே.எஸ்.ரவிக்குமார். டிசம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## அமளி துமளி ஆனது நண்பா

கே.எஸ்.அதியமான் இயக்கத்தில் நகுல், சாந்தனு, சுப்ரமணியபுரம் ஸ்வாதி, சுஜா நடிக்கும் படத்துக்கு நண்பா 2 இடியட்ஸ் என்று பெயரிடப்பட்டிருந்தது. இதுவரை ஷூட்டிங் நடந்திராத பிஜு தீவுகளில் படப்பிடிப்பு நடந்து முடிந்தது. இந்நிலையில், படத்தின் பெயரை மாற்றும்படி பலர் வற்புறுத்தினர். இதையடுத்து, அமளி துமளி என்று பெயர் சூட்டியுள்ளார் அதியமான்.





மோர் தன் எனிதிங் இன் த வேர்ல்ட்

அலிசியாவும் அம்மாவும் குட்டி அபார்ட்மென்ட்டுக்கு குடி வருகிறார்கள். பக்கத்து வீட்டில் ஒரு முதியவர். அவரது முகமே அலிசியாவுக்கு மிரட்சியூட்டுவதாக இருக்கிறது. அவளும் அம்மாவும் கடற்கரையில் எடுத்துக்கொண்ட அழகான படம், வீடு மாற்றும்போது தொலைந்து போகிறது. இதற்கும் அந்த முதியவருக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று குழம்பிப்போகிறாள் அலிசியா. இரவுப்பொழுதில் உடல் நலக்குறைவு காரணமாக அந்த முதியவர் எழுப்பும் சத்தங்களும் அலிசியாவை பயமுறுத்துகின்றன. இந்த விஷயங்களை வகுப்புத்தோழியிடம் கூறுகிறாள். அவள், இது ரத்தக் காட்டேரி வேலைதான் என்று இன்னும் கொஞ்சம் மிரட்டி, தன் அக்காவிடம் அழைத்துப்போகிறாள். டீன் ஏஜில் இருக்கிற ஜாலி அக்காவுக்கு, தங்கையை இப்படி ஏதாவது சொல்லி பயத்தில் வைப்பதே வாடிக்கை. கூடவே இன்னொரு குட்டிப்பெண்ணும் சேர்ந்து கொண்டால்? எதை எதையோ சொல்லி மேலும் மேலும் அச்சப் படுத்துகிறாள் அந்த அக்கா! கணவனைப் பிரிந்து, 7 வயது குழந்தையோடு வாழும் தனிமை வாழ்க்கையே அலிசியாவின் அம்மா எமிலியாவுக்குச் சொந்தம். அலுவலக அழுத்தம், மெக்சிகோவின் அளவுக்கு அதிக டிராஃபிக் நெருக்கடி, ஒற்றை ஆளாக குழந்தையைக் கவனித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். எல்லாம் சேர்ந்து மனச்சோர்வுக்கு ஆளாகிறாள் அவள். தனிமைத் தவிப்புக்கு மருந்தாக ஆண் துணை அவசியமென நினைக்கிறாள். நண்பன் ஒருவன் இரவு நேரங்களில் வீட்டுக்கு வருகிறான். ஏற்கனவே ரத்தக்காட்டேரி பயத்தில் இருக்கிற அலிசியாவுக்கு புதுவரவுகளும் மிரட்சியையே தருகின்றன. அம்மாவை ரத்தக்காட்டேரி ஏதேனும் செய்துவி டுமோ என்று கலக்கமாகிறாள். பக்கத்து வீட்டு முதியவர்தான் ரத்தக்காட்டேரி என்று கற்பனை செய்கிறாள். எப்போதும் அம்மா தன் கூடவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். தன் புதுத்துணையோடு இனிமையாகச் செலவிட வேண்டிய நேரத்தில், இவள் இப்படி தொந்தரவு செய்கிறாளே என்று எமிலியா எரிச்சலாகிறாள். பெரியவர்களுக்கென ஒரு வாழ்க்கை இருக்கிறது. அது உனக்குப் புரியாது. புரிய வைக்கவும் முடியாது. போய் தூங்கு. தொந்தரவு செய்யாதே என்று பலவிதமாகச் சொல்லிப் பார்க்கிறாள். ம்ஹூம்... அலிசியா கேட்பதாக இல்லை! இதற்கிடையே அந்தத் துணைவனோடு சண்டை ஏற்பட்டு, இன்னொரு புது உறவுக்குள் தள்ளப்படுகிறாள் எமிலியா. அலிசியாவின் ரத்தக் காட்டேரி கற்பனைகள் விரிந்து அவளின் தூக்கம் தொலைகிறது. தோழியின் அக்கா ஒரு சிலுவைச்சங்கிலியைக் கொடுத்து, இதை ரத்தக்காட்டேரி முதியவரின் உடலில் மாட்டிவிட்டால் தொல்லைகள் தீரும் என்று ஆலோசனை சொல்கிறாள். நள்ளிரவில் யாரும் அறியாமல், பலமாடிக் கட்டிடத்திலுள்ள தன் வீட்டு ஜன்னல் வழியாக வெளியேறி, அபாயகரமான முறையில் அடுத்த வீட்டின் உள்ளே நுழைகிறாள். படுக்கையில் கண் மூடிக் கிடக்கிறார் முதியவர். ஒருவழியாக சிலுவைச்சங்கிலியை அவர் மீது போட்டுவிட்டு, திரும்பிப் பார்க்கிறாள். அவளும் அம்மாவும் கடற்கரையில் எடுத்துக்கொண்ட அந்தப் படம் மேஜையில் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு வந்த வழியே வீடு திரும்புகிறாள். படுக்கையில் விழுந்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள். இந்தச் சம்பவத்துக்கு முன் வரை அம்மா என்ன கேட்டாலும் பதில் பேசாமல் மௌனமாகவே இருக்கிறாள் அலிசியா. மகளின் இறுக்கமும் ஆண் நண்பர்களின் சுயநலமும் ஒரு கட்டத்தில் எமிலியாவுக்குப் புரிந்துபோகிறது. இந்த உலகத்தில் மற்ற எல்லாவற்றையும் விட முக்கியமானது தன் குழந்தை தான் என்று தீர்மானிக்கிறாள். தெளிவான முடிவெடுக்கிறாள். அலிசியாவை கடற்கரைக்கு அழைத்துப் போகிறாள்... உன்ன விட உயர்ந்தது ஒண்ணுமில்ல! இதுதான் இந்தப்படத்தின் தலைப்பும் கூட (மோர் தன் எனிதிங் இன் த வேர்ல்ட்)! மெக்சிகோ இரட்டை இயக்குநர்கள் ஆண்ட்ரஸ் லியான் பெக்கர் ஜேவியர் சோலார் அளித்த இப்படம் மான்ட்ரியால், மியாமி, கோவா பட விழாக் களில் விருதுகளையும் பாராட்டுகளையும் வென்றிருக் கிறது.



### பிறமொழித் திரைப்படம்

## விமல் ஜோடியானார் தீபா ஷா



இயக்குனர் எஸ்.நந்தகோபால் தயாரிக்கும் படத்தில், விமல் ஹீரோவாக நடிக்கிறார். 'யுத்தம் செய்' படத்தில் அறிமுகமான தீபா ஷா, விமல் ஜோடியாக நடிக்கிறார். ஒளிப்பதிவு, ராஜேஷ் யாதவ். இசை, பைசல். பாடல்கள், விவேகா. மிஷ்கின் உதவியாளர் ஆர்.ரவி இயக்குகிறார். காதல் கதை கொண்ட இப்படத்தின் ஷூட்டிங் சென்னையில் நடந்து வருகிறது.

## தியேட்டர் பற்றாக்குறை காரணமாக தனுஷ் சிம்பு படங்கள் தாமதம்!



தீபாவளிக்கு வெளியாவதாக அறிவிக்கப்பட்டிருந்த தனுஷின் 'மயக்கம் என்ன' மற்றும் சிம்புவின் 'ஒஸ்தி' படங்கள், தியேட்டர் பற்றாக்குறை மற்றும் கடும் போட்டி காரணமாக விலகிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இந்த தீபாவளிக்கு விஜய் நடித்த வேலாயுதம், சூர்யா நடித்த ஏழாம் அறிவு உள்ளிட்ட படங்கள் வெளியாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில்

■ கனகேஸ்வரி பாலசிங்கம்

சிறுகதை

அழகான காலைப்பொழுதின் ஒளியோடும், ஒலிகளோடும் பிறந்தது அன்றைய நாள். வங்கி ஒன்றிலே கடமை புரியும் குமரன், அவர் மகள் கனிமொழி, ஒரே மகன் கனிஷ்ரன் என அழகான பிள்ளைகளுடன் சிறு அளவான குடும்பம் அருந்ததியினுடையது. க.பொ.த சாதாரணதரம் வரை கற்றவள். அழகும் வசதியும் வங்கி அதிகாரியை கணவராக அடைய வழி செய்தது. தமிழ்ப் பெண்ணாக இருந்தும் தான் என்ற ஆணவமும் தனக்கு எவ்வித குறையுமில்லை என்ற கர்வமும் அவளிடத்தில் குறைவில்லை. அவளின் ஒரே செல்வமகள் கனிமொழி இவ்வாண்டு ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கின்றாள். அதனால் ஒருவித அழுத்தமும் படபடப்பும் அருந்ததியிடத்தில் உண்டானது. தந்தையின் அறிவோடும், தாயின் அழகோடும் வளர்ந்த கனிமொழியும் சுட்டித்தனம் நிறைந்த அழகான பெண் பிள்ளைதான். படிப்பிலும் கெட்டிக்காரி. கனிமொழியின் வயதே ஆன ரேகா மீதும் அன்பாகப் பழகினாள். ரேகாவின் வறுமை கனிமொழியின் பிஞ்சு உள்ளத்திலேயும் வேதனையை விளைத்தது. ரேகாவின் பெற்றோர் வறுமையிலும் செம்மையாக வாழ்பவர்கள். கஷ்டப்பட்டு வேலை செய்து தனது மகளைப் படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்பது அவர்களின் ஆசை. அதனால் ஓய்வு ஒழிவின்றி வேலை செய்து மகளைப் படிப்பித்தனர்.

அன்றைய நாள் அருந்ததியும் தனது கவலைப் பிள்ளைகளுடன் அயலில் உள்ள விநாயகர் ஆலயத்திற்கு சென்றாள். அங்கே பெற்றோருடன் வந்திருந்த ரேகாவைக் கண்ட கனிமொழி மிகுந்த சந்தோஷத்துடன் ரேகாவை நோக்கி ஓடி அவளைக் கட்டி அணைத்து மகிழ்ச்சி கொண்டாள்.

"அம்மா இவதான் கனிமொழி எனது தோழி" என்றாள் ரேகா. ரேகாவின் தாய் ராணி அழகாக படித்த பெண்ணாக கனிமொழியின் தாயைப் போலவே இருந்தாள். இரு குடும்பமும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டாலும் அருந்ததிக்கோ ரேகா மீதும் அவளது குடும்பத்தின் மீதும் விருப்பம் ஏற்படவில்லை. தங்கள் வாழ்வு உயர்ந்த தேவி என்று எண்ணியவாறு ரேகாவின் தாய் தந்தையரைக் குறைவாக மதிப்பிட்டாள். மகள் கனிமொழியை நிறைய இடங்களில் ரியூசனுக்கு விட்டு படிப்பிக்க வேண்டும் என்ற ஆசையும் தகுதி குறைந்த பிள்ளையோடு பழகினால் தங்கள் பிள்ளையின் படிப்புக்கு இடைஞ்சல் வந்து விடும் என்ற எண்ணமும் மேலோங்க, ரேகாவின் தொடர்பை முளையிலேயே கிள்ள வேண்டும் என விரும்பினாள். அதனைக் கேட்ட குமரன் "அருந்ததி ஏன் இப்படிக் கதைக்கிறீர். அந்தப் பிள்ளையும் படிப்பில் கெட்டிக்காரி என்றுதானே கனிமொழி சொல்கிறா. படிக்கிற பிள்ளையுடன் எங்கட பிள்ளையும் பழகினால் ஒன்றும் கெட்டுவிடாது" என்று கூறினான். ஆனால் அருந்ததிக்கு அவரின் வார்த்தைகளால் சமாதானம் ஏற்படவில்லை. எப்படியாவது கனிமொழி ரேகாவுடன் சேர்வதைத் தடுக்க வேண்டும் என உறுதிபூண்டாள். இவற்றையெல்லாம் அறியாத அந்தப் பிஞ்சு உள்ளங்கள் விநாயகரை வணங்கி கல்விக்கும் முன்னேற்றத் துக்கும் உறுதுணையாக இருக்க வேண்டினர்.

வீடு வந்த கனிமொழியை ரேகாவுடன் சேரவிருந்த அனைத்து தந்திரங்களையும் கையாண்டு தனது ஆசையை பிள்ளையின் மேல் திணித்தாள். தாயின் வார்த்தைகள் கனிமொழியின் மனதை வேதனைப்படுத்தியது.

புலமைப் பரிசில் பரீட்சை என்றாலே அதற்கான கற்பித்தலுடன் பாடசாலைகளும் ரியூசன் சென்ரர்களும் புதிய உத்வேகத்துடன் ஆரம்பமாகின. காலை ஏழு மணியில் இருந்து காலை வகுப்பு, பகல் நேர வகுப்பு, மாலை வகுப்பு என மாலை நான்கு மணி வரை ஓய்வின்றி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. பெற்றோரும் பாதுகாவலர்களும் தங்களுக்கேயான பரீட்சை போலப் பரபரப்புடன் காணப்பட்டனர். ரியூசன் சென்ரர்களும் பத்திரிகைகள் மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் தமது ஆசிரியர்களின் பெயர்களையும், போன ஆண்டு ரியூசன் சென்ரர்களில் தமது மாணவர்கள் பெற்ற புள்ளிகளையும் தேர்ச்சியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையினையும் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்தனர். அவற்றைப் பார்த்தும் கேட்டும் பரபரப்படைந்த அருந்ததி செலவையோ அலைச்சலையோ பொருட்படுத்தாது தனது மகள் கனிமொழியைப் பல ரியூசன் சென்ரர்களிலும் சேர்த்துப் படிப்பிக்கத் தொடங்கினாள். கனிமொழியோ தனது ஆற்றலுக்கும் மேலாக உடலாலும் உள்ளத்தாலும் தன்னை வருத்திப் படிக்கத் தொடங்கினாள். ரேகாவை கண்டபடி பார்க்கக் கூடாது, பழகக்கூடாது என்ற அருந்ததியின் தடை அவர்களைச் சந்திக்க விடவில்லை. ஆனால் ரேகாவின் பெற்றோர் கனிமொழியை தமது பிள்ளையைப்போல் நேசித்தார்கள். கனிமொழியோ தனது தாயின் ஆசையை நிறைவேற்ற எல்லா ரியூசன் சென்ரர்களுக்கெல்லாம் சென்று படித்தாள். ஓடி ஓடிக் கற்றலில் ஈடுபட்டாலும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது எவ்வாறு என்றறியாது குழப்பமடைந்தாள். "இந்த அம்மாவோடு பெரிய கஷ்டமாக உள்ளது. ஸ்கூலுக்குப் போய் வீட்டிலும் படித்தாலே போதுமே, ஆனால் அம்மா இதற்கு விரும்பமாட்டாவே" என்று மனதுக்குள் கவலைப்பட்டாள்.

படிப்பு படிப்பு என்று ஓடித்திரிந்தாள் சுயம்படு... [illegible] குறைந்து உடலும் மெலிந்து காணப்பட்டாள் கனிமொழி. தந்தையான குமரனும் கனிமொழியின் நிலை குறித்து எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அருந்ததி கேட்கவில்லை. மகளின் ஆரோக்கியத்தைக் கவனிக்காது எப்படியாவது பார்க்க தனது மகளை அதி கூடிய புள்ளியினைப் பெறவேண்டும் என்ற பேராசை அவளை விடவில்லை.

பாடசாலையில் சொல்லிக்கொடுத்ததையும் படித்து, வீட்டுக்கு அயலில் இருந்த பல்கலைக் கழகத்தில் படிக்கும் விநோவிடமும் வேண்டிய போது சந்தேகத்தினைக் கேட்டு நிவர்த்தி செய்து படித்த ரேகா, அதிகாலையில் எழுந்து தாயின் உதவியுடனும் படிப்பை மேற்கொண்டாள். தமது பிள்ளையின் திறமையில் நம்பிக்கை வைத்த ரேகாவின் பெற்றோர் மகளை வருத்தாமல் ஓரளவுக்கு விளையாடவும் ஆறுதலாக சாப்பிடவும் இடம் கொடுத்தனர். பரீட்சை பற்றிய பயம் இன்றி மகள் எவ்வாறு நடந்து கொள்வது என்று ரேகாவின் தாய் ராணியும் தனது அறிவுக்கு எட்டியவரை சொல்லிக் கொடுத்தாள்.

போக்குவரத்துப் பாதைகளில் கனிமொழியும் ரேகாவும் பார்த்துக் கொள்வர். அதிக நேரம் ரேகாவுடன் பேச அருந்ததியின் கட்டளைகள் கனிமொழியைத் தடுத்தன. அந்தச் சிறு உள்ளங்களின் மாசற்ற பாசத்தால் சில நிமிட நேரம் என்றாலும் கதைத்துக் கொள்வார்கள். தமது படிப்பு பற்றியும், ஒருவருக்கொருவர் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்கள் பற்றியும் கேட்டு அறிந்து திருப்திப்பட்டுக் கொண்டார்கள். கனிமொழியும் தனது தாயாருக்கு தெரியாமல் பயிற்சிப்புத்தகங்களை ரேகாவுக்குக் கொடுத்து உதவி செய்தாள். ஆனால் கனிமொழி நல்ல மனதுள்ள பிள்ளை அவள் மீது கற்றல் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட சுமை அதிகரித்ததால் உள்ளமும் உடலும் தளர்ந்து போய் இருந்தாள்.

பரீட்சை நாள் வந்தது. கனிமொழி மிகுந்த பயத்துடனும் படபடப்புடனும் காணப்பட்டாள். "குறைவான புள்ளிகள் எடுத்தால் அம்மாவின் முகத்தில் விழிக்க முடியாதே" என்று யோசித்தாள். பெற்றோரின் ஆசையையும் தனது எதிர்காலத்தையும் நினைத்து குழப்பமான தெளிவற்ற நிலையில் பரீட்சை எழுதிவிட்டு வந்தாள். ரேகா தன்னால் இயன்றளவுக்கு மிகுந்த ஆர்வத்துடனும் தாய் ராணி கொடுத்த தைரியத்துடனும் நன்றாக பரீட்சை எழுதி விட்டு வந்தாள்.

மூன்று மாதங்கள் கடந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. எவருமே எதிர்பார்க்காத வகையில் ரேகா பாஸாகி இருந்தாள். அந்த மாவட்ட மட்டத்தில் அதி கூடிய புள்ளிகளை எடுத்து முன்னணியில் திகழ்ந்தாள். தாயும் தகப்பனும் சந்தோசக் கடலில் ஆழ்ந்திருந்தார்கள். கனிமொழியோ அருந்ததியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாவிட்டாலும் பரீட்சையில் பாஸ் என்று சொல்லுமளவுக்கு புள்ளிகள் எடுத்திருந்தாள். தனக்குக் கிடைத்த குறைவான புள்ளிகள் குறித்து கவலைப்படாது ரேகா மிகவும் நன்றாக பாஸ் பண்ணியமைக்கு விநாயகருக்கு நன்றி கூறி வணங்கினாள்.

பணத்தால் படிப்பை விலை கொடுத்து வாங்க இயலாது தனது பிள்ளையை அலைய வைத்தும் கஷ்டப்படுத்தியும் கனிமொழியை வருத்திய அருந்ததியின் பேராசை மடமையானது அதனை நினைத்து அவள் மனம் வருந்தினாள்.

இப்போதெல்லாம் கனிமொழியை ரேகாவிடம் இருந்து விலக்கி வைக்க அருந்ததி நினைப்பதில்லை. இருவருமே சேர்ந்து படித்தால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டவளாகப் பிள்ளைகளை அணைத்துக் கொண்டாள். கனிமொழியும் ரேகாவும் சந்தோசத்துடன் ஆர [illegible] ஒரே பாடசாலையில் படிப்பதற்கு விண்ணப்பிக்க விரும்பினர். அவரவர் வீடுகளிலும் அதே ஆசை பெருகியதால் இரண்டு குடும்பத்தினருமே மகிழ்வில் திளைத்திருக்கிறார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரண்டு தலைகளுடன் பிறந்த விசித்திர குழந்தை



பாகிஸ்தானில் அண்மையில் இரட்டைத் தலைகளுடன் கூடிய குழந்தை ஒன்று பிறந்துள்ளது. ஆராத் ஹைம் மற்றும் கஸ்மீர் தம்பதிகளுக்கு மூன்றாவதாக பிறந்த இக்குழந்தை சுவாசத்தினால் ஏற்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டது. குழந்தைக்கு வாய் மூலம் பால் ஊட்டுவதற்கும் முடியாமல் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ உலகில் இவ்வாறான அதிசய சம்பவங்கள் இடம்பெறுவது தற்போது காணப்படுகின்ற ஒரு விடயமாகும். ஆகினும் குறித்த இந்தக் குழந்தைக்கு அவயவங்கள் இரண்டு சோடிகளாக காணப்படுகின்றன. அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# உலகின் மிக நீளமான பாதம் கொண்ட மனிதர்!

மொராக்கோ நாட்டைச் சேர்ந்த ஒருவரை உலகின் மிக நீளமான பாதம் கொண்டவராக கின்னஸ் அமைப்பு அங்கீகரித்துள்ளது. இவரது பாத அளவு 1 அடி 3 அங்குலம் ஆகும். மொராக்கோ நாட்டின் சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர் பிராஹிம் டகியுல்லா. சிறு வயதிலிருந்தே இவரது உடல் உறுப்புகள் வேகமாக வளர்ந்தன. ஏழு வயதில் ஒரே ஆண்டில் 3 அடி உயரம் வளர்ந்தார். 18 வயது வரை இவரது அபரிமிதமான வளர்ச்சியை யாரும் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை என்கிறார் அவர். 'நான் படித்த பள்ளியின் டாக்டர் ஒருவர் எனது அபரிமிதமான வளர்ச்சியை உணர்ந்தார். பரிசோதனைக்காக எனது ரத்த மாதிரியை கேட்டார். எனினும், கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தார்'. 29 வயதான இவர் 8 அடி(246 செ.மீ) உயரம் உள்ளார். இதை கின்னஸ் அமைப்பு உறுதி செய்ததுடன் உலகின் மிக நீளமான பாதம் கொண்டவராகவும் அங்கீகரித்துள்ளது.





# 7 கால்களுடன் பிறந்த அதிசய ஆட்டுக்குட்டி

இந்தோனேசியா பகுதியில் ஒரு ஆடு 7 கால்களுடன் கூடிய அதிசய குட்டியை ஈன்றுள்ளது. குறித்த ஆடு ஒரே தடவையில் இரண்டு குட்டிகளை ஈன்ற போதே ஒரு ஆட்டுக்குட்டி 7 கால்களுடன் பிறந்துள்ளது, எனினும் இவ்விரு ஆடுகளுமே ஆரோக்கியமாக இருக்கின்றன. 7 கால்களுடைய அதிசய ஆட்டுக்குட்டியை நீங்களும் பாருங்கள்.


# மனிதக் கழிவு வாயுவில் இயங்கும் வாகனம்

மனிதக் கழிவு வாயுவில் முற்றிலும் இயங்குகின்ற மோட்டார் சைக்கிள்கள் ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாட்டின் மலசலகூட உற்பத்திகள் நிறுவனங்களில் ஒன்றான டோடோவால் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மோட்டார் சைக்கிள்களில் இருக்கை அமைக்கப்பட வேண்டிய இடத்தில் மலகூடம் பொருத்தப்பட்டுள்ளது. பயணங்களை ஆரம்பிக்க முன்னர் மலசலகூடங்களுக்கு இனி மேல் ஓட வேண்டிய தேவை இல்லை. பயணங்களின் இடையில்கூட மல கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டியும் இராது.



# உலகின் முதலாவது சூப்பர் பஸ்





சாதாரண பஸ் சேவைகளில் பிரயாணம் செய்பவர்களுக்கு இது போன்றதொரு பஸ் கிடைத்தால் எப்படியிருக்கும். 23 பயணிகள் ஒரே நேரத்தில் பயணம் செய்யக்கூடிய இந்த பஸ்ஸில் சொகுசு கார்களில் பிரயாணம் செய்யும் அனுபவம் ஏற்படும். முன்புறமும் பின்புறமும் கார் போலவே இருக்கின்றதும் நீளத்தில் மட்டும் பஸ் போன்றது. 49 அடி நீளமான (15 metres) இந்த பஸ் 155 kmph எனும் அதியுயர் கதியில் செல்ல வல்லது. அத்துடன் தனித்தனியான திறக்கக்கூடிய 8 கதவுகளையும் கொண்டுள்ளது. Hollan இலுள்ள University of Technology இல் 1985 ஆம் ஆண்டே இதற்கான வடிவம் வரையப்பட்டதாகவும் இன்று தான் அது முழுமையாக வடிவமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி மோகத்தின் மொழி





பதவி என்பது மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு உரிமைமிக்க சாதனமாகவே பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் நடைமுறையில் இது அதிகாரத்தின் சின்னமாகவும் அடக்கு முறையின் கருவியாகவுமே பயன்படுத்தப்பட்டு வருவதையே காணக் கூடியதாக இருக்கிறது. இதன் காரணமாகவே பதவியைக் கைப்பற்றும் முயற்சியானது ஒரு போதையாக எல்லா நல்ல அம்சங்களையும் நிராகரித்து மேலும் ஒரு வெறியாக மாறி விடுகிறது. அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கொலன்னாவ தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி மோதல்கள் இதற்கான ஒரு சிறந்த உதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஒரே சின்னத்தில் போட்டியிட்ட ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதேச சபையின் தலைவராக வருவதற்கான போட்டியில் நான்கு உயிர்கள் பலி கொள்ளப்பட்டன. காயமடைந்த 15 பேரில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா சிறீலங்கா மக்கள் கட்சியைச்சேர்ந்தவர். மறைந்த விஜயகுமாரதுங்க முன்னாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா விஜய குமாரதுங்க ஆகியோர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி சிறீலங்கா மக்கள் கட்சியை உருவாக்கிய போது அவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர். விஜய குமாரதுங்க சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு திருமதி சந்திரிகா நாட்டை விட்டு வெளியேறி அரசியல் அஞ்சாத வாசம் செய்தார். பின்பு அவர் நாடு திரும்பி சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது பிரேமதாசவினாலும் மீண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். திருமதி.சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவருக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்ட போது பிரேமச்சந்திர மஹிந்தவை முன்னுக்கு கொண்டுவரக் கடுமையாக உழைத்தவர். முன்னாள் இடதுசாரியான இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களின் நெருங்கிய நண்பர் என்று கூடக் கூறலாம்.

இவர் தற்சமயம் தொழிற்சங்கக் கூட்டமைப்புக்களின் ஜனாதிபதி ஆலோசகராகப் பதவி வகித்து வந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா முன்பு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரமுகராக விளங்கியவர். அரசுக்கு விரோதமான செய்திகளை வெளியிட்டு வந்த சூரியன் ஒளிபரப்புச் சேவைகள் தடை செய்யப்பட்டன. திரு.துமிந்த சில்வா சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்த பின்பு அத்தடை நீக்கப்பட்டது. அதன் பின்பு அவர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் உயர்ந்த பட்ச விசுவாசியாக மாறியதுடன் தேர்தலில் போட்டியிட்டு கொலன்னாவ தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.





தற்சமயம் அவர் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராக விளங்குவதுடன் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச அவர்களுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறார். இவர் துப்பாக்கி மோதலில் காயமடைந்த செய்தி கேள்விப்பட்டவுடனேயே பாதுகாப்புச் செயலர் ஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்குச் சென்று அவரைப் பார்வையிட்டதுடன் உரிய சிகிச்சைகள் வழங்கும்படி மருத்துவமனை வட்டாரங்களுக்குப் பணிப்புரையும் வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவரும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமானவரும் ஒருவருடன் ஒருவர் தெருச் சண்டியன்களைப் போன்று துப்பாக்கிகளால் மோதிக் கொண்டுள்ளனர்.

இதில் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திராவும் அவரின் மூன்று மெய்க்காவலர்களும் உயிரிழந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் அவரைச் சார்ந்த 10 பேரும் படுகாயமடைந்துள்ளனர். இதன் காரணமாக முல்லேரியாப் பகுதிக்கு உடனடியாக இராணுவம் இறக்கப்பட்டதுடன் பொலிஸ் ஊரடங்கும் அமுல்படுத்தப்பட்டது. அந்தளவுக்கு அப்பிரதேசம் ஒரு குட்டிப் போர்க்களமாக மாறியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எவர் அதிக விருப்பு வாக்குகளைப்பெற்று கொலன்னாவ பிரதேச சபையின் தலைமைப் பதவியைப் பிடிப்பது என்பது தொடர்பாகஎழுந்தபோட்டியே இப்பெரும்மோதலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இரு பகுதியினருமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிட்டவர்கள் என்பதை இங்கு குறிப்பிடாமல்விடமுடியாது.

2005 ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது மட்டுமட்டான பெரும்பான்மையுடனேயே ஆட்சியை ஆரம்பித்தது. பெரும் பான்மை பலம் போதாத நிலையில்நாடாளுமன்றத்தையேஅவர்கள் கூட்ட முடியாத நிலை நிலவியது.

இந்த நிலைமையை மஹிந்த ராஜபக்ச அவர்கள் மிக விவேகமான முறையில் கையாண்டு மாற்றியமைத்தார். ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்குள் நிலவிய உள்முரண்பாடுகளைக் கண்டுபிடித்து அவற்றை உடைப்பதில் வெற்றி பெற்றார். நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்ட பிரமாண்டமான அமைச்சரவையை வழங்கி பிற கட்சிகளை உடைப்பதற்கு விலையாகஅமைச்சுப் பதவிகளைவழங்கினார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாராளுமன்றப் பலத்தை விரிவாக்கிக் கொண்டார்.

இவ்வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பதவிக்காக தங்கள் கட்சிகளுக்குத் துரோகம் செய்து விட்டு வந்தவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கதம்பமாலையாகவே விளங்கி வருகிறது. இவர்கள் இப்பதவி மோகத்தையும், அதிகாரத்தையுமே இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை விட அதி உயர் விசுவாசிகளாக ஒருசிலர். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் விசுவாசிகளாக ஒரு சிலர். பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் விசுவாசி களாக ஒருசிலர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் விசுவாசிகளாக ஒருசிலர் என விசுவாசிகள் பட்டாளத்தால் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிரம்பி வழிகிறது.

குறிப்பாக கெஹலிய ரம்புக்வெல, மஹிந்த சமரசிங்க, விமல் வீரவன்ச, றிசாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா போன்று வேறு கட்சிகளிலிருந்து வந்தவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களையும் விட அதிகமாக அரசின் ஒவ்வொரு விஷயங்களையும் நியாயப் படுத்துவதிலும், ஏனைய கட்சிகளைத் தூற்றுவதிலும் முன்னின்று உழைப்பதை நாம் அவதானிக்க முடியும்.

இப்படியான ஒருநிலையில் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவும், துமிந்த சில்வாவும் ஒரு பிரதேச சபைத் தலைமைப் பதவிக்காக ஒருவரை ஒருவர் கொல்வதிலும், கொல்ல முயற்சிப்பதிலும் ஆச்சரியம் என்னதான் இருக்க முடியும்.

ஆனால் இச்சம்பவம் தொடர்பாக ஆச்சரியப்பட ஒரு விஷயமும் உண்டு அதாவது மூன்றாம் தரமான பதவிப் போட்டியின் அடிப்படையிலான அரசியல் அநாகரீகம் மேலோங்கும் நிலையிலும் இடம்பெற்ற 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 22 சபைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. அது மட்டுமின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகளாக விளங்கிய கண்டி, நுவரேலியா போன்ற சபைகளில் கூட அதனால் வெற்றியீட்ட முடியவில்லை. அதேவேளை ஜே.வி.யால் ஒரு சபைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக ஆச்சரியப்பட ஒரு விடயமும் உண்டு அதாவது மூன்றாம் தரமான பதவிப் போட்டியின் அடிப்படையிலான அரசியல் அநாகரிகம் மேலோங்கும் நிலையிலும் இடம்பெற்ற 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 22 சபைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

■ சந்திரசேகரஆசாத்

இந்த இரு கட்சிகளும் உட்பூசல்களால் குழம்பிப் போயிருப்பதும் திட்டவட்டமான கொள்கைகளின் அடிப்படையில் மக்களின் பிரச்சனைகளை இனம் கண்டு போராட்டங்களை முன்னெடுக்கத் தவறியமையுமே இவர்களின் தோல்விக்குக் காரணமாகும்.

இன்று அரசாங்கம் அபிவிருத்தி என்ற மாயமானை மக்கள் முன் உலாவ விட்டுள்ளது. கட்டிடங்களைக் கட்டுவதன் மூலமும், வசதிகள் அதிகரிப்பதன் மூலமும் நாடு முன்னேறுவதாக ஒரு மாயத் தோற்றத்தை அரசு ஏற்படுத்தி வருகிறது. ஆனால் வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்றவற்றினால் சாதாரண மக்கள் படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உழைக்கும் மக்கள் ஊதிய உயர்வின் மையால் தங்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். எரிபொருள், உணவுப்பொருட்கள் உட்பட சகல பொருட்களின் விலைகளும் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இன்னொரு புறம் நாட்டின் மையப் பகுதிகள் அந்நிய நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன அல்லது நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நிலைமைகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் இறங்கிச் சரியான போராட்டங்களை முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சியோ ஜே.வி.பியோ தயாராக இல்லை. ஏனெனில் அவர்களும் இக் கொள்கைகளுக்கு விரோதமானவர்கள் என்று சொல்லிவிட முடியாது. எனவே அரசுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் காணமுடியாத நிலையில் மக்கள் வலிமையுள்ளவர்கள் பக்கம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர் போல் தெரிகிறது.

ஆனால் கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. அதிலும் மிலிந்த மொறகொட என்ற சக்தி வாய்ந்த ஒருவரைத் தலைமை வேட்பாளராகப் போட்டுக் கொழும்பு மாநகர மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை நிராகரித்து விட்டனர்.

கொழும்பில் தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகம் வாழ்கிறார்கள் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டியவிடயம். கொழும்பு நகரை அழகுபடுத்துதல் என்ற பேரில் சேரி வாழ்மக்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் முயற்சிகளுக்கு அந்த மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டிருப்பதுவே அதன் காரணம் என்று கூறமுடியும்.

சேரிப்புறமக்கள் ஒருவர் கூட தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வழங்கிய வாக்குறுதியை அவர்கள் நம்பாததன் வெளிப்பாடே இது. ஏனெனில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் இறங்கிவிட்டனர்.

அதுமட்டுமன்றி கொழும்பின் மையப்பகுதியான காலிமுகத்திடல் ஏற்கனவே அந்நிய நிறுவனத்திற்கு விற்கப்பட்டு விட்டது. அப்படியிருப்பினும் மக்கள் போடும் வாக்குகள் மக்களுக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கப் போவதில்லை என்பது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த பின்பு தெளிவாகவே உணரப்பட முடிகிறது. பதவிமோகமும், காடைத்தன அரசியல் அநாகரீகமும் மேலோங்கும் நிலையில் நாடு அதல பாதாளத்தை நோக்கி வீழ்வதை எவராலும் தடுத்துவிட முடியாது. இதுவே இன்றைய ஆசியாவின் அதிசயமாக விளங்கப் போகிறது. ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிரான இந்திய தேசத்தின் போராட்டம் நீண்டதூரம் செல்ல வேண்டும்



■எஸ்.சுரேந்திரஜித்

ஊழல் அரசியலும் வியாபாரமும் இந்திய தேசத்தின் தலையெழுத்து என்ற நிலைமாற நீதித்துறை, ஊடகங்கள், சமூக ஆர்வலர்கள் என்ற மூன்று பிரிவினரின் அயராத முயற்சி சமீப காலத்தில் வெற்றியளித்துவருவதாகத் தோன்றினாலும் அந்தப் பயணம் ஒரு நெடும்பயணம் என்பதும் தெளிவாகத் தெரியும் அம்சமாகும். 2G அலைக் கற்றை ஊழல் வலையில் தி.மு.கவின் ஊழல் வாதிகள் ராசா, கனிமொழி, மாறன் சகோதரர்கள் என்போர் அகப்பட்டுவிட்டனர். சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேயின் போராட்டம், சுப்பிரமணியசாமி போன்றோர் தொடரும் சமூகநல வழக்குகள், ஊடக செய்திகள் என்பன பொதுமக்களை பெரும் விழிப்பு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன.

தி.மு.கவினர் ராசாவுடன் தொடங்கிய இந்த ஊழல்களை வெடிப்பு கர்நாடகத்தில் சட்டவிரோத சுரங்கம் அமைப்பு பி.ஜே.பி அமைச்சர்கள் இருவர் கைது, டில்லியில் காங்கிரஸ் முதல்வர் ஷீலா டிக்ஷித் மீதான குற்றச்சாட்டு என பல வடிவங்களில் வியாபித்து வருகிறது.

பல மாநிலங்களில் ஒம்புட்ஸ்மன் எனஇலங்கையில் அழைக்கப்படுவதற்கு சமனான லோக் ஆயுக்தா என்ற பதவிநிலை அதிகாரிகள் மாநில அரசின் ஊழல் அமைச்சர்களை தோலுரித்துக் காட்டி வருகின்றனர். இந்த லோக் ஆயுக்தாவின் விசாரணைகளும் பரிந்துரையும் கட்டாயம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை. எனினும் தார்மீக அடிப்படையில் இவ்வாறு லோக் ஆயுக் தாவால் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பதவிவிலக அந்தந்த மாநில கதிர்கட்சிகள் வலியுறுத்துகின்றன. எனவே ஒட்டிரியில் இந்த ஊழல் அமைச்சர்கள் பதவி விலக வேண்டி ஏற்படவே செய்கிறது. அல்லது அம்மாநில முதல்வர்களால் பதவி விலக்கப்படுகின்றனர். கர்நாடகாவில் முதல்வரே குற்றச்சாட்டால் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் மிகப்படிப்பறிவு குறைந்த மாநிலமான உத்தரப்பிரதேசம் 'குண்டர்களின் மாநிலம்' ஆகும். அங்கும் லோக் ஆயுக்தாவின் விசாரணை மற்றும் குற்றச்சாட்டால் முதலமைச்சர் மாயாவதி தனது அரசின் இரண்டு மூத்த அமைச்சர்களை பதவி நீக்கி உள்ளார். புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் அமைச்சர் ஒருவர் பத்தாம் வகுப்பு பரீட்சையில் தேறுவதற்கு தனக்குப் பதிலாக வேறொருவரை பரீட்சை எழுத அனுப்பியது குறித்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

> நாடளாவிய ரீதியில் ஊழலுக்கு எதிரான மக்கள் எழுச்சியும் நிறுவனரீதியான நடவடிக்கைகளும் சமீபகாலமாக உத்வேகம் பெற்றுள்ளன. அரசியல்வாதிகள் இதனால் விழி பிதுங்கி நிற்கின்றனர்.

இவ்வாறு நாடளாவிய ரீதியில் ஊழலுக்கு எதிரான மக்கள் எழுச்சியும் நிறுவனரீதியான நடவடிக்கைகளும் சமீபகாலமாக உத்வேகம் பெற்றுள்ளன. அரசியல் வாதிகள் இதனால் விழி பிதுங்கி நிற்கின்றனர். பிரதமர் மீதும் இதுகுறித்து வரலாறு காணா அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த வருடத்தில் வெளிநாடு செல்ல விண்ணப்பித்த 24 அமைச்சர்களின் கோரிக்கையை பிரதமர் நிராகரித்துவிட்டார்.

அரச செலவை கட்டுப்படுத்தும் முயற்சியாகவே பிரதமர் இவ்வாறு கடுமையான நடவடிக்கை எடுத்ததாக கூறப்படுகிறது. கடந்த வருடம் இதே காலப் பகுதியில் 10 அமைச்சர்களின் பயணத்திட்டத்தை மட்டுமே பிரதமர் நிராகரித்திருந்தார். எனவே பிரதமர் முன்னெச்சரிக்கைப் பாதையில் உள்ளார் என காங்கிரஸ் வட்டாரம் பெருமிதப்பட்டுக் கொள்கிறது. எனினும் கூட்டணிக் கட்சிகளான திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க, திரிணாமுல் என்பவற்றின் அமைச்சர்களின் பயணங்களை பிரதமர் தடுக்க வில்லை. காங்கிரஸ் அமைச்சர்களைப் பொறுத்தளவில் மட்டுமே அவரது அதிகாரம் செல்லுபடியாகிறது. எந்தளவுக்கு பிரதமர் கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தங்களுக்கு இரையாகி உள்ளார் என்பது இதன்மூலம் உணர்த்தப்படலாம்.

இதேவேளை ஊழல் அற்ற ஆட்சி தருவேன் என உறுதி அளித்த ஜெயலலிதாவின் அ.தி.மு.கவிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது என்ற குற்றச்சாட்டு கடந்தவாரம் வெளியாகியுள்ளது. ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சர்களில் ஒருவரான அக்ரி கிருஷ்ண மூர்த்தியை தலைவராகக் கொண்ட அறக் கட்டளைக்கு அரசு நிலம் தாரை வார்க்கப்பட்டதாக குற்றச்சாட்டு. அதுவும் சென்னை நகர் மத்தியில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான இந்நிலம் அரசுடைமை என கடந்த தி.மு.க ஆட்சியில் கலெக்டர் தீர்மானித்தார்.

இப்போது மீண்டும் அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் அறக்கட்டளைக்கு இது வழங்கப்பட்டது குறித்து தி.மு.க கேள்வி எழுப்பியுள்ளது.


ஆட்சிக்கு வந்து நான்கே மாதத்தில் அ.தி.மு.க மீது கூறப்பட்ட பாரதூரமான ஊழல் குற்றச் சாட்டு இது வாகும். இந்த 4 மாதத்தில் அவ்வப்போது ஆங்காங்கு சிறுசிறு ஊழல்குற்றச்சாட்டுகள் திமுக மீது வெளிவந்த போதும் இதுபோன்ற கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது இதுவே முதல் தடவை. சிறுசிறு குற்றச்சாட்டுகள் எழுந்தால் கூட தனது கட்சியினரை தண்டிப்பதை இந்த 4 மாதத்தில் செயற்படுத்தி வந்தவர் ஜெயலலிதா எனவே பாரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அக்ரி கிருஷ்ணமூர்த்தி நிச்சயமாக அமைச்சர் பதவியை இழந்தே போவார் என அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

ஏனெனில் இவ்வாரம் நடக்கவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் அ.தி.மு.கவிற்கு உள்ள செல்வாக்கை வெட்டி வீழ்த்த பிரதான கருவியாக இந்த ஊழலை தி.மு.க கையிலெடுத்துள்ளது. தேர்தலில் வெற்றி அ.தி.மு.கவுக்கே எனினும் இவ்வாறான ஊழல்கள் அதை ஓரளவேனும் பாதிக்கவே செய்யும்.

உள்ளாட்சித் தேர்தலுடன் திருச்சி மேற்கு சட்டசபை தொகுதி இடைத்தேர்தலும் நடக்கவுள்ளது. இங்கு அ.தி.மு.க சார்பில் வெற்றி பெற்றவர் ஒரு நாட்களில் விபத்தில் இறந்து விட்டதால் தேர்தல் தேவைப்படுத்தப்பட்டது. அவரிடம் தோற்றமுன்னாள் அமைச்சரும் முக்கிய திமுக புள்ளியுமான K.N. நேரு மீண்டும் இங்கு போட்டியிடுகிறார். ஊழல் ராஜாவான இவரைக் கட்டுப்பணம் இழக்கச் செய்வோமென ஜெயலலிதா சூளுரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ★










காணி ஒன்றை கொள்வனவு செய்தல்

யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு

DFCC வங்கியின் கிளைகளை ஆரம்பிக்க பின்வரும் வசதிகளைக் கொண்ட காணிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் தேவைப்படுகின்றன.

- குறைந்த பட்சம் 30 பேர்ச்சஸ் விஸ்தீரணம்
- காணி பிரதான பாதையில் அமைந்திருப்பதுடன் முன்புறம் 60-70 அடி அகலத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

ஏழு நாட்களுக்குள் சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

பதில் தலைவர் (சேவைப்பிரிவு),
DFCC வங்கி,
இலக்கம் 73/5, காலி வீதி,
கொழும்பு 03.

தொலைபேசி இலக்கங்கள் :- 0777-489503 அல்லது 011-2442442

மின்னஞ்சல் :- info@dfccbank.com

(தயவு செய்து பதில் அனுப்பும் கடிதவுறையின் இடது மூலையில் "காணி விற்பனை, யாழ்ப்பாணம் / திருகோணமலை / மட்டக்களப்பு" எனக் குறிப்பிடவும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.10.2011 – 22.10.2011

## ராசி பலன்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

விழுவதெல்லாம் எழுவதற்கே என்பதை அறிந்த நீங்கள் இலக்கை எட்டும் வரை ஓயமாட்டீர்கள். சோம்பல் நீங்கி சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். உறவினர்கள், நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். காலநேரம் கனிந்து வரும் வாரமிது.

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

தன்மானம் மிக்க நீங்கள் பிறரின் சுதந்திரத்தில் தலையிட மாட்டீர்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். பிள்ளைகள் உங்களை தாமதமாக புரிந்துக் கொள்வார்கள். கணவன் மனைவிக்குள் கௌரவப் பிரச்னை, வீண் சந்தேகம் எழக்கூடும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். மற்றவர்களை விமர்சித்து பேச வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் வாரமிது.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

போற்றுதலுக்கும், தூற்றுதலுக்கும் அஞ்சாத நீங்கள் தன் கடன் பணி செய்து கிடப்பதே என்றிருப்பீர்கள். புது முயற்சிகள் யாவும் வெற்றியடையும். தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. அவ்வப்போது உணர்ச்சிவசப்பட்டு பேசுவீர்கள். வாக்கு சாதுரியத்தால் பிரச்னைகளைத் தீர்க்கும் வாரமிது.

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

சொல்லாலோ, செயலாலோ மற்றவர்களை காயப்படுத்தாத நீங்கள் அன்புக்கு அடிமையானவர்கள். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். மகளின் திருமணம் கூடி வரும். உறவினர்கள் மதிப்பார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். அக்கம் பக்கம் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்யோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். விஸ்வரூபமெடுக்கும் வாரமிது.

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

மற்றவர்களின் மனதில் இங்கிதமான பேச்சால் எளிதில் இடம் பிடிக்கும் நீங்கள் நாலும் தெரிந்தவர்கள். நிர்வாகத் திறன் கூடும். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். பண வரவு திருப்தி தரும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்யோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். வேலையில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். கடின உழைப்பால் முதலிடம் பிடிக்கும் வாரமிது.

**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

மன் மயம் மாறாதவர்களான நீங்கள் கஷ்டம் தாண்டிப் போனாலும் கலாச்சாரத்தை மறக்க மாட்டீர்கள். புத்துணர்ச்சி பெருகும். கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். நண்பர்கள் உங்களைப் புகழ்வார்கள். எதிர்பார்த்திருந்த வகையில் உதவியுண்டு. அலைச்சல் அதிகரிக்கும். உத்யோகத்தில் வேலைச் சுமையுடன் மேலதிகாரியின் பாராட்டையும் பெறுவீர்கள். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும் வாரமிது.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நீதியை விரும்பும் நீங்கள் அநியாயத்திற்கு துணை போக மாட்டீர்கள். முகத்துக்கு நேராகப் பேசுவீர்கள். எதிர்பார்த்தவையெல்லாம் எளிதில் முடியும். வீட்டில் நல்லது நடக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சகோதரர் உறுதுணையாக இருப்பார். நண்பர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வர். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். திட சிந்தனையால் வெல்லும் வாரமிது.

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

துவண்டாலும் துவளாத நீங்கள், நாளை நமதே என்ற நம்பிக்கையில் வாழ்வீர்கள். நல்லது செய்தே நலிந்தவர்கள். தடைபட்டுக் கொண்டிருந்த சில காரியங்கள் முழுமையடையும். பிள்ளைகளின் பாசம் அதிகரிக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். சகோதரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலர் உங்களை வந்து சந்திப்பார்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். மதிநுட்பத்தால் வெற்றி பெறும் வாரமிது.

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

கடல் அலை ஓய்வதைப் போல வாழ்க்கை என்றால் பிரச்னைகளும் இருக்கும் என்பதை உணர்ந்த நீங்கள், எச்சரிக்கை உணர்வுடன் எப்போதும் இருப்பீர்கள். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வாகன வசதிப் பெருகும். உறவினர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வெளியூர் பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். உத்யோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தகுதி, கௌரவம் உயரும் வாரமிது.

**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

தனக்கென எடுத்து வைக்கத் தெரியாத நீங்கள் தராதரம் அறிந்து பழகுபவர்கள். தவறும் வாய்ப்பு வந்தாலும் தடம் மாறாதவர்கள். மாறுபட்ட அணுகு முறையால் பழைய சிக்கல்கள், பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய நண்பர்கள், உறவினர்களை சந்திப்பீர்கள். வேலை கிடைக்கும். சேமிக்கும் அளவிற்கு பண வரவு உண்டு. பிள்ளைகளால் மரியாதைக் கூடும். உடன்பிறந்தவர்களால் மனநிறைவு கிட்டும். எதிர்பார்த்தவைகளில் சில நிறைவேறும் வாரமிது.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

மென்மையான சிந்தனை உடைய நீங்கள் வன்முறைகளை கண்டு அஞ்சமாட்டீர்கள். மதிப்பு, மரியாதைக் கூடும். குடும்பத்தில் நல்லது நடக்கும். நெடுநாளாக எதிர்பார்த்து காத்திருந்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். விலகி நின்ற உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். எதிர்பார்த்த புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பணியால் சாதிக்கும் வாரமிது.

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சகிப்புத் தன்மைக் கொண்ட நீங்கள் சாதிக்க வேண்டும் என்ற வெறியுடன் காணப்படுவீர்கள். பாதிக்கப்பட்டவர்களுக்காக பாடுபடுவீர்கள். எதிலும் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் சில முக்கிய பொறுப்புகள் உங்கள் கைக்கு மாறும். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சகோதரிக்கு வேலை கிடைக்கும். தேவையான பணம் வரும். கொஞ்சம் அனுசரித்து போங்கள், வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்களை கவருவீர்கள். இடைவிடாமல் போராடி இலக்கை எட்டும் வாரமிது.

# கலரை சொல்லுங்கள்

# குணத்தைச் சொல்கிறோம்



ஒருவருக்குப் பிடித்த கலரை வைத்து அவருடைய குணத்தைக் கண்டுபிடிக்கலாம். 'கலர்புல்'லான ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இதனைப் படித்து சுய பரிசோதனை செய்து கொள்ளலாம்.

வெண்மை: அமைதிக்கும் சமாதானத்திற்கும் வெண் நிறத்தை உதாரணமாகக் கூறுவார்கள். வெண்மை விரும்பிகள் சரியான இளமைவாதிகள். எங்கும், எதிலும் முழுமை வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். எந்த செயலிலும் இறங்குவதற்கு முன்பாக ஆழம் பார்த்து கால்விடுவீர்கள். அதனால் சீக்கிரம் ஏமாறமாட்டீர்கள். பிடிக்கும் என்பதற்காக அடிக்கடி வெள்ளை ஆடை அணியவேண்டாம். ஊரெல்லாம் மழை பெய்து ஒரே சேறும், சகதியுமாக இருக்கும் நாட்களில் இவ்வுடை சரிவராது.

சிவப்பு: ரொம்பவே 'ஆக்டிவ்' ஆசாமிகள் இவர்கள். நத்தை கூட மணிக்கு 10 கிலோமீட்டர் வேகத்தில் நகரவேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். இந்த கலர் பிடித்த ஆண்களுக்கு ஒரே மாதிரியான வாழ்க்கை என்றால் கசப்பு. அதிக மன வலிமை இருக்கும். இவர்களின் பலமும், பலவீனமும் அதுதான்.

பிங்க்: சிவப்பின் மென்மைக் குணமே பிங்க். சரியான சுயநலச் சுனாமிகள். தன்னை யாராவது கவனித்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இதற்காக பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு நடிப்பார்கள், ரொம்ப ஜாக்கிரதை.

மெருன்: வாழ்க்கையில் அடிபட்டு படிப்படியாக ஏறிவந்தவர்களுக்கு மெருன் கலர் மிகவும் பிடிக்கும். தனக்கு உதவி கிடைக்காததால் சுற்றி இருப்பவர்களுக்கு உதவி செய்வார்கள். மெருன் என்றால் மெச்சூரிட்டி என்று அர்த்தம்.

ஆரஞ்சு: இந்த நிறத்தை விரும்புபவர்கள் சுகவாசிகள். எந்த நேரமும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள். ஆனால் கூட்டணி கவர்ன்மென்ட் மாதிரி எப்போதும் நிலை இல்லாமல் அலைவார்கள்.

மஞ்சள்: மங்களகரமான மஞ்சள் வர்ணம் பிடித்தவர்களுக்கு புத்திசாலித்தனமும் கற்பனை வளமும் அதிகம் இருக்கும். நகைச்சுவை வளம் கூடுதலாகவே இருக்கும். இதனால் யாரையும் எளிதில் சிரிக்க வைத்துவிடுவார்கள், எங்கும் எப்பொழுதும் முழுச்சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் இவர்கள்.

பச்சை: பசுமையை குறிக்கும் பச்சை நிறத்தை விரும்புபவர்கள் மென்மை ப்ளஸ் நேர்மைவாசிகள். உங்களைச்சுற்றி எப்பொழுதும் பத்துப் பேர் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அமைதியாக இருப்பதையே விரும்புவார்கள். அன்பே இவர்களின் ஆயுதம். இதனை பயன்படுத்தி சுற்றியுள்ளவர்கள் ஏமாற்ற முயற்சி செய்வார்கள் எனவே விழிப்போடு இருப்பது அவசியம்.

கறுப்பு: 'கிவ் ரெஸ்பெக்ட், டேக் ரெஸ்பெக்ட்' பார்ட்டிகள். மரியாதை என்பது மரணம் மாதிரி. நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்களைத் தேடி வரும். எளியாக மற்றவர்களை இம்ப்ரெஸ் செய்துவிடுவீர்கள்.

வயலட் நிறம்: கொஞ்சம் கலாச்சாரக் காவலர் நீங்கள். புதுமை பிடிக்காது. கட்டம் போட்ட பேண்ட் போட்டுள்ளவர்களைப் பார்த்தால் அலறுவீர்கள். உள்ளுவது உயர்வுள்ளல் ஆனால், வேலை என்று வந்துவிட்டால் குறட்டை விடுவீர்கள்.

வாழ்க்கை முழுக்க ஒரே கலர் பிடிக்காதே மாறிக்கொண்டே இருக்கிறது என்கிறீர்களா? கலருக்குத் தகுந்த மாதிரி உங்கள் கோச்சாரமும் அந்தந்த நேரம் மாறியிருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.புத்திரசிகாமணி



# இந்திய வீட்டுத் திட்டத்தில் வேண்டாம் தில்லுமுல்லு

இந்திய அரசாங்கம் உறுதியளித்துள்ள ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டத்தில் மலையக இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஐயாயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்காமல் நேர்மையான முறையில் இது செயற்படுத்தப்பட வேண்டும். அரசியல் மாற்றங்கள், திடீர் பல்டிகள் காரணமாக மலையகத் தலைவர்கள் மாறி மாறி அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் வருகின்றனர்.

தேசிய மட்டத்தில் ஏனைய பிரதேசங்களுக்கு கிடைக்கும் நன்மைகளும் உதவிகளும் மலையகத்தில் மட்டும் தேவையறிந்து பங்கிடப்படுவது இல்லை. பதவியில் இருக்கும் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமே முன்னுரிமை வழங்கப்படுகின்றன. தவிர்க்க முடியாத நிலைமையில் ஆங்காங்கே சில மாற்றுக்கட்சி உறுப்பினர்களுக்கும் அதிஷ்டம் அடிப்பதுண்டு. ஆனால் உண்மையாகவே தேவையானோர்களுக்கு கிடைக்கவில்லை என்றும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவராக இருந்தவரும் முன்னாள் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் ஏழு பேர்ச்சஸ் காணியுடனான தனிவீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து தோட்டங்களில் லயன்முறையை இல்லாதொழிப்பதற்கு பிள்ளையார் சுழி போட்டார்.

பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் எதிரணியில் ஆறுமுகன் தொண்டமான் ஒரு உறைக்குள் இரண்டு கத்திகள் இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் அரசின் பக்கம் தாவி அமைச்சரானார். சந்திரசேகரனின் தனிவீட்டுத் திட்டத்தை விமர்சித்து ஒதுக்கி விட்டு மாடி வீட்டுத் திட்டம் என்ற பெயரில் ஒரு லயத்திற்கு மேல் இன்னும் ஒரு லயத்தை தூக்கி வைத்தார். இத்திட்டம் மக்களின் வரவேற்பை பெறாததினால் படுதோல்வி அடைந்தது.

இதனால் இத்திட்டத்தைக் கைவிட்ட ஆறுமுகன் தொண்டமான் பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல் சிறு மாற்றத்துடன் பத்து பேர்ச் காணியுடன் தனிவீடு என்று ஹட்டன் கொட்டகலை ஆகிய பிரதேசங்களில் ஆரம்பித்தார்.

இத்திட்டத்தை அரசியல் தொழிற்சங்க பேதம் இன்றி அனைத்து தொழிலாளர்களும் வரவேற்றனர். மலையகத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் வாழும் தொழிலாளர்களும் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் பரிதாபமாக அப்படியே நின்று விட்டது.

எது எப்படியோ இந்த மூன்று தொழிலாளர் வீடமைப்பு திட்டங்களின் மூலமும் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்காவது வீடுகள் கிடைத்தது மகிழ்ச்சிதான். ஆனால் இவ்வீடுகள் வழங்கப்பட்டு 15, 20 வருடங்கள் கடந்த பின்னும் அந்த வீடுகளுக்கோ வீட்டுடன் சேர்ந்த காணிகளுக்கோ இன்று வரை உறுதிகள் வழங்கப்படவில்லை.

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது போல் கிராமத்தவர்களுக்கும் காணிகளும் வீடுகளும் வழங்கப்பட்டன.

அவர்களுக்கு காணிகள் வழங்கப்படும் போதே அதற்கான உறுதிகளும் வழங்கப்பட்டன. ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் இவை வழங்கப்படவில்லை. தேசிய வருமானத்தை தேடித்தரும் தொழிலாளர்கள் இன்றும் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்படுகின்றனர் என்பதுதான் வேதனை. அமைச்சர்களாக இருக்கும் மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களுக்கான காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்பொழுது இலங்கை அரசினதோ தொழிற்சங்க தலைமைகளினதோ கோரிக்கைகள் இன்றியே இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் ஒரு கணிசமான எண்ணிக்கையிலான வீடுகளை மலையகத் தொழிலாளர்களுக்கும் கட்டிக் கொடுக்க இந்தியா முன்வந்துள்ளது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் காணிகள் இருப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் மலையக தொழிலாளர்களுக்கு சிறு அளவு காணிகள் கூட சொந்தமாக இல்லை. இங்கேதான் மலையகத் தலைமைகளின் சேவை தேவைப்படுகின்றது.

மலையக பெருந்தோட்டங்களில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் பயிர் செய்கை மேற்கொள்ளப்படாமல் தரிசு நிலங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன. இந்தக் காணிகளைப் பெற்று தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை உருவாக்க முன்வர வேண்டும்.

மலையகத் தலைமைகளுக்கும் மலையக அரசியல்வாதிகளுக்கும் ஒரு வேண்டுகோள் மலையகத்தில் ஏற்கனவே பல ஆயிரம் ஏக்கர் தேயிலை, இறப்பர் காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களுக்குள்ளே சிங்கள கிராமங்கள் ஆகிவிட்டன. கூடிய விரைவில் இந்த தரிசு நிலங்களும் புதிய கிராமங்களாகிவிடலாம்.

எனவே நீங்கள் உங்களுடைய ஒன்றுபட்ட சக்தியை வெளிப்படுத்தி இந்தத்தரிசு நிலங்களைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுங்கள். இந்திய அரசு இலவசமாகவே வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன் வந்துள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த தவறிவிடாதீர்கள். ஆனால் ஒன்று பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது உண்மையாகவே தேவையானவர்களைத் தெரிவு செய்யுங்கள். அங்கேயும் தில்லுமுல்லுகள் வேண்டாம். மக்கள் பாபம் பொல்லாதது.

# மலையகத்தை ஆட்கொண்டிருக்கும் மதுவென்னும் பேய்




[illegible]

மாணவப் பத்திரிகையாளர்
ஜெனி பொன்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்ததற்கெல்லாம் பனடோல் பாவிப்பது தவறு!

**கேள்வி:** வயது 63. ஆண். நீரிழிவும் உண்டு. கால்பாதங்கள் இரண்டும் அடிக்கடி விறைப்புக் குள்ளாகின்றன. பகலில் கூடிய நேரம் கதிரையில் அமர்ந்த படியே வேலைசெய்வதுண்டு. இதற்குப் பரிகாரம் என்ன செய்யலாம்? தயவு செய்து கூறுங்கள்!



**பதில்:** உங்களுக்கு எவ்வளவு காலமாக நீரிழிவு நோய் உண்டு என்பதை தாங்கள் குறிப்பிட வில்லை. இந்தக் கால் விறைப்பு எனப்படுவது நீரிழிவு நோயின் ஒரு பக்க விளைவு என்று சொன்னால் அதில் தவறில்லை.

நீரிழிவு நோயின் பக்க விளைவுகளில் ஒன்று தான் இந்த Peripheral Neuritis எனப்படும் விறைப்பாகும். இது பெரும்பாலாக பாதங்களிலும் முன் கைகளிலும் ஏற்படுகிறது. வெளிக்குருதி சுற்றோட்டத்தொகுதியின் கலன்கள் (Vessels) பாதிக்கப்படுவதால் இந்த நிலை ஏற்படுகிறது.

இதனை நிவாரப் உயிர்ச்சத்து B அதிகமாக உட்கொள்வதன் மூலம் அதிலும் குறிப்பாக சயனோகோபாலமீன் எனப்படும் உயிர்ச்சத்து B12 இனை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஓரளவு குறைத்துக் கொள்ளலாம். நான் முன்னரே குறிப்பிட்டதைப்போல நரம்புத் தொகுதியும் குருதிச் சுற்றோட்டத்தொகுதியும் இதிலே சம்பந்தப் பட்டிருப்பதனால் இவற்றின் மீதான பாதிப்பு சரியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். எனவே ஒரு வைத்தியரை அணுகி உரிய சோதனைகள் செய்து நீரிழிவின் பக்க விளைவுகளின் தாக்கம் அவற்றின் அளவு என்பவற்றையும் சரியாக நிர்ணயம் செய்த பின்பு சிகிச்சையையும் தொடருங்கள்.


**கேள்வி:** அனேகமாகப் பெண்கள் தலையிடி, அல்லது காய்ச்சல் போன்றவற்றிற்கு அடிக்கடி பனடோல் வில்லைகளைப் பயன்படுத்துகிறார்களே! இதனால் தீமைகள் ஏதும் உண்டா?

**பதில்:** காய்ச்சல், தலையிடி வரும்போது பனடோல் பாவிப்பதில் தவறில்லை. ஆனால் எடுத்ததற்கெல்லாம் பனடோல் பாவிப்பதுதான் தவறு. பனடோல் மாத்திரையில் உள்ள பொருள் பரசிற்றமோல் ஆகும். இது ஈரலிலேயே உடைக்கப்படுகிறது. (Mefaboliz cd) எனவே பரசிற்றமோல் (அல்லது பனடோல்) ஈரலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. பிறநாடுகளில் வைத்தியரின் சிட்டை இல்லாமல் இந்த மருந்தை வாங்க முடியாது. எமது நாட்டில் பெண்கள், சிறு குழந்தைகள் என எல்லோரும் தாராளமாக தேவைக்கு அதிகமாகவே பனடோலைப் பாவிக்கிறார்கள். தேவைக்கு அதிகமாக எடுத்ததற்கெல்லாம் பனடோல் பாவிப்பது நல்லதல்ல.



**கேள்வி:** தினமும் இரவில் இதரை வாழைப்பழம் ஒன்று உணவின் பின்பு உண்டுவருகிறேன். நீரிழிவு நோயும் உண்டு. இதனால் பாதிப்பு உண்டா?

**பதில்:** ஒருநாளைக்கு ஒரு பழம் என்பதில் அதிகம் பாதிப்பில்லை. இதனை நான் கூறுவதை வைத்துக் கொண்டு இதரை வாழை நல்லது என்று பிரசாரம் செய்து விடாதீர்கள். நீரிழிவு நோய் உள்ளவர்கள் சீனிச்சத்துள்ள எதையுமே உட்கொள்வது நல்லதல்ல. எனவே குருதியில் குளுக்கோசின் அளவை அடிக்கடி சோதித்து கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ளுங்கள். குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்படுத்த முடியாவிட்டால் நீங்கள் முதலில் நிறுத்த வேண்டியது வாழைப்பழத்தைத்தான்.



**கேள்வி:** முன்னர் காயங்களுக்குச் சிறந்ததாகக் கருதப்பட்ட சிக்காட்ரின் பவுடர் (CICATRIN) அல்லது எனிய நுண்ணுயிர் கொல்லிப் பொடிகளை காயங்களுக்குப் பயன்படுத்துவது கூடாது என சில வைத்தியர்களினால் தெரிவிக்கப்படுகின்றதே! அது உண்மையா? ஏன்?

**பதில்:** காயங்கள் உடலில் ஏற்பட்டால் அந்தக் காயங்கள் மீது கிருமித் தொற்று ஏற்படாமல் (Intection) பாதுகாத்தாலே போதுமானது. உடலானது தானாகவே காயத்தை ஆற்றிக் கொள்ளக் கூடியது. (Primary Union or Healling) சில வேளைகளில் தொற்று தவிர்க்க முடியாத சூழல் இருந்தால் Diabetic Wouncls, Vacicos ulcrs போன்ற நிலைமைகளில் புண்களின் மேல் மேலதிக சேர்வைகள் இடப்படுகின்றன. ஆனால் இதனை சரிவரப் புரிந்து கொள்ளாமல் தூய்மையான (Clean) காயங்களுக்கும் சேர்வையிடும் வழக்கம் பிழையாக கடைப்பிடிக்கப் படுகிறது. எனவேதான் சேர்வைகள் எதனையும் நோயாளர்கள் தாமாகவே காயங்கள் மேல் தடவுவதை தவிர்க்குமாறு ஆலோசனை கூறப்படுகிறது.

**கேள்வி:** சாதாரண மனிதன் ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் சிறுநீர்கழித்தல் வேண்டும்?

**பதில்:** உடலில் இருந்து நீர் இழக்கப்படும் பொறிமுறைகளுள் சிறுநீர் கழித்தலும் ஒன்று. ஏனைய வழிகளாக வியர்த்தல் ஆவியாதல் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றில் நீர் இழப்போடு கொண்டச் சீராக்கம் மற்றும் கழிவகற்றல் என்பனவும் சிறுநீர், வியர்வை என்பவற்றின் ஊடாக நடை பெறுகிறது. எனவே நீங்கள் குடிக்கும் நீரின் அளவு கூடும்போது அல்லது குளிர் அல்லது மப்பு மந்தாரமான நாட்களில் (வியர்வை குறைவதால்) சிறு நீரின் அளவு கூடுதலாக காணப்படும். சுமாராக 4-5 தடவை சிறுநீர் கழிப்பது என்பது சாதாரண விடயம் தான். ஆனாலும் சந்தேகம் இருந்தால் சிறுநீரை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

> **இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குவோர் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.**
>
> **இலவச மருத்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
> 361,கஸ்தூரியார் வீதி,
> யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி,
> 145,ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
> கொழும்பு 14.

# குறை பிரசவத்தில் பிறக்கும் குழந்தைக்கு மன அழுத்தம்!

குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே குறை பிரசவத்தில் பிறக்கும் குழந் தைகளுக்கு மன அழுத்தப் பாதிப்பு அதிகம் உள்ளது என்று பச்சிளம் குழந்தைகள் குறித்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. வொஷிங்டன் பல்கலைக்கழக பச்சிளம் குழந்தைகள் பிரிவு ஆராய்ச்சி யாளர்கள் நடத்திய ஆய்வு முடிவுகள் விவரம்: பிரசவ காலத்துக்கு முன்னரே குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு மன அழுத்த பாதிப்பு, மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடும் போது மிக அதிகமாக உள்ளது. இத்தகைய குழந்தைகள் பிறந்தவுடன் தனி கவனம் செலுத்தப்பட்டு இன்கு பேட்டர் உள்ளிட்ட சாதனங்களின் உதவியுடன் பேணப்படுகிறது.

இது, 'நியோ நேட்டல் இன்டன்சிவ் கேர்' (என்ஐசியு) எனப்படுகிறது. குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவே இருக்கிறது. இதனால் அவர்களுக்கு மன அழுத்தப் பாதிப்பு அதிகமாகிறது. குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் உடலின் வெப்பநிலை குறைதல் அல்லது மாறுபடுதல், ரத்த சர்க்கரை அளவில் அடிக்கடி மாற்றம், தொற்று நோய் பாதிப்பு, உடலில் ஆக்ஸிஜன் குறைபாடு உள்ளிட்ட பிரச்னைகளும் இருக்கின்றன.



போதிய ஆக்ஸிஜன் மூளைக்கு கிடைக்காவிட்டால் அதன் திசுக்கள் மற்றும் புதிய செல் வளர்ச்சி பாதிக்கப்படும். இது மூளையின் ஒட்டுமொத்த செயல்பாட்டை பாதிக்கும். இதுவே மன அழுத்த பாதிப்புக்கு காரணமாகிறது. கர்ப்ப காலத்தில் உரிய மருத்துவ அறிவுரை மற்றும் சிகிச்சையால் கர்ப்பிணிகள் குறை பிரசவத்தை தவிர்க்க முடியும். குழந்தைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு இத்தகைய நடவடிக்கைகளில் கர்ப்பிணிகள் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இவ்வாறு அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாம் உண்ணும் உணவில் உண்டு மருத்துவம்

நாம் சாதாரணமாக சாப்பிடும் எத்தனையோ உணவுப் பொருட்களில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. அவற்றை அறிந்து தேவைக்கேற்ப சாப்பிட்டால் உணவே மருந்தாகும்.

வெள்ளரிப் பிஞ்சில் எந்த வைட்டமின்களும் இல்லைதான். ஆனால் இதைச் சாப்பிடுகிறபோது இரைப்பையில் மிதமிஞ்சிய ரசம் உற்பத்தியாகிறது. இது ஜீரணத்தைத் தூண்டுகிறது.



சமையலில் பிரதானமாக உபயோகிக்கப்படும் வெங்காயம் ஒரு அரு மருந்து. பச்சை வெங்காயம் சாப்பிட்டு வந்தால் ரத்த ஓட்டம் சீராகும். வழக்கமாக வெங்காயத்தை உணவில் சேர்த்து வந்தால் மூப்பு வராது நரம்பு நோய்களை தாக்காமல் தடுக்கும்.

வாழைப்பழங்களில் சோடியம், கால்சியம், பொட்டாசியம் போன்ற பல கனிம சத்துகள் உள்ளன. ஒரு நாளைக்கு இரண்டு வாழைப்பழங்கள் வீதம் சாப்பிட்டு வந்தால் இதய அழுத்தம் ஏறாமல் சீராக இருக்குமாறு பார்த்துக்கொள்ளலாம்.

கறிவேப்பிலையில் இரும்புச்சத்து அதிகமாக இருப்பதால் இதைப் பச்சையாகவே சாப்பிடலாம். அது ரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. பசியைத் தூண்டிவிடுகிறது. வயிற்று இரைச்சலையும் குறைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே அதி உன்னதமான இசை சிறு குழந்தையின் மழலை மொழியே.

ப.இளங்கோ
பளை.



**கேள்வி:** கேள்விகளுக்கு நீர் தரும் பதில்களை வாசிப்போர் உம்மை ரசிப்பரா விமர்சிக்கிறார்களா?

**பதில்:** உண்மையைச் சொன்னால் எதற்காகக் கோபப்பட வேண்டும். 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்று முதுமொழி உண்டல்லவா?

மா.ரூபி,
வவுனியா.

**கேள்வி:** இளவயதில் காதல் வசப்படுவோர் காதலை உயிரிலும் மேலாகக் கருதுவது குறித்து நீர் என்ன சொல்கிறீர்?

**பதில்:** பின்னரொரு சமயம் போயும் போயும் இதற்காகத்தானா இந்தப் பாடுபட்டோம் எனச் சலித்துக் கொள்பவர்களும் அவர்கள் தானே?.

ப.அரியநாயகம்,
பரந்தன்.




**கேள்வி:** பித்தரே, மனைவியைக் கடைசிவரை கண்கலங்காமல் வைத்திருக்க வழியென்ன?

**பதில்:** நீர் மற்றப் பெண்களைக் கண்டு மனங்கலங்காமல் இருந்தால் போதும். உமது மனைவி ஒருபோதும் கண்கலங்காமல் மகிழ்ச்சியுடன் இருப்பாள்

க.தியாகராசா,
மட்டுவில்.

**கேள்வி:** ஒரு இளம் ஆணும் இளம் பெண்ணொருத்தியும் நண்பர்களாகப் பழகலாமா?




**பதில்:** இளவயது ஆணோ பெண்ணோ தமது எதிர்ப்பாலாருடன் நண்பர்களாகப் பழகுவது பாசி நிலத்திலும் சேற்றிலும் நடப்பது போன்ற ஆபத்தானது. எந்த நேரத்திலும் சறுக்கி விழ நேரலாம்.

ச.ஓங்காரமூர்த்தி,
கல்முனை.

**கேள்வி:** நீதி நூல்கள் நாம் எப்படி வாழ வேண்டும் எனபதைப் போதிக்கும் வழிகாட்டிகள் தானா?

**பதில்:** அவை வெறும் வழிகாட்டிகள் தான். ஆனால் அவற்றின் வழி வாழ்வதும், வாழாது விடுவதும் எம்மைப் பொறுத்தது.

த.தேன்மொழி,
கிளிநொச்சி.




**கேள்வி:** உலகிலேயே அதி உன்னதமான இசை என்னவோ?

**பதில்:** வேறென்ன, சிறுகுழந்தையின் மழலை மொழிதான்.

எஸ்.அமுதா, கண்டி.

**கேள்வி:** பித்தரே, மினி பஸ்ஸில் பயணிக்கும் போது சில இளைஞர்கள் பெண்கள் மீது வேண்டுமென்றே இடிபடுகிறார்களே? இவர்களை என்ன செய்யலாம்?



**பதில்:** பதிலுக்கு நீங்கள் அடியாளாக மாறினால்தான் இவர்களைத் திருத்தலாம்.

செ.உதயகுமார், பேசாலை.

**கேள்வி:** பெண்களின் மன ஆழத்தை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் பித்தரே?

**பதில்:** அது நரிவாலைக் கொண்டு நடுக்கடலின் ஆழத்தை அறிந்து கொள்ள முயல்வது போன்றது. எவராலும் அதனைப் பூரணமாக அறிந்திட இயலாது என்பதே உண்மை.

ந.தில்லைநடராசா, செங்கலடி.

**கேள்வி:** துயரத்துக்கு மருந்தென்ன பித்தரே?


**பதில்:** எப்போதும் உற்சாகத்தோடு, சிரித்து வாழ முயன்றால் துயரத்தை ஒரு அளவுக்குப் போக்கிக் கொள்ள இயலும் உற்சாகமும் சிரிப்பும் ஒருபோதும் மருத்துவர்களால் போத்தலில் அடைத்துத்தர இயலாத மருந்துகள்.



## பித்தன் பதில்கள்

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 491



அனுப்புபவர் பெயர்:..............................
விலாசம்:..............................
..............................
கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

01. சதிபதி.
02. பறக்கும் வாகனம்.
03. நாள்.
04. பொன்.
05. ஒரு நட்சத்திரம்.
06. யானையின் அங்கம்.
09. ஒரு திசை
12. தொடக்கம்/ மூலம்.
13. மனை.
14. புன்னகைக்கும்.
15. வெற்றிலையுடன் சேர்த்துச் சாப்பிடுவது.
16. யானையை வழிநடத்துவோர்.

### இடமிருந்து வலம்

01. ஒவ்வொருவருக்கும் என எழுதப்பட்டது.
04. தங்களுடையது.
07. மானத்துக்குக் கேடு ஏற்படுத்தல்.
08. காற்று மண்டலம்.
10. உலோகத்தால் ஆனது.
11. உறுதியானது.
12. இணங்கச் சொல்.
13. தெரு.
14. ஆபரணம்.
15. வேறுபாடு காட்டுதல்.
17. குழம்பு நிலை.
18. வாசனைத் திரவியம்.
20. மழைக்காலம் முடிய இது இங்கு தொடங்கும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 491

*சொற்சிலம்பம் 491 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2011 ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 06.11.2011 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக்குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

அனுப்பவேண்டிய முகவரி:
**சுடர் ஒளி பாராந். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 488 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** க.கயல்வேந்தன், சாஸ்திரியார் வீதி, கருவில், களுவாஞ்சிக்குடி.

**2 ஆம் பரிசு** மு.மகேஸ்வரி, [illegible] துன்பனை, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** கனகசபை நாகேந்திரன், இல.11-3/1, [illegible], வெள்ளவத்தை, கொழும்பு-06.

## சொற்சிலம்பம் போட்டி இல.488 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.சுபாவம் 02.வாக்கு 03.சகிப்பு 05.முதுகு 09.புத்தன் 11.திராவிடம் 13.திரை 14.மாதவன் 16.கட்டம் 17.ஆகுதி 18.வலை 19.குண்டு 21.பன்.

### இடமிருந்து வலம்

01.சுவாசம் 04.கழுகு 06.பாக்கி 07.பத்து 08.வகுப்பு 10.தகுதி 12.புத்திரி 15.தரை 16.கவி 17.ஆதவன் 19.குட்ட 20.குவளை 21.பண்டம் 22.தின். 23.வேண்டுபர்

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி. செ.பாக்கியநாதன், நூலகர், பொது நூலகம், கூமாங்குளம்.
(2) பா.பிரியதர்ஷினி, 415/2, பேர்கஸன் வீதி, கொழும்பு- 15.
(3) ஆ.ஜெயச்சந்திரன், இல304. பாங்ஷால் வீதி, குருநகர்- யாழ்ப்பாணம்.
(4) ஆர்.யோகராஜா, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை
(5) திருமதி.எஸ்.ஞானம், இல.296, டைக் வீதி, திருகோணமலை.
(6) சந்திராணி தங்கத்துரை, வட்டவிதானை வீதி, பெரிய நீலாவணை 01A, கல்முனை.
(7) அ.சேரன், இல.9. வின்சென்ட் லேன், கொழும்பு.
(8) திருமதி.பா.இராஜேஸ்வரி, இல.18/5, குடியிருப்பு, வவுனியா.
(9) செ.சின்னத்துரை, இல.131,D-10, உருத்திரபுரம்.
(10) எஸ்.வரதராஜன், இல.25/3, மாரியம்மன் கோயில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்



## தூசிப்புயல்!


கூடல் நீர் ஆவியானவுடன் உப்பிலுள்ள வேதிப் பொருள்கள் காற்றில் கலக்கின்றன. இதனால் ஆண்டொன்றுக்கு இருநூறு கோடி டன் உப்பு வளி மண்டலத்தில் கலக்கிறது. பாலைவனம் போன்ற வறட்சிப் பகுதிகளில், 'தூசிப்புயலே' உண்டாகிறது. இதனால் வளிமண்டலத்தில் பல்லாயிரம் டன் தூசி கலக்கிறது. இது சுமார் 2,000 மைல்கள் வரை பரவும்.

1933-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளில் தென்மேற்குப் பகுதியில் உண்டான தூசிப்புயல், நியூ இங்கிலாந்தில் ஒரு சதுர மைல் பரப்பில் 25 டன் தூசி கலந்ததாம். சகாராப் பாலைவனத்துத் தூசி, தொலைவுகளைத் துச்சமாக்கி லண்டனில் போய் விழுந்ததாம். ஐக்கிய நாடுகளில் ஆண்டொன்றுக்கு நான்கு கோடி டன் தூசி படிகிறது.

சுரங்கங்கள், ஆலைகள் இவற்றால் உண்டாகும் கனிமத் தூசி பணியாளர்களின் நுரையீரல்களில் படிந்து, 'சிலிக்கொசிஸ்' என்னும் நோயை உண்டாக்குகிறது.

மூடுபனியுடன் தூசி கலந்தால் புகைப்பனி மூடாக்கை உண்டாக்கும். இது பல நாட்கள் நீடித்தால், நுரையீரல் கோளாறு ஏற்படும். 1952 ஆம் ஆண்டில், லண்டனில் 6 நாட்கள் தொடர்ந்து காணப்பட்ட புகைப்பனி மூடாக்கால் 4000 பேர் இறந்தனர்.

தூசியை, 'மைக்ரான்' என்ற அளவில் அளக்கின்றனர். 1 அங்குல வளிமண்டலக் காற்றில் 25,400 மைக்ரான் அளவு தூசித் துகள்கள் காணப்படுகின்றன.



## தூசியின் மறுபக்கம்!



நீல வானின் நிறம், வெண்பனி, மழை, புவி வெப்பநிலைச் சீராக்கல் ஆகிய இயற்கை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற தூசியே துணை புரிகிறது. தூசியின் சேவையும் தேவைதான்.

சூரிய ஒளி வானவில்லின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டது. சூரிய ஒளி வளிமண்டலத்தில் தூசி, ஈரப்பசை இவற்றின் வழியே ஊடுறுவும்போது சிவப்பு ஒளி அலையை விட கருநீலம், ஊதா, ஒளி அலைகள் அதிகமாகப் பரவும்.

அவற்றுள் நம் கண்கள் கருநீல நிறத்தை விட ஊதா நிறத்தை மிக எளிதாகக் காண்பதால் கண்ணுக்கு குளிர்ச்சியாக வானம் நெஞ்சை விட்டு நீங்காத நீல நிறத்தில் காட்சி அளிக்கிறது. இவ்வாறே சூரிய அஸ்தமன மானவுடன் 1-2 மணி நேரத்திற்கு தூசி சூரிய ஒளியைப் புவியில் நிலவச் செய்கிறது.

மழை உண்டாக தூசி முக்கிய காரணமாகிறது. வளி மண்டலம் குளிர்ச்சியடைந்தால் தூசித் துகள்களைச் சுற்றி, நீராவி சூழ்ந்து மழைத்துளியாக மாறுகிறது. சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா? ஒரு பெரிய மழைத்துளியை உண்டாக்க ஒரு லட்சம் நீர்த்துளிகள் ஒன்றாகின்றன.

மேலும், தூசி புவியின் தட்பவெப்ப நிலையைச் சீராக்கப் பயன்படுகிறது. 'கிரகா டாங்' என்ற இடத்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் வளி மண்டலத்தில் மிகுந்த அளவு தூசி கலந்தது. இதனால் புவியின் வெப்பநிலை பல டிகிரி அதிகமானது. இவ்வுயர் வெப்ப நிலை தூசி குறைந்து சமநிலையை ஏற்படுத்தியது.

சுற்றுச்சூழல் சீர்கேட்டில் பெரும்பங்கு வகிக்கும் தூசியே உலகில் இல்லாவிட்டால் என்ன ஆகும்? சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

மனித வாழ்வில் மட்டுமின்றிப் பிற உயிரினங்களின் வாழ்விலும் ஒன்றாகிவிட்ட தூசி நன்மை, தீமை இரண்டையும் உண்டாக்கும் இயல்பை ஒருங்கே பெற்றுள்ளமை, வியக்கத்தக்கதே!

***

இரண்டு படத்திலும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன.

**கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்**






**முயற்சியுங்கள்**

வட்டத்திலுள்ள எழுத்துக்களை அம்புக்குறியின் உதவியுடன் எழுதினால் சுவையான ஒரு பழத்தின் பெயர் கிடைக்கும். முயற்சி செய்யுங்கள்.

## கண் நிறைந்த அழகு!

ஒரு வியாபாரிக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். ஐவரும் பெண் பிள்ளைகள். வியாபாரியும் நன்கு சம்பாதிப்பவர். ஆகை யால், தன் பிள்ளைகளுக்கு எந்தக் குறையும் இல் லாமல் வளர்த்து வந்தார்.

அவர்கள் விரும்பிக் கேட்ப தைத் தட்டாமல் வாங் கிக் கொடுப்பர் பெற்றோர். சகோதரிகளில் இளையவள் மட்டும் சற்று நிறம் மங்கி, கருப்பாக, அழகில்லாதவள் போல் தோன்றுவாள். மற்ற மூத்த நான்கு சகோதரிகளும் நல்ல சிவப்புடன் அழகாக இருப்பர்.

இது இவர்களுக்கு மன தில் கர்வத்தை வளர்த்தது. இவர்கள் எப்போதும் தங் களை சிங்காரித்துக் கொண்டு, கண்ணாடி முன் நிற்பதே வழக்கமாகி விட் டது. தப்பித் தவறி தன்னை அழகுப்படுத்திக் கொள்ள இளையவள் கண்ணாடி முன் நின்று விட்டால், மூத்த சகோத ரிகள் ரசனையில்லாத வார்த்தைகளால் விமர் சனம் செய்ய ஆரம்பித்து விடுவர்.

இதனால் இளையவள் தனக்குள் அழுது வேதனைப்படுவாள். இளையவள், மூத்தவர் களைக் காட்டிலும் இரக்க சிந்தனையும், உத வும் மனப்பான்மையும் கொண்டவள். மூத்த பெண்களின் குணம், இளையவளுக்கு நேர் எதி ரானது. தங்கள் அழகில் கர்வம் கொண்டு, வேறு எவரையும் மதிக்கவும் மாட்டார்கள். எனவே, மற்ற வர்களிடமும் அவர்க ளுக்கு நல்ல பெயரே இல்லை.

ஏழைக்கு அன்பு காட்டும் இளையவளை தர்ம தேவதை என்று தான் போற்றுவர் மக்கள். இவ்வளவு ஈகைக் குணம், சிறந்த பண்புகள் இருந்தும் புற அழகு போதவில்லையே... அதனால் தானே சகோதரிகள் தம்மை வெறுக்கின்றனர் என நினைத்து வேதனைப்படுவாள்.

இளையவளின் வேத னையைப் பெற்றோர் நன்கு புரிந்து கொண்ட னர்.

ஒருநாள் இளையவளை



அவர்கள் அழைத்து, "நிலா இப்படி உட் கார்!" என்றனர்.

அவளும் பெற்றோரிடம் ஆசையுடன் அமர்ந்தாள். "உன் மூத்த சகோதரிகள் உன்னை மதிக்கவில்லை என்பது எங்களுக்கு தெரியும்; அதற்காகக் கவலைப்படாதே. புற அமகைக் காட்டிலும், உன் மன அழகுதான் மிகவும் அற்புதமானது.

"அதுதான் அனைவரையும் கவரும் காந்தம் போன்றது. எக் காலமும் உன் அழகுதான் வள ரும், நிரந்தரமாயும் இருக்கும். இவர்களின் வெளித்தோற்ற அழகு, காலப்போக்கில் மாறிவி டும். அதை உணர்ந்து கொள் போதும்!" என ஆறுதல் கூறினர். மன நிம்மதி அடைந்தாள் நிலா

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டீவ் ஜாப்ஸ்: ஒரு கண்டுபிடிப்பாளரின் மறைவு!



ஐடி எனப்படும் தகவல் தொழில்நுட்ப உலகில் ஜனனங்கள், மரணங்கள், மனித இச்சைகள் எல்லாமே மரத்துப் போன சமாச்சாரங்கள் என்பது ஒரு பொதுவான நினைப்பு. ஆனால் முதல்முறையாக அந்த நினைப்பை பொய் யாக்கியிருக்கிறது ஒருவரின் மரணம். அவர் ஸ்டீவ் ஜாப்ஸ்!

சொஃப்ட்வேர் நிபுணன் தொடங்கி சாமானியன் வரை ஸ்டீவ் ஜாப்ஸ் மரணத்துக்காக ஒரு நிமிடம் இரங்கல் தெரிவிப்பதைப் பார்க்க முடிகிறது. தொழில்நுட்பத் துறையிலிருந்த ஒருவருக்கு இத்தனை லட்சம் பேர் மனமாற அஞ்சலி செலுத்தியது அநேகமாக இதுதான் முதல்முறையாக இருக்கும். காரணம் ஸ்டீவ் ஜாப்ஸின் பிரமிக்க வைக்கும் உழைப்பும் அவர் தந்த சாதனங்கள் இன்றைய மனிதனின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்டதும்தான். அதுவும் எப்படிப்பட்ட நிலையில் அவர் உழைத்தார் தெரியுமா? புற்றுநோய் தன்னைத் தின்று கொண்டிருப்பதும், இனி இருக்கும் நாட்கள் மிகக் குறைவுதான் என ஆயுள் ரேகையின் முடிவு தெரிந்த நிலை யிலும் அவர் முன்னிலும் வேகத்தோடு தன் சாதனைகளை உலகில் பதிவு செய்ய விரும்பினார். ஐஃபோனையும் ஐபேடையும் அதற்குப் பிறகுதான் ஸ்டீவ் வெளியிட்டார். நோயின் பிடியில் முற்றாக அவர் சிக்கிக்கொண்ட போது, அப்பிள் நிறுவனம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்திருந்தது. கல்லீ ரல் மாற்று அறுவை செய்து கொண்டு அல்லது திடீர் விடுமுறையில் சில காலம் இரகசிய இடத்தில் இருந்து நோயின் தீவிரத்தை சற்றே குறைத்துக் கொண்டு மீண்டும் வந்து உழைத்தார். அதுதான் அவர் மீது உலக மக்களுக்கு தனி ஈர்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

1955 பிப்ரவரி 24ல் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் பிறந்த ஸ்டீவ் ஜாப்ஸ், ஒரு தத்துப் பிள்ளை. அதுவும் பிறந்த ஒருவாரத்திலேயே ஒரு தம்பதியரால் தத்தெடுக்கப்பட்டவர். புத்த மதத்தைச் சேர்ந்த ஸ்டீவ் தனது கல்லூரிப் படிப்பை பாதியிலே விட்டுவிட்டார். தன்னுடைய பள்ளி நண்பரான ஸ்டீவ் வோஸ்னியாக்குடன் இணைந்து 1976ல் அப்பிள் நிறுவனத்தை நிறுவினார். இந்த நிறுவனத்தை தொடங்கியபோது ஸ்டீவ் ஜாப்ஸ்க்கு வயது 21; அவரது சகாவான வோஸ்னியாக்கின் வயது 26. பின்னர் 1980 ஆம் ஆண்டு இருவரும் இணைந்து அப்பிள் கம்ப்யூட்டரை உருவாக்கி வெளியிட்டனர். இந்த மேக் கணினிகள் (Macintosh Computers) பிரபலம் அடைந்தாலும், வர்த்தக ரீதியில் பெரிதாகப் போகவில்லை. தொடர்ந்து தொழில் கூட்டாளிகளுடன் கருத்து வேறுபாடு. தன்னை வெளியேற்ற நடக்கும் முயற்சிகளை அறிந்து, இயக்குநர் குழுவுடன் மோதி, பின் தானாகவே அப்பிளிலிருந்து வெளியேறினார் ஸ்டீவ். வெளியில் வந்த கையோடு நெக்ஸ்ட் (NeXT) எனும் கம்ப்யூட்டர் ப்ளாட்பார்ம் நிறுவனத்தைத் தொடங்கினார். இது உயர்கல்வித் துறைக்கென வடிவமைக்கப்பட்டது. பின்னாளில் முதல் வழங்கியை (server) இணைய உலகுக்கு அளித்ததும் இந்த நிறுவனம்தான். இந்த நிறுவனத்தை 1996ல் அப்பிள் நிறுவனம் வாங்கியது. அப்போது மீண்டும், தான் உருவாக்கிய ஆப்பிள் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார் ஸ்டீவ். அன்றிலிருந்து அவர் உருவாக்கிய அனைத்துமே வணிக ரீதியாக பெரும் வெற்றியைப் பெற்றன. அவர் தொட்ட தெல்லாம் டொலர் மழையாய்க் கொட்டியது. 1997ல் புதுவகை மெக்கின்டோஷ் கம்ப்யூட்டர்களை விற்பனைக்குக் கொண்டு வந்தார். 2000ல் அதன் வசதி கூட்டப்பட்ட மொடல்களை புழக்கத்தில் விட்டார். மீடியா உலகில் மிகவும் வசதியான கம்ப்யூட்டராக மேக் மாறிப் போனது. 2002ல் ஐபாட் ஐ அறிமுகப் படுத்தி இசையுலக தொழில் நுட்பத்தில் பெரும் புரட்சியே உருவாகக் காரணமாக இருந்தார். பின்னர் ஐடியூன்ஸ் ஸ்டோரை உருவாக்கினார். இன்றைக்கு 20 கோடிக்கு மேல் இதன் பயனாளர்கள். 2007ல் செல்போன் உலகில் நுழைந்த அப்பிள், புயல் வேகத்தில் முன்னேறியது. உலகின் மிக விருப்பமான மொபைல் போனாக ஐபோன் (iPhone) மாறியது. பல பதிப்புகளைக் கண்டது. அடுத்து ஸ்மார்ட் போன் சந்தையிலும் அப்பிள் நிறுவனம் கால்பதித்தது. முழு கம்ப்யூட்டர் பயன்பாட்டையும் கையடக்க வடிவில் கொண்டு வரும் வகையில் இவர் உருவாக்கிய ஐ பேட் வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம், ஐடி உலகில் புதிய வரலாற்றைப் படைத்தது.

கடந்த ஆண்டு வரை பிரபலமாக இருந்த டேப்லட் பிசி என்ற கம்ப்யூட்டரை, ஐ பேட் பின்னுக்குத் தள்ளி, 2010 இறுதியில் ஒன்றரை கோடி விற்பனையானது. கடந்த ஆகஸ்ட் வரை அதன் தலைவராகவும் ஸ்டீவ் இருந்தார். ஸ்டீவ் ஜாப்ஸின் மரணச் செய்தி வெளியானதற்கு ஒரு நாள் முன்புதான், ஐஃபோனின் லேட்டஸ்ட் வர்ஷனை வெளியிட்டது அப்பிள். ஸ்டீவ் ஜாப்ஸ் அறிமுகம் செய்த இந்த கம்ப்யூட்டர் மற்றும் மொபைல் சாதனங்கள் அனைத்துமே, அனைவராலும் பயன் படுத்தக்கூடியவையாக இருந்தன. 56 வயதில் இந்த சாதனையாளர் மறைந்ததை, ஒரு தொழிலதிபரின் அல்லது வர்த்தகரின் மரணமாகப் பார்க்காமல், உலக சமூகம் ஒரு கண்டுபிடிப்பாளரை இழந்ததாகப் பார்க்கிறார்கள். மரணம் வரை ஆண்டுக்கு வெறும் 1 டொலர் மட்டுமே சம்பளமாக பெற்று வந்தார் ஸ்டீவ். ஆனால் அவருக்கு அப்பிள் நிறுவனத்தில் மட்டும் 5.426 மில்லியன் பங்குகளையும், டிஸ்னியில் 138 மில்லியன் பங்குகளையும் வைத்திருந்தார்.

கூகுளுக்கும் ஆப்பிளுக்கும் கடும் வர்த்தகப் போர் நடந்தாலும், சில மாதங்களுக்கு முன் கூகுளின் சி.இ.ஒ. வாக இருக்குமாறு இவரை கேட்டுக் கொண்டது நிர்வாகம். ஆனால், அதை நாசூக்காக மறுத்துவிட்டார் ஸ்டீவ். இதனை கூகுளின் இப்போதைய சி.இ.ஒ லாரி பேஜ் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல, ஸ்டீவ் மறைவுக்கு தனது முகப்புப் பக்கத்திலேயே இரங்கல் வெளியிட்டு கௌரவித்துள்ளது கூகுள். அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா, ஸ்டீவ் ஜாப்ஸ் நமது வாழ்க்கையை மாற்றியவர், ஒட்டுமொத்தமாக பல தொழில்களுக்கு புது அர்த்தம் தந்தவர். அவரது மரணம் குறித்து அவர் கண்டுபிடித்த கருவியிலேயே உலகில் பெரும்பாலோனோர் தெரிந்து கொண்டனர் என்பதைவிட அவருக்கு பெரிய அஞ்சலி எதுவும் இருக்க முடியாது, என்று தமது அஞ்சலியில் குறிப்பிட்டார். மைக்ரோசாப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ், பேஸ்புக் நிறுவுனர் மார்க் ஸுகர்பர்க் என போட்டியாளர்கள் பலரும் ஸ்டீவ் ஜாப்ஸுக்கு தங்கள் மனமார்ந்த அஞ்சலியைத் தெரிவித்துள்ளனர். உலகம் முழுவதும் ஏராளமான மக்கள் சமூக வலைத் தளங்களில் ஸ்டீவ் ஜாப்ஸுக்கு அஞ்சலி செலுத்தினர். ஸ்டீவ் அறிமுகப்படுத்திய சாதனங்களின் பயன்பாட்டு விளைவு இது. கடவுள் இன்னும் கொஞ்ச ஆண்டுகள் ஸ்டீவ் ஜாப்ஸுக்கு வேலை கொடுத்திருக்கலாம், அவசரப்பட்டுவிட்டார்!


TIEFSTE PREISE!

Möbel Ferrari

HINWIL

SOLANGE VORRAT!

190.-

statt 320.-

STRASS
schwarz/weiss 160x200
Nachttisch Fr. 75.--



SOLANGE VORRAT!

JET
weiss/schwarz
180x202x59



298.-

statt 550.-

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, ஒக்ரோபர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.